# அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2019

## மங்கள சமரவீர, பா.உ

## நிதி அமைச்சர்

## 2019 மார்ச்சு 05 ஆந் திகதி

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தின் கீழ் , அரசிறை உபாயக் கூற்று - 2019 (4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுக்கிணங்க ) வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2019 (7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கமைவாக கௌரவ நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**ISBN 978-955-0814-24-4**

கொழும்பு 08, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தையில், இல 118 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு இலங்கை, கொழும்பு 01, லோட்டஸ வீதியில் அமைந்துள்ள நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பிரதான பொருளாதார குறிகாட்டிகள் | vii |
| 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் | viii |
| **இணக்கப்பாடு – 2018** | |
| **பகுதி I** | |
| **அரசிறை மூலோபாயக் கூற்று – 2019** | |
| **1. நடுத்தரக் கால அரசிறை மூலோபாயம்** | |
| 1.1 நடுத்தரக் காலத்தில் அரசிறைக் கொள்கை | 3 |
| 1.2 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டதில் பரந்தளவிலான மூலோபாய முன்னுரிமைகள் | 4 |
| 1.3 சாத்தியமான இடர்வுகள், சவால்கள் மற்றும் அரசிறை நடவடிக்கைகள் | 5 |
| 1.4 நடுத்தக்கால அரசிறை இலக்குகள் | 7 |
| 1.5 நடுத்தக் கால பேரண்டப் பொருளாதார ஊகங்கள் | 8 |
| **பகுதி II** | |
| **வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2019** | |
| **1. அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதிளிப்பு** | |
| 1.1 மேன்நோக்கு | 15 |
| 1.2 அரசாங்க வருமானம் | 17 |
| 1.3 அரசாங்க செலவினம் | 34 |
| 1.4 திறைசேரி செயற்பாடுகள் | 37 |
| 1.5 வெளிநாட்டு நிதியளிப்பு | 38 |
| **2. பூகோள பொருளாதாரச் சூழல்** | |
| 2.1 மேன்நோக்கு | 49 |
| 2.2 பொருளாதார வளர்ச்சி | 49 |
| 2.3 நாணயத் துறை அபிவிருத்திகள் | 58 |
| 2.4 பங்குச் சந்தை | 60 |
| 2.5 வெளியகத் துறை அபிவிருத்திகள் | 60 |
| 2.6 உலக பொருளாதாரத்தின் முன்னோக்குகை | 64 |
| **3. அரச உடமை வியாபார தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை** | |
| 3.1 மேன்நோக்கு | 67 |
| 3.2 முக்கிய அரச உடமை வியாபார தொழில் முயற்சிகளின் சுருக்க மீளாய்வு | 67 |
| **4. 2019 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்** | |

## அட்டவணைகள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | | **பகுதி I** | |
| அட்டவணை | 1.1 | பிரதான அரசிறை இலக்குகள், நடுத்தரக் கால அரசிறை வேலைச் சட்டகம் | 4 |
| | | **பகுதி II** | |
| அட்டவணை | 1.1 | அரசிறைச் செயற்பாடுகளின் சுருக்கம் | 13 |
| அட்டவணை | 1.2 | மதிப்பிடப்பட்ட, உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2018 | 15 |
| அட்டவணை | 1.3 | அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் | 18 |
| அட்டவணை | 1.4 | வருமான வரி செயலாற்றுகை | 19 |
| அட்டவணை | 1.5 | பெ.சே.வரி செயலாற்றுகை | 19 |
| அட்டவணை | 1.6 | உற்பத்தி வரி செயலாற்றுகை | 20 |
| அட்டவணை | 1.7 | மோட்டார் வாகன இறக்குமதி, புதிய வாகனப் பதிவு | 21 |
| அட்டவணை | 1.8 | சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி | 21 |
| அட்டவணை | 1.9 | தே.க.வரி, முத்திரைத் தீர்வை மற்றும் மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணங்களின் செயலாற்றுகை | 22 |
| அட்டவணை | 1.10 | சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் | 23 |
| அட்டவணை | 1.11 | அரசாங்க வருமான வேறுபாடிற்கான பகுப்பாய்வு (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 23 |
| அட்டவணை | 1.12 | அரசாங்க செலவின செயலாற்றுகை | 34 |
| அட்டவணை | 1.13 | அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு 2017-2018 | 35 |
| அட்டவணை | 1.14 | நலனோம்பல் செலவினம் | 36 |
| அட்டவணை | 1.15 | அரசாங்க திறைசேரி காசுப் பாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று | 37 |
| அட்டவணை | 1.16 | சாதனங்கள் அடிப்படையில் மொத்த உள்நாட்டு பெறுகைகள் | 38 |
| அட்டவணை | 1.17 | நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புக்கள் - (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 40 |
| அட்டவணை | 1.18 | அபிவிருத்திப் பங்காளர்கள் மேற்கொண்ட நிதிப்பகிர்வுகள் (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 45 |
| அட்டவணை | 2.1 | மொ.உ.உற்பத்தியில் துறைரீதியான வகுதிகள் (2010 நிலையான விலைகள்) | 51 |
| அட்டவணை | 2.2 | சேவைத் துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள் | 55 |
| அட்டவணை | 2.3 | சுற்றுலாத் துறையின் செயலாற்றுகை | 56 |
| அட்டவணை | 2.4 | மொ.உ.உற்பத்தி வளர்ச்சியில் துறைரீதியான பகிர்வு | 57 |
| அட்டவணை | 2.5 | தலைக்குரிய பணவீக்கம், முக்கிய பணவீக்கம், உணவுப் பணவீக்கம் (அடிப்படை : 2013=100) | 59 |
| அட்டவணை | 2.6 | மூலதனச் சந்தை அசைவுகள் | 60 |
| அட்டவணை | 2.7 | வெளிநாட்டு வர்த்தகம் | 61 |
| அட்டவணை | 3.1 | மின்னுற்பத்தி கொள்ளளவு வகுதி | 70 |
| அட்டவணை | 3.2 | அரச உடமை வியாபார தொழில் முயற்சிகளின் இலாபத்தன்மை | 72 |
| அட்டவணை | 3.3 | அரச உடமை தொழில் முயற்சிகளின் அறவீடு/பங்கிலாப வருமானம் | 73 |

## வரைபுகள்


| | | பக்கம் |
|---|---|---|
| **பகுதி II** | | |
| வரைபு 1.1 | மொத்த வருமானத்தின் வகுதி (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 18 |
| வரைபு 1.2 | துறைரீதியாக மொத்த வருமானம் (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 18 |
| வரைபு 1.3 | உற்பத்தி வரியின் செயலாற்றுகை (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 20 |
| வரைபு 1.4 | சாதன அடிப்படையில் மொத்த தேறிய உள்நாட்டு பெறுகைகள் (2018 சனவரி – நவம்பர் வரையில) | 38 |
| வரைபு 1.5 | அபிவிருதத்திப் பங்காளர்களினால் உறுதியளிக்கப்பட்ட துறைரீதியான பகிர்வுகள் (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 39 |
| வரைபு 1.6 | ஒவ்வொரு துறைக்குமான பகிர்வுகள் (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 46 |
| வரைபு 1.7 | அபிவிருத்திப் பங்காளர்களினால் உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி (2018 நவம்பர் 30 வரையில்) (ஐ.அ.டொ.மில்) | 46 |
| வரைபு 2.1 | மொ.உ.உற்பத்தி வளர்ச்சி | 49 |
| வரைபு 2.2 | மொ.உ.உ வகுதி – முதல் மூன்று காலாண்டுகள் 2018 | 49 |
| வரைபு 2.3 | விவசாயத்துறை வகுதி – முதல் மூன்று காலாண்டுகள் 2018 | 50 |
| வரைபு 2.4 | கைத்தொழில் துறை வகுதி – முதல் மூன்று காலாண்டுகள் 2018 | 53 |
| வரைபு 2.5 | தயாரிப்புத்துறை வகுதி – முதல் மூன்று காலாண்டுகள் 2018 | 53 |
| வரைபு 2.6 | சேவைகள் துறை வகுதி – முதல் மூன்று காலாண்டுகள் 2018 | 54 |
| வரைபு 2.7 | வேலையின்மை | 57 |
| வரைபு 2.8 | நாணய சராசரி, தனியார் துறை கடன் வளர்ச்சி, விளைவு விகிதங்கள் | 58 |
| வரைபு 2.9 | தலைக்குரிய பணவீக்கம், முக்கிய பணவீக்கம், உணவுப் பணவீக்கம் (அடிப்படை : 2013ஸ்ரீ100) | 60 |
| வரைபு 2.10 | வர்த்தக மீதி, நாணயமாற்று வீத சராசரி அசைவுகள் | 62 |
| வரைபு 2.11 | ஏற்றுமதிகளின் வகுதி | 63 |
| வரைபு 2.12 | இறக்குமதிகளின் வகுதி | 63 |


## கட்டங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| கட்டம் 1 | பிரதான கொள்கை நடவடிக்கைகள் (2018 சனவரி – நவம்பர் வரையில்) | 23 |


## பின்னிணைப்பு


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **பின்னிணைப்பு** | I | வரவு செலவுத் திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள் கருத்திட்டத்தின் கீழ் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் (2018 சனவரி 01 முதல் நவம்பர் மாதம் வரையில்) | 81 |
| **பின்னிணைப்பு** | II | பொதுத் திறைசேரியினால் விநியோகிக்கப்பட்ட உத்தரவாதங்களின் விபரப் பட்டியல் - 2018 நவம்பர் 30 அன்றுள்ளவாறு | 101 |
| **பின்னிணைப்பு** | III | பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகள் | 103 |
| **பின்னிணைப்பு** | IV | வருமான மதிப்பீடுகளுக்கான ஊகங்கள் - 2019 | 111 |

## முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2017 | 2018 |
| **மெய்த்துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதல் மூன்று காலாண்டுகள் | % | 3.2 | 3.3 |
| விவசாயம் | முதல் மூன்று காலாண்டுகள் | % | (3.5) | 4.3 |
| கைத்தொழில் | முதல் மூன்று காலாண்டுகள் | % | 4.8 | 1.8 |
| சேவைகள் | முதல் மூன்று காலாண்டுகள் | % | 3.2 | 4.4 |
| பணவீக்கம்(புள்ளிக்குப் புள்ளி) | நவ இறுதி | % | 7.6 | 3.3 |
| பணவீக்கம் (சராசரி) - கொ.நு.வி.சு | நவ இறுதி | % | 6.4 | 4.6 |
| வேலையின்மை வீதம் | முதல் மூன்று காலாண்டுகள் | % | 4.2 | 4.1 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் | முதல் மூன்று காலாண்டுகள் | % | 53.6 | 51.8 |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன – நவ | ரூபா. பில். | (634) | (722) |
| மொத்த வருமானம் | சன – நவ | ரூபா. பில். | 1,657 | 1,770 |
| வரி வருமானம் | சன – நவ | ரூபா. பில். | 1,527 | 1,587 |
| வரியல்லாத வருமானம் | சன – நவ | ரூபா. பில்.. | 130 | 183 |
| மொத்த செலவினம் | சன – நவ | ரூபா. பில்.. | 2,293 | 2,500 |
| மீண்டெழும் செலவினம் | சன – நவ | ரூபா. பில். | 1,742 | 1,951 |
| பொது முதலீடு | சன – நவ | ரூபா. பில். | 561 | 569 |
| அரசாங்க படுகடன் | ஓகத் இறுதி | ரூபா. பில். | 10,304 | 11,667 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன – நவ | ஐ.அ.டொ.மில். | 10,341 | 10,856 |
| விவசாய ஏற்றுமதிகள் | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 2,548 | 2,363 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 7,746 | 8,445 |
| புடவை மற்றும் ஆடைகள் ஏற்றுமதி | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 4,562 | 4,824 |
| ஏனையவை | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 3,184 | 3,621 |
| இறக்குமதிகள் | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 18,931 | 20,498 |
| நுகர்வுப் பொருட்கள் | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 4,069 | 4,623 |
| இடைநிலைப் பொருட்கள் | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 10,242 | 11,505 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 2,776 | 3,637 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன – நவ | ஐ.அ.டொ.மில் | 4,476 | 4,296 |
| வர்த்தக மீதி | சன – நவ | ஐ.அ.டொ.மில் | (8,590) | (9,642) |
| சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை | சன – நவ | எண் | 1,871,871 | 2,080,627 |
| சுற்றுலாத்துறை சம்பாத்தியங்கள் | சன – நவ | ஐ.அ.டொ.மில். | 3,471 | 3,905 |
| வெளிநாட்டு தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் | சன – நவ | ஐ.அ.டொ.மில். | 6,493 | 6,431 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | சன – நவ | ஐ.அ.டொ.மில். | (1,552) | (880) |
| மொத்த சென்மதி நிலுவை | சன – நவ | ஐ.அ.டொ.மில். | 2,068 | (807) |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் | நவ இறுதி | ஐ.அ.டொ.மில். | 7,959 | 7,005 |
| நாணய மாற்று விகிதம் (இறுதி மாதம்) | நவ இறுதி | டொலார்/ ரூபா | 153.77 | 179.67 |
| நாணய மாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சனவ - நவ | டொலர் / ரூபா | 153.66 | 176.85 |
| **நாணயத்துறை** | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) | நவ இறுதி | % | 7.25 | 8.00 |
| நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) | நவ இறுதி | % | 8.75 | 9.00 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | நவ இறுதி | % | 7.50 | 6.00 |
| அடிப்படை கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி (AWPR) | நவ இறுதி | % | 11.40 | 12.12 |
| இலங்கையின் வங்கிகளுக்கிடையில் வழங்கல் விகிதம் (SLIBOR) (ஒரு மாதம்) | நவ இறுதி | % | 8.15 | 9.00 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (91 நாட்கள்) | நவ இறுதி | % | 8.20 | 10.01 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (364 நாட்கள்) | நவ இறுதி | % | 9.44 | 11.20 |
| பண வழங்கல் வளர்ச்சி ($M_{2b}$) | நவ 2017 / நவ 2018 | % | 17.9 | 13.9 |
| தனியார்த் துறைக் கடன் வளர்ச்சி | நவ 2017 / நவ 2018 | % | 15.3 | 16.2 |

## 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

| பிரிவு | தேவைப்பாடு | உள்ளடக்கங்கள் | இணக்கப்பாடுகள் |
|---|---|---|---|
| பிரிவு 4, 5 மற்றும் 6 | அரசிறை உபாயக் கூற்று சமர்ப்பிப்பு* | அரசின் அரசிறைக் கொள்கைகளின் பால் மக்கள் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்கு அரசிறை உபாயக் கூற்று மற்றும் அரசாங்கத்தின் அரசிறை உபாய மதிப்பீட்டுச் செயற்பாட்டு நியமங்களின் ஸ்தாபிப்பு | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 7, 8 மற்றும் 9 | அரசிறை உபாயக் கூற்று மற்றும் வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கான அரசிறை உபாயக் கூற்று மற்றும் வரவு செலவுத்திட்ட பொருளியல் மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை. | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. |
| பிரிவு 10, 11 மற்றும் 12 | நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளும்வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நிறைவேற்றுகையின் திகதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அல்லது யூன் மாதம் இறுதித் தினம் வருடாந்தம் வெளியடப்பட வேண்டியுள்ளதுடன் இத்திகதிகளில் எத்திகதி பிந்தியதாக இருந்தபோதும் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 13, 14 மற்றும் 15 | இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளக் கூடிய வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) | நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் பொது மக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 16,17,18 மற்றும் 19 | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு ** | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய தகவல்களைத் தருகின்றது. | பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்துவதாக அறிவித்த திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது. |

** நிதி அமைச்சரினால்*

*** நிதி அமைச்சின் செயலாளரினால்*

## இணக்கப்பாடுகள் - 2018

- **இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை – நிதி அமைச்சின் ஆண்டறிக்கை -2017**

  இவ்வறிக்கையானது 2017 ஆம் ஆண்டின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையினைக் குறிப்பிடுவதுடன், 2018 மே மாத இறுதியில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டு உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

- **அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை - 2018,** இவ்வறிக்கையானது 2018 ஆம் ஆண்டு யூன் மாதத்தின் இறுதியில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டதுடன், அதன் பின்னர் உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**இந்த அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2019 இல் அடங்கியுள்ள விடயம்**

- **நிதி அமைச்சின் அரசிறை உபாயக்கூற்று - 2019** முழுமையாக அரசிறைக் கொள்கையினை அமுல்படுத்துவதற்கு முக்கியமாகக் கருதப்படும் பிரதான அரசிறை அளவீடுகள் மற்றும் பரந்த உபாய முன்னுரிமைகள் குறிப்பிடப்பட்டு அரசாங்கத்தின் நடுத்தர கால அரசிறை உபாயம் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதி அமைச்சின் அரசிறை உபாயக் கூற்றானது, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

- **நிதி அமைச்சின் வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை – 2019 ,** அரசாங்கத்தின் வருமானம், செலவினம் மற்றும் அரச படுகடன்கள் முதலியவற்றுடன் தொடர்புடைய மதிப்பீடுகளுடன் அரசிறை உபாயத்திற்கேற்ப அரசாங்க அரசிறை செயலாற்றுகைகளை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ள நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் இவ்வறிக்கையானது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

# பகுதி I

## அரசிறை மூலோபாயக் கூற்று - 2019

### 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டது.

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ் அரசாங்கத்தின் அரசிறை உபாய அறிக்கையினை பொதுமக்களுக்கு சமர்ப்பிப்பதுடன் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் நிதி அமைச்சர் வேண்டப்பட்டதற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது, வரவு செலவுத்திட்டத்தை அடிப்படையாகக் கொள்ளப்பட்டதும் அரசாங்கம் உபாயமாக கடைபிடிக்க வேண்டிய முக்கிய விடயங்களையும், செயற்படுத்த வேண்டியுள்ள முழு மொத்த அரசிறை கொள்கையினையும் கவனத்திற் கொண்டும் குறிப்பீடு செய்யப்பட்ட பிரதான அரசிறை நடவடிக்கைகள் தொடர்பில் விரிந்த உபாய முன்னுரிமைகளையும் தெளிவுபடுத்துகின்றது.

# 01

# நடுத்தரக்கால அரசிறை மூலோபாயம்

## 1.1 நடுத்தரக் கால அரசிறைக் கொள்கை

அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயமானது அரசிறை முகாமைத்துவப் பொறுப்புச் சட்டத்திலுள்ள நியதிகளுக்கு அமைவாக அமையப்பெற்றுள்ளது. அதற்கமைய மேலே குறிப்பிடப்பட்ட அரசிறை முகாமைத்துவப் பொறுப்புச் சட்ட சூழலில் அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயத்தின் முன்னுரிமையளிக்க ப்பட்ட பிரதான விடயமாக நடுத்தர காலத்தில் அதிகரித்த வருமானத் திரட்சியினால் ஒத்துழைக்கப்பட்டு, நிலுவையிலுள்ள அரசாங்கப் படுகடன் மற்றும் அரசிறைப் பற்றாக்குறை என்பனவற்றினை நிலையாகக் குறைப்பதனைக் குறிப்பிடலாம். வரி அடிப்படையில் ஏற்பட்ட தேய்வே பல தசாப்தங்களாக ஒட்டுமொத்த அரசிறை மீதியில் தொடர்ந்த அரசிறைப் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. இதேவேளை, அரசிறை பற்றாக்குறையினை கட்டுப்படுத்த முடியுமான மட்டத்தில் பேணுவதற்காக அரசாங்க செலவினங்களும் ஒரு பக்கத்தில் சரி செய்யப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டில் வருமானத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசிறைத் திரட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திலிருந்து அரசாங்கத்தின் மொத்த வருமானமும் நிலையாக அதிகரித்துச் செல்லும் போக் கொன்றினைப் பிரதிபலித்துள்ளது. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டில் மொ.உ. உற்பத்தியில் 11.5 சதவீதமாகக் காணப்பட்ட அரசாங்க வருமானமானது, 2017 ஆம் ஆண்டில் மொ.உ .உற்பத்தியில் 13.8 சதவீதத்திற்கு அதிகரித் துள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் மொ.உ .உற்பத்தியில் 13.4 சதவீதத்திற்கும் 2019 ஆம் ஆண்டில் மொ.உ .உற்பத்தியில் 14.8 சதவீதத்திற்கும் அதிகரிக்கும் எனவும் மதிப்பிடப்படு கின்றது. அடுத்துவரும் ஆண்டு களிலும் அரசாங்க வருமானம் தொடர்ந்தும் அதிகரித்து 2022 ஆம் ஆண்டளவில் மொ.உ.உற்பத்தியில் 17.0 சதவீதத்திற்கு தொடர்ந்தும் அதிகரிக்கும். (அட்டவணை 1.1)

வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது நடுத்தர காலத்தில் நம்பகமான திரட்சிக்கான பாதையொன்றினை உறுதி செய்துள்ளது. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டில் மொ.உ. உற்பத்தியின் 5.7 சதவீதம் என உயர்ப் பதிவொன்றினைப் பதிவாக்கிய வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையானது, 2017 ஆம் ஆண்டில் 5.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் இது மொ.உ. உற்பத்தியில் 5.3 சதவீதத்திற்கு மேலும் குறைவடைந்து 2019 ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியில் 4.8 சதவீதத்திற்கு மேலும் குறைவடையு மெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையானது நடுத்தர காலத்தில் அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்கினுள் மொ.உ. உற்பத்தியில் 3.5 சதவீதத்தில் திரட்சியடையும். வரவு செலவுத்திட்ட பற்றாக் குறையில் ஏற்படும் இத்தகைய வீழ்ச்சியினை 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான மொ.உ .உற்பத்தியில் 78.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் மொ.உ .உற்பத்தியில் 77.6 சதவீதத்திற்கு அரசாங்க படுகடன் நிலுவை மீதியினை குறைக்கக் கூடியதாக இருந்தது. நடுத்தர காலத்தில் பற்றாக்குறையினை கட்டுப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட முன்னேற் பாட்டு நடவடிக்கை காரணமாக அரசாங்கத்தின் படுகடன் நிலுவையானது 2022 ஆம் ஆண்டளவில் மொ.உ .உற்பத்தியில் ஏறக்குறைய 72 சதவீதத்திற்கு மேலும் குறைவடையும். அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தின் பிரதான அம்சம் நடுத்தர காலத்தின் போது அரசாங்கத்தின் படுகடனை குறிப்பிட்டளவு குறைப்பதற்கு வசதியளிக்கின்ற ஆரம்ப மிகையினை நோக்கிய மிகக் கவனமாக தெளிவுபடுத்தப்பட்ட பாதையொன்றாகும் முனனேற் பாட்டுடன் முகாமை செய்யப்பட்ட அரசாங்க செலவினம் மற்றும் நிலையான வளர்ச்சியினை நோக்கிய அரசாங்க வருமானம் என்பனவற்றின் மூலம் ஒத்துழைக்கப்பட்டவாறு எதிர் காலத்தில் அரசாங்கம் கணிசமான மற்றும் நிலையான ஆரம்ப மிகையொன்றினை ஏற்படுத்துவதற்கு முடியுமாக இருக்கும். ஆரம்ப மீதியானது மொ.உ .உற்பத்தியில் 0.02 சதவீதத்தினைப் பதிவாக்கி ஒரு தசாப்தத்தின் பின்னர் 2017 இல் சாதகமான போக்கினை கொண்டிருந்ததுடன் 2018 இல் மொ.உ. உற்பத்தியில் 0.6 சதவீதமாக அதிகரிக்குமெனவும் 2019 இல் இது மொ.உ. உற்பத்தியில் மேலும் 0.9 சதவீதமாக அதிகரிக்குமெனவும் மதிப்பிடப் படுகின்றது.

ஆரம்ப மிகைக்கான அத்தகைய முன்னேற்ற கரமான பாதையானது பொருளா தாரத்தின் நீண்ட கால வளர்ச்சி வாய்ப்புக்களை நோக்கி உந்துகின்ற சமூக மற்றும் மூலதன வரவு செலவுத் திட்டங்கள் மீதான செலவினங்களை உள்ளடக்காமல் கவனமாக ஒழுங்குபடுத்தப்பட்ட மீண்டெழும் செலவினத்தின் மூலம் உறுதிபடுத்தப்படும். அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக போதுமான நிதியினை உறுதி செய்து கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளை மேம்படுத்துவதிலும் அரசாங்கம் தொடர்ந்தும் முதலீடுகளை தொடரவுள்ளது. அவ்வாறே, மீண்டெழும் செலவினமும் 2022 ஆம் ஆண்டளவில் 15.2 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் பேணப்படும் என்பதோடு, பொது முதலீடுகள் தற்போதைய மொ.உ. உற்பத்தி ஏறக்குறைய 4.4 சதவீதத்திலிருந்து 2022 ஆண்டளவில் மொ.உ. உற்பத்தியின் 5.3 சதவீதத்திற்கு அதிகரிக்கும்.

**அட்டவணை 1.1 | பிரதான அரசிறை இலக்குகள் - நடுத்தரக் கால அரசிறை வேலைச் சட்டகம்**

*மொ.உ.உ சதவீதத்தில்*

| குறிகாட்டி | 2017 | 2018 தற்கா | 2019 மதிப் | எதிரவுகூறல்கள் 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியம்** | **13.8** | **13.5** | **14.8** | **15.5** | **16.8** | **17.0** |
| **மொத்த வருமானம்** | **13.8** | **13.4** | **14.8** | **15.5** | **16.8** | **17.0** |
| **வரி வருமானம்** | **12.6** | **11.9** | **13.1** | **13.7** | **14.8** | **15.0** |
| வருமான வரி | 2.1 | 2.2 | 2.4 | 2.6 | 3.2 | 3.3 |
| பொருட்கள் மறற்றும் சேவைகள் மீதானவரிகள் | 7.7 | 7.4 | 8.1 | 8.5 | 9.1 | 9.1 |
| வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் | 2.8 | 2.4 | 2.6 | 2.6 | 2.6 | 2.6 |
| **வரியல்லாத வருமானம்** | **1.2** | **1.4** | **1.7** | **1.8** | **1.9** | **2.0** |
| **மானியங்கள்** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** |
| **மொத்த செலவினம்** | **19.4** | **18.8** | **19.7** | **19.9** | **20.3** | **20.5** |
| **மீண்டெழும் செலவினம்** | **14.5** | **14.6** | **14.5** | **14.8** | **15.1** | **15.2** |
| சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 4.4 | 4.4 | 4.2 | 4.3 | 4.4 | 4.4 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் | 1.1 | 1.0 | 1.2 | 1.2 | 1.2 | 1.2 |
| வட்டி | 5.5 | 5.9 | 5.8 | 5.9 | 6.0 | 6.0 |
| உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் | 3.4 | 3.3 | 3.3 | 3.4 | 3.6 | 3.6 |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள்** | **4.9** | **4.2** | **5.2** | **5.2** | **5.2** | **5.3** |
| பொது முதலீடுகள் | 4.9 | 4.4 | 5.3 | 5.3 | 5.3 | 5.3 |
| **நடைமுறைக் கணக்கு மீதி** | **(0.7)** | **(1.2)** | **0.3** | **0.9** | **1.7** | **1.8** |
| **ஆரம்ப மீதி** | **0.02** | **0.6** | **0.9** | **1.7** | **2.5** | **2.5** |
| **வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை** | **(5.5)** | **(5.3)** | **(4.8)** | **(4.4)** | **(3.5)** | **(3.5)** |
| **பற்றுாக்குறை நிதியளிப்பு** | **5.5** | **5.3** | **4.8** | **4.2** | **3.5** | **3.5** |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | **2.9** | **3.1** | **0.6** | **0.9** | **1.0** | **1.0** |
| உள்நாட்டு நிதியளிப்பு(தேறிய) | **2.6** | **2.2** | **4.2** | **3.3** | **2.5** | **2.5** |
| **மத்திய அரசாங்கத்தின் படுகடன் (மொ.உ.உ %)** | **77.6** | **83.6** | **79** | **77** | **75** | **72** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்*

*மூ.ஃ. 2018 திசெம்பர் இறுதியில் காணப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடுகள்*

### 1.2 2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் பரந்தளவிலான மூலோபாய முன்னுரிமைகள்

நடுத்தரக் காலத்தில் 2019 ஆம் அண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டமானது, 2018 ஆம் ஆண்டுக்காக தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட ‘‘நீல – பசுமைப் பொருளா தாரம்’’ என்ற வேலைச் சட்டகத்தினை அடிப்ப டையாகக் கொண்டமைந்திருக்கும். அடையாளங் காணப்பட்ட துறைகளில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அமுல்படுத் துவதன் மூலம் இலங்கைப் பொருளாதார ‘வளர்ச்சியின் ஊந்து சக்தியான’ தனியார்த் துறையினருக்கும் அரசாங்கம் தொடர்ந்தும் வசதிகளை வழங்கவுள்ளது. வெளிநாட்டு மூலதன பாய்ச்சல் மூலம் ஏற்றுமதிகளை மேம்படுத்தல் மற்றும் உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல் என்பன மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான அடிப்படையாகக் காணப்படுகிறது. நாட்டின் தாராளமயமாக்கல் செயற்பாடுகள் ஒரு பக்கம் தொடர்கையில், அரசாங்கம் மறுபக்கத்தில் உலக மயமாக்கலின் பின்னணியில் அமைந் துள்ள தீவிர பிரச்சினையாக மாறிவருகின்ற நுகர்வோர் உரிமைப் பாதுகாப்பின் மீதும் அதிக கரிசனைகாட்டுகிறது. மேலும் செலுமையினை நோக்கிய நாட்டின் இப்பயணத்தில் சுற்றுலாத் துறையினையும் தவிர்க்க முடியாத துறையாக அரசாங்கம் அங்கீகரிக்கின்றது அத்தகை பரந்தளவிலான வேலைச் சட்டகத்தினுள், 2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டமானது (அ) கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கிராம மற்றும் நகரங்களை துரிதமாக அபிவிருத்திச் செய்தல் (ஆ) ‘‘என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா’’ (Enterprise Sri Lanka) நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மூலதனங்களை திரட்டுவதற்காக தொழில் முயற்சியாளர்களுக்கு வசதியளித்தல் (இ) தனியார்த் துறையினருக்கு உத்வேகமளிக்கும் வகையில் கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளில் உட்கட்டமைப்பு தேவைப்பாடுகள் மீது முதலீடுகளை மேற்கொள்ளல் (ஈ) சமுர்த்தி மற்றும் ஏனைய பல்வேறுபட்ட மானிய நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் நலிவுற்ற மக்களைப் பாதுகாத்து வலுவூட்டுதல். உ) நாட்டின் அபிவிருத்தியானது நடுத்தரமானதும் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக் கூடிய தன்மையினைக் கொண்டிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தல் போன்ற பல்வேறுபட்ட பிரதான துறைகள் மீது அமைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டுக்காக மேலே குறிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்னுரிமைகள் சமூகத்திலுள்ள பல்தரப்பட்டவர்களினது தேவைகள் போதுமான

நிதி ஒதுக்கத்தின் மூலம் வினைத்திறனான முறையில் தீர்த்து வைக்கப்படும் என்பதனை உறுதிப்படுத்துகிறது. குறிப்பாக, ஓய்வூதியம் பெறுவோர் அரச பணி ஊழியர்கள், புலம் பெயர் தொழிலாளர்கள், தோட்டத் துறையினர், மாணவர்கள் மற்றும் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்தோர் அரசாங்கத்தின் மேற்குறித்த கொள்கை வகுப்பில் முன்னுரிமை பெறுவர். இதேவேளை, பாரியளவில் முக்கியத்துவத்தினைக் கவர்ந்திழுக்கும் சமூகப் பொருளாதார துறைகளான விவசாயம் (பண்ணை, பெருந்தோட்டம், மீன்பிடி) உயர்கல்வி, தொழிற் சந்தை என்பனவும் இதில் உள்ளடக்கப்படும்.

## 1.3 சாத்தியமான இடர்வுகள், சவால்கள் மற்றும் அரசிறை நடவடிக்கைகள்

சர்வதேச பண்ட மற்றும் நிதிச் சந்தைகளில் ஏற்பட்ட அண்மைக்கால அபிவிருத்திகள் உள்நாட்டு பொருளாதாரத்திலும் மற்றும் நடுத்தரக் காலத்தில் அரசாங்கத்தின் அரசிறை திரட்டுச் செயற்பாடுகளிலும் சவால்களை ஏற்படுத்தும். இப்பின்னணியில் நடுத்தர காலத்தில் ஒட்டுமொத்த அரசிறை மூலோபாயத்தினையும் கருத்திற்கொண்டு அரசாங்கம் பின்வரும் பிரதான அரசிறை செயற்பாடுகளை முக்கிய விடயங்களாகக் கருதுகின்றது.

### (i) வருமானத் திரட்டினை பலப்படுத்தல்

அரசாங்கம் ஏற்கனவே கடைபிடித்த நடவடிக்கைகளிலிருந்து பலம்பெற்று, வருமானத் திரட்டு முயற்சிகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான முயற்சிகளைத் தொடர்ந்துள்ளது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறுகின்ற புதிய வருமான வரிச் சட்ட அமுலாக்கம், வரி விலக்களிப்புக்களை ஒழுங்குபடுத்தல், 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து பயன்வலுப் பெறுகின்ற பெ.சே.வ. வீதங்களை அதிகரித்தல், பெ.சே.வரி அடிப்படையினை அதிகரித்தல் மற்றும் வரி நிர்வாகத்தினை மேம்படுத்தல் என்பனவற்றினை இந்நடவடிக்கைகள் உள்ளட க்கியுள்ளன. இதன் மூலம் வரி முறைமையானது நிலையானதாகவும், எதிர்வு கூறும் தன்மை கொண்டதாகவும், சாதாரணமானதாகவும் மற்றும் வெளிப்படைத் தன்மையினைக் கொண்டதாகவும் இருக்கும் என்பதனை அரசாங்கம் தொடர்ந்தும் உறுதிப்படுத்தும்.

### நேரடி வரி விதிப்பு

2019 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் புதிய வரிச் சட்டத்தின் பிரதிபலன்கள் தொடரப்படவுள்ளதனால் இலங்கையின் நேரடி வரி விதிப்பனவு முறைமையானது எதிர்வரும் காலங்களில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சிய டையுமென எதிர்பார்க்கப்படுகிறது. வரி முறைமையினை இலகுபடுத்துவதனையும் மற்றும் வரி முறைமையினை சமத்துவமிக்க வையாகவும் வினைத்திறன்மிக்க வகையிலும் மாற்றிய மைப்பதனை இலக்காகக் கொண்ட புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம், முன்னைய வரி முறைமையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிக வரிச் செலவினத்தினைக் கொண்ட வரி விலக்களிப்புக்கள் மற்றும் வரிச் சலுகைகளை வழங்கும் நடைமுறையிலிருந்து விலக்கிச் செல்கிறது. ஆதலால், நேரடி வரி விதிப்பு முறையானது, பாரியளவிலான வரி விடுமுறை வீதங்கள், பகுதியளவிலான வரி விடுமுறை வீதங்கள் மற்றும் ஏனைய சலுகைகள் என்பன வற்றினை இரத்துசெய்து, இலகுபடுத்த ப்பட்ட மூன்று அடுக்கு நிறுவன வரிக் கட்டமைப்பு மற்றும் மூலதன ஈட்டு வரி என்பவற்றினை அறிமுகப்படுத்தியும், நிறுத்தி வைத்தல் வரியினை அதிகரித்தும், வரி அடிப்படையினை விரிவுபடுத்தியுள்ளது. உயர் தொழில் புரிநர்களுக்காக செலுத்தப்பட்ட சேவைக் கட்டணங்கள் மற்றும் பணியாட்களுக்கான வருமான வரியிலிருந்தான நிறுத்திவைத்தல் வரியினை அறவிடுவது தொடர்பில் தொழில் வழங்குநர்களின் கடப்பாடுகள் சம்பந்தமாக கணக்காய்வுகளை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, வரி வருமான இணக்க ப்பாட்டினை வலுப்படுத்துவதில் அதிகம் கவனஞ் செலுத்தப்படவுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட இடர்வு முகாமை அலகு மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட கணக்காய்வு அலகு என்பன தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் முன்னுரிமையான இணக்கப்பட்டான இடர்வுகளை அடையாளங் காண்பதற்கும் மற்றும் அதிக சிக்கல்மிக்க இணக்கப்பாடான கணக்காய்வுகளை நடாத்துவதற்கும் உதவும். இத்தகைய நடவடிக்கைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வெற்றிகரமாக செயற்படுத் தப்படும் வருமான நிருவாக முகாமைத்துவ முறைமை (RAMIS) மூலம் மேலும் வசதியளிக்கப்படவுள்ளது. புதிய நேரடி வரி விதிப்பனவு முறையானது சமூக மற்றும் அபிவிருத்தி நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட வளங்களைவிட மேலும் அதிக வளங்களை ஒதுக்குவதற்கு இயலுமாக்கும் வகையில் நடுத்தரக் காலத்தில் அதிக வருமானங்களை உருவாக்கும் என்றும் அரசாங்கம் எதிர்பார்கிறது.

### நேரடியல்லா வரிவிதிப்பு

பெறுமதி சேர் வரி (பெ.சே.வ) வீதம் 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரையில் 2016 இன் நடுப்பகுதியில் அதிகரிக்கப்பட்டமை,

மற்றும் பல்வேறுபட்ட வரி விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டமை என்பவற்றின் மூலம் பெ.சே.வ. அடிப்படை விரிவுபடுத் தப்பட்டதன் காரணமாக நேரடியல்லாத வரி விதிப்பிலிருந்தான வருமானம் தொடர்ந்தும் அதிகரித்துள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கணக்காய் வுகளை அடிப்படையாகக் கொண்ட பெ.சே.வரியினை மூலோபாயம் ஒன்றுடன் இணங்கச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக இணக்கப் பாட்டினை பலப்படுத்துவதன் மூலம் மேலும் பல முன்னேற்றங்கள் எதிர்பார்க் கப்படுகின்றன. இத்தகைய மூலோபாயமானது நிர்மாணத் துறையில் ஏற்கனவே ஆரம்பித்து ள்ளதோடு, வங்கி, வீடமைப்பு மற்றும் ஹோட்டல் உள்ளடங்கலாக பாரியளவில் வரி செலுத்து வோருக்கும் இது விரிவுபடுத்தப்படவுள்ளது. மேலும், கட்டுப்பாடுகள், புலனாய்வு மற்றும் இடர்வு மதிப்பீட்டிற்கான கொள்திறன் என்பனவற்றினை மேம்படுத்துவதன் மூலம் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் வருமான நிருவாகத்தினை பலப்படுத்துவதற்கான நடவடி க்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதற் கமைய, இதனூடாக இலங்கை சங்கமானது இடர் அடிப்படை கணக்காய்விற்கு பௌதீக வளங்களை சிறந்த நிறுவன கட்டமைப்பிலும் பாவித்து செயற்படுத்தவதை தன்னியக்க பொறிமுறைகளினூடாக செயற் படுத்த முடியும்.

### (ii) அரசாங்க செலவினத்தின் வினைத் திறனினை மேம்படுத்தல்

நடுத்தர காலத்தில் வருமானத்தினைத் திரட்டும் செயற்பாடுகளை பூர்த்தி செய்யும் வகையில் அரசாங்கம், அரசாங்க செலவின முகாமையின் வினைத்திறன் மேம்பாட்டினைத் தொடரவுள்ளது. ஒட்டுமொத்த செலவின வரையறைக்குள் சமூக மற்றும் மூலதனச் செலவினங்களுக்குப் போதுமான மேலதிக நிதி வசதிகளை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இதன் மூலம் நடுத்தரக் கால வளர்ச்சி இலக்குகளை பலமாகவும் பரந்தளவிலும் பேணுவதற்கு இயலுமாக அமையும். புதிதாக தாபிக்கப்பட்ட நலன்புரி நன்மைகள் சபையினூடாக மேம்படுத்தப்பட்ட இலக்குடன் சமூக பாதுகாப்பு வலைகளின் தொடர்ச்சியினை அரசாங்கம் உறுதிசெய்யும். இயற்கை அனர்த்தங்களுக்கான அதிகரித்த காப்புறுதித் திட்டம் மற்றும் எதிர்பாராத செலவினத்திற்காக வரவு செலவுத்திட்டத்தினை அமுல்படுத்துதல் என்பன மூலம் அரசிறை செலவினங்களோடு சம்பந்தப்பட்ட இயற்கை அனர்த்த செலவுகள் மீது வரவு செலவுத் திட்டத்தில் விசேட கவனஞ்செலுத்தப்படும். அவ்வாறே, மீண்டெழும் செலவினத்தினை ஒழுங்கு படுத்துவதன் மூலம் அரசாங்க செலவினத்தில் ஏற்படுகின்ற வினைத்திறன் மேம்பாடுகள் நடுத்தர காலத்தில் பொது நிதி முகாமைத்துவத்தினை அதிகரிப்பதனையும் உறுதி செய்யும். மேலும், புதிய ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) யினை அமுல்படுத்துவதன் மூலம் திறைசேரி செயற்பாடுகள், வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் தேர்வுசெய்யப்பட்ட கட்டுப்பாடுகள் என்பவற்றினூடாக பொது நிதி முகாமைத்துவ திறனினை விரிவுபடுத்துவதற்காக ஒத்துழைப்பு படிப்படியாகப் பெறப்படும்.

### (iii) அரசுடமைத் தொழில் முயற்சிகளை பலப்படுத்தல்

மாற்றமுறுகின்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில் ஏற்பட முடியுமான எந்தவொரு சவாலையும் எதிர்கொள்வதற்காகவும் அரசுடமை தொழில் முயற்சிகளின் ஆற்றலினைப் பிரதிபலிக்கும் வகையில் எதிர்வரும் காலங்களில் அரசுடமைத் தொழில் முயற்சிகளின் நிதி வெளிப்படுத்தலினை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது. குறிப்பாக, ஐந்து பிரதான அரசுடமைத் தொழில் முயற்சிகளுடன் ஏற்கனவே கையொப்பமிடப்பட்டுள்ள கூட்டிணைவு நோக்கக் கூற்றுக்களில் Statement of Corporate Intent (SCI) குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளைக் கண் காணிப்பதற்கான பொறிமுறை யொன்று தாபிக்கப்பட்டு, எதிர்காலத்தில் ஏனைய பத்து அரசுடமைத் தொழில்முயற்சிகளுக்கும் இது விரிவுபடுத்தப்படவுள்ளது. இதேவேளை, கனிய எண்ணெய்யினை உற்பத்தி செய்யும் பிரதேசங்களில் நிகழ்கின்ற பூகோள அரசியல் ஸ்திரத்தன்மையின்மை காரணமாக அண்மைக் காலங்களில் பெற்றோலிய விலைகளும் சர்வதேச சந்தையில் அதிகரித் துள்ளது. சர்வதேச ரீதியிலான எண்ணெய் விலை எதிர்வு கூறல்களுக்கு அமைய, இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் விலைகள் தற்போது பின்பற்றப்படுகின்ற விலைப் பொறிமுறை மூலம் சரிசெய்யப்படுகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செலவின அறவீட்டு மட்ட ங்களுக்கு மேல் உள்நாட்டு எரிபொருள் விலைகள் நிலையாகக் காணப்படுவதினை உறுதிபடுத்துவதற்காக அத்தகைய திருத்தங்கள் இன்றியமையாததவையாக காணப்படுவதோடு, பொது மக்கள் மீதான சுமையினை இலகுபடுத்தும் வகையில் செலவின அறவீட்டு மட்டங்களுக்கு கீழாக உள்நாட்டு எரிபொருள் விலைகள் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய, அரசாங்கம் வர்த்தகமல்லாத கடப்பாடுகள் என்ற அடிப்படையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நட்ட ஈட்டினை வழங்குவதற்கான தேவை ஏற்படலாம்.

அவ்வாறே, சந்தை சூழ்நிலைகளுக்கு அமைய, மின் கட்டணங்களையும் சரி செய்வதற்கு அனுமதிக்க ப்படாவிடின் நட்டஈட்டுடன் சம்பந்தப்பட்ட மின் கட்டண முறையும் ஏற்படலாம்.

### (iv) நடுத்தரக்கால படுகடன் முகாமை மூலோபாயத்தினை வலுப்படுத்தல்

ஐக்கிய அமெரிக்க பொருளாதாரத்தின் பலமான மீட்சி காரணமாக ஐக்கிய அமெரிக்க நாணயச் சபை அதிகாரிகளினால் பூட்கை வட்டி வீதங்கள் தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டுள்ளதோடு, இப்போக்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிலும் தொடரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய நிலமைகள் ஏற்கனவே நிகழ்ந்துள்ளதைப் போன்று சர்வதேச நிதிச் சந்தையில் வட்டி வீதங்களை அதிகரிக்கச் செய்யும். பாரியளவிலான அத்தகைய நிதித்தேவைப்பாடுகளுக்கமைய, 2019 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து வரும் மூன்று ஆண்டுகளிலும் சர்வதேச நிதிச் சந்தை நிலவரங்களில் ஏற்படுகின்ற அத்தகைய இறுக்கமானது பொதுப் படுகடன் முகாமைக்கும் சவாலாக அமையும். இப்பின்னணியில், மீள் நிதியளிப்புச் செயற்பாடுகளுடன் தொடர்புபடும் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளும் வகையில், நடுத்தரகால அரசிறை வேலைச் சட்டகத்தினை (Medium Term Fiscal Framework) வலுப்படுத்துவதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிதாக சட்டமாக்கப்பட்ட தீவிர பொறுப்பு முகாமைச் சட்டம் படுகடன் கடப்பாடுகளின் முதிர்வுக்கால எல்லையினை விரிவுபடுத்தி, இடர்வுகளைக் கட்டுப்படுத்தி எதிர்வரும் காலங்களில் மீள் நிதியளிப்பு தேவைப்பாடுகளை எதிர் கொள்வ தற்கான சந்தர்ப்பமொன்றினை வழங்கும். தீவிர பொறுப்பு முகாமை செயற்பாடுகளின் பயன் பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், அரசாங்கம் வெளிநாட்டு நிலுவைப் பொறுப்பு க்களை முகாமை செய்ய முடியுமான மட்டத்தில் பேணுவதனை வெளிக் காட்டுவதற்கான மேலாண்மை இலக்குடன் நடுத்தரகால படுகடன் முகாமை மூலோ பாயத்தினை (Medium Term Debt Management Stratergy) வலுப்படுத்துகிறது. நடுத்தரகால படுகடன் முகாமை மூலோ பாயத்தோடு அரசாங்க படுகடனில் பிரதான இடர்வுகளை உள்ளடக்கியுள்ள அடையாளங் காண்பதற்கும் மற்றும் அவற்றினை அறவீடு செய்வதற்கும் அரசாங்கத்திற்கு இயலுமாகின்றது. அதன்மூலம் கடன் வழங்கும் மூலோபாயத்திற்கான மிகப் பொருத்தமான நாணய மற்றும் முதிர்ச்சிக் கட்டமைப்பு ஒன்றினைக் குறிப்பீடு செய்வதற்கும் உதவுகிறது. அதற்கமைய, அரசாங்கத்தின் எதிர்கால கடன் பெறுகைகள் யாவும் அரசாங்க படுகடன்களை முன்னேற்பாடான மட்டங்களை நோக்கி கொண்டு வருவதற்கான அரசாங்க முயற்சிகளின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமொன்றினைத் தோற்று விக்கின்ற வருடாந்த கடன் பெறுகைத் திட்டமொன்றுடன் (Annual Borrowing Plan) இணைந்த வகையில் நிறைவேற்றப்படும். சுயாதீன படுகடன் முகாமை முகவர் நிறுவனமொன்றினை தாபிப்பதன் மூலம் அரசாங்கம் பொது படுகடன் முகாமைத் துவத்தினை மேலும் பலப்படுத் துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும். குறித்த முகவர் நிறுவனம் (அது தாபிக்கப் பட்டவுடன்) நடுத்தரக் கால படுகடன் முகாமை மூலோபாயத்திற்கேற்ப, இரண்டாம் நிலை சந்தை செயற்பாடுகள் மற்றும் அரசாங்க படுகடன் விநியோகத்துடன் தொடர்பான அனைத்து செயற் பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளது. மேலும், நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்கு கீழாக அரசாங்க உத்தரவாதங்களின் நிலுவைத் தொகையினைக் குறைத்து எதிர்பாராத பொறுப்புக்களைப் பேணுவதற்கான நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

## 1.4 நடுத்தரக்கால அரசிறை இலக்குகள்

அரசாங்கத்தின் நடுத்தரக்கால அரசிறை இலக்குகள் மற்றும் ஒட்டுமொத்த அரசிறை மூலோபாயம் என்பன அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அரசிறை முகாமைத்துவப் பொறுப்புச் சட்டத்துடன் இணங்கிச் செல்கின்றன. நடுத்தரக் கால அரசிறை இலக்குகளை நோக்கி உறுதியான அர்ப்பணிப்புடன் அரசிறை விதிகளை மேலும் பலப்படுத்துவதன்பால் நகருவதற்கு அரசாங்கம் நாடுகின்றது. குறிப்பாக, வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையினை மொ.உ. உற்பத்தியில் ஐந்து சதவீதத்திற்கு கீழாலும் அரசாங்க நிலுவைக் கடன்களை முகாமை செய்யக் கூடிய மட்டங்களிலும் பேணப்படுவதனை அரசாங்கம் உறுதிப்படுத்தும். இத்தகைய இலக்குகளை அடையும் வகையில் அரசாங்கம் பொருத்தமான அரசிறை நடவடிக்கைகளுடன் 2019 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் இலக்கிடப்பட்ட ஆரம்ப மிகை மட்டம் ஒன்றினை அடையப் பெறுவதினை உறுதிசெய்யும். 2019 ஆம் ஆண்டில் மொ.உ. உற்பத்தியில் 8.7 சதவீதத்தில் வட்டியல்லாத மீண்டெழும் செலவினத்தினைப் பேணியும் மற்றும் சமூக மற்றும் உற்பத்தி மூலதனச் செலவுக்கான செலவினத்தினைப் பாதுகாத்தும் 2019 ஆம் ஆண்டில் மொ.உ. உற்பத்தியில் மதிப்பிடப்பட்ட 1.3 சதவீத வருமான வளர்ச்சிப் புள்ளிகளினால் ஆதரவளிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டில் ஆரம்ப மிகையானது ரூபா 147 பில்லியனில் (மொ.உ. உற்பத்தியின் 0.9 சதவீதம்) அடையப் பெறுமெனவும் மதிப்பிடப்படுகின்றது. இதன்

விளைவாக, அரசாங்க படுகடனானது மிகையான மட்டத்திற்கு அதிகரிக்கவில்லை என்பதனை உறுதிசெய்து, ஒட்டு மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2021 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் 3.5 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்பட முடியுமாக இருக்கும். 2018 ஆம் ஆண்டிற்கு முந்திய அரசிறை மூலோபாய அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ள அரசிறை திரட்சிக்கான பாதையானது, இந்த நடைமுறை மூலோபாயக் கூற்றில் மதிப்பீடுகளில் நடுத்தரமான விலகல் ஒன்றுடன் மாற்றமுராது நிலைத்துக் காணப்படுகிறது. இதற்கு புதிதாக சட்டமாக்கப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினை செயற்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம், மதிப்பிடப்பட்ட வருமானத் திரட்சி எதிர்பார்க்கப்பட்ட அளவினை விடவும் குறைந்தமை மற்றும் உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகளின் மீட்சி எதிர்பார்க்கப்பட்டதனை விடவும் தாமதமடைந்தமை என்பன இத்தகைய விலகல்களுக்கு பிரதான காரணமாக அமைந்தன. மேலும், அதிகரித்த இயற்கை அனர்த்தங்களின் தாக்கம் காரணமாக அரசாங்க செலவினங்களின் மீதான தொடர்ச்சியான அழுத்தம் செலவின முகாமைச் செயற்பாடுகள் மீதும் ஓரளவிற்கு சுமைகளைச் ஏற்படுத்தின.

## 1.5 நடுத்தரக்கால பேரண்டப் பொருளாதாரத்தின் ஊகங்கள்

அண்மைக் காலங்களில் மெய்ப் பொருளாதாரத்தில் அவதானிக்கப்பட்ட மிதமான செயலாற்றுகையானது படிப்படியாக வளர்ச் சியடைந்து அதன் மூலம் நடுத்தர காலத்தில் செயற்றிறன்மிக்க மட்டத்தினை நோக்கி அது நகருமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 3.5 - 4.5 சதவீதம் வரையில் பொருளாதார வளர்ச்சி அடையப் பெறும் எனவும் இது 2022 ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 5.0 சதவீதம் வரையில் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க் கப்படுகிறது. தனியார்த் துறையினரின் பங்களிப்பு மீது அதிகம் முக்கியத்துவம் வழங்குகின்ற அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலும் அவ்வாறே, பின்தங்கிய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் கிராம மற்றும் நகர் துறைகளில் துரித அபிவிருத் தியினை உறுதிப்படுத்துகின்ற அரசாங்கத்தின் முயற்சிகள் என்பவற்றினால் அத்தகைய பொருளாதார வளர்ச்சியினை எட்டுவதற்கு உதவிபுரியும். அதற்கமைய, வர்த்தகத் துறைக்கு உத்வேகமளிக்கின்ற கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளில் ஏற்படுகின்ற வளர்ச்சி காரணமாக, வேலையின்மை வீதமும் ஏறக்குறைய 4.0 சதவீதத்தில் நிலையாக காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ஊழியப் படையில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாக பொருளாதாரத்தில் உற்பத்திக் திறனினை அதிகரிப்பதற்கும் இது உதவும். வெளிநாட்டுத் துறையானது பலமான ஏற்றுமதி செயலாற்றுகையினால் உத்வேகமளிக்கப்பட்டு, வர்த்தக இடைவெளியும் ஒடுக்கமடையுமென எதிர்பார்க்கப்படுவதோடு,இறக்குமதிச் செலவி னத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் தீர்வை வரிகளை தாராளமயப்படுத்தல் என்பன காரணமாக பண்ட விலைகளில் ஏற்படும் அதிகரிப்பு நேர்மறையான நேர்மறையான விளைவை தரக்கூடியது. எவ்வாறாயினும், சேவைத் துறையில் பிரதானமாக சுற்றுலா மற்றும் தகவல் தொழிநுட்பத் துறைகளில் வெளிநாட்டு நாணயப் பாய்ச்சல்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த வகையில் வெளிநாட்டு ஊழியர் பண வனுப்பல்கள் என்பனவற்றை பலப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு நடை முறைக் கணக்குப் பற்றாக்குறையினை 2022 ஆம் ஆண்டளவில் மொ.உ.உற்பத்தியில் ஏறக்குறைய 1.5 சதவீதத்திற்கு கட்டுப்படுத் துவதற்கு இயலுமானதாக இருக்கம். இதன்மூலம், உத்தேச சர்வதேச நிதி மையம் (துறைமுக நகர அபிவிருத்தி மூலமாக) அதிக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மத்தியில் நடுத்தரக் காலத்தில் கணிசமான அளவு நிதிப்பாய்ச்சலகளைத் திரட்டுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அது முதலீட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் வணிகக் கடன்களுக்கான நிதி உட்பாய்ச்சல்கள் என்பன அரசாங்கத்தின் வெளிநாட்டு படுகடன் சேவைக் கடப்பாடுகளை ஓரளவு அடைந்து கொள்வ தற்காக வெளிநாட்டு நாணயப் பாய்ச்சல்களை பலப்படுத்தும். நிதிக் கணக்கு மீதாக அத்தகைய வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் தேய்மான அழுத்தத்தினைக் கட்டுப்படுத்தி உத்யோகபூர்வ ஒதுக்கங்களையும் வலுப்படுத்துவதற்கும் உதவும். இலங்கை மத்திய வங்கியினால் கடைபிடிக்கப்பட்ட பணவீக்கத்தை இலக்குவைத்த செயற்பாகள் காரணமாக நுகர்வோர் விலைப் பணவீக் கமானது நடுத்த காலததில் ஒற்றை இலக்கமாக நிலையாக காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய பொருளா தாரத்திற்கு தேவைப்பட்ட கடன் பாய்ச்சல்களின் அளவானது நடைமுறையிலுள்ள நாணய நில மைகள் மூலம் உறுதிசெயயப்பட்டு நடுத்தரக் காலத்தில் வளர்ச்சி உத்வேகம் நிலையாகக் காணப்படும்.

# பகுதி II

## வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை – 2019

### 2003 ஆம் ஆணடின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின கீழ் கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்டது

வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் நியதிகளின் கீழ் வெளியிடப்பட்டது. இது அரசிறை உபாய கூற்றுக்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுவதுடன், பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரணட்டாவது வாசிப்பு சமர்ப்பிக்கப்படும் தினத்தில் சமர்ப்பிக்கப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், கொடுப்பனவு மீதி, வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளுக்கான அடிப்படை ஊகங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

இதற்கமைவாக, இவ்வறிக்கையானது அரசாங்கத்தின் வருமானம், செலவினம் மற்றும் 2018 இன் முதல் பதினொறு (11) மாதங்களில் பெறுகைகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கியுள்ளதுடன், இக்காலப்பகுதியின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட அரசிறை தொழிற்பாடுகளுக்குள் முழு மொத்த பொருளாதார நிலைமையினை விளங்கிக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் பிரதான பேரணடப் பொருளாதார அபிவிருத்திகளை வழங்குகிறது. மேலும் இவ்வறிக்கை பொருளாதாரம் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட பிற ஊகங்கள் பற்றிய அடிப்படை தகவல்களை வழங்குவதுடன், இந்த ஊகங்களுடன் தொடர்பான பின்னோக்கிய இடர்வுகளும் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையில் கறிப்பிடத்தக்களவு தாக்கமொன்றினை ஏற்படுத்தக்கூடிய பிற தகவல்களையும் கொண்டுள்ளது.

# 01

# அரசிறை அபிவிருத்திகள், திறைசேரிச் செயற்பாடு, வெளிநாட்டு நிதியளிப்பு

## 1.1 மேன்நோக்கு

அரசாங்கத்தின் அரசிறை வருமான செயற்பாடானது, 2018 ஆம் ஆண்டுக்கான செலவினத்தில் வினைத்திறனை மேம்படுத்தும் அதேவேளை வருமான பரவலாக்கலை மேம்படுத்துவதை முடுக்கிவிட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த அரசாங்க வருமானம் 2017 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 1,657 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இல் முதல் பதினொரு மாதங்களின் போது ரூபா 1,770 பில்லியனாக 6.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த வரி வருமானம் 3.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,587 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை வரியல்லாத வருமானம் 2018 இன் மீளாய்வுக் காலப் பகுதியில் குறிப்பிடத்தக்களவினால், அதாவது 40.9 சதவீதத்தினால் ரூ.183 பில்லியன்களினால் அதிகரித்துள்ளது. இதற்கு பிரதான காரணம் மத்திய வங்கியின் இலாப மாற்றீடாகும்

அதேவேளை, இக் காலப் பகுதியின் போது, அரச கடன் மீளச் செலுத்துதல் ரூ.1,195 பில்லியன்கள், வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.809 பில்லியன் காரணமாக அரச பணி ஊழியர்களது சம்பளங்கள் ரூபா 578 பில்லியனுக்கும் அதிகரிப்பொன்றை ஏற்படுத்தியதன் காரணமாக மொத்தச் செலவீனம் மற்றும் கடன் பெறல் என்பன 2,500 பில்லியன் ஆக 9.0 சதவீதத்தினாலும் இக்காலப்பகுதியில் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது மீண்டெழும் செலவினம் ரூ.1,951 பில்லியன்களாக 12.0 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதேவேளை மூலதனச் செலவினம் சிறிதளவினால் குறைவடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் போதான வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையான 634 பில்லியன் தொகையுடன் ஒப்பீடு செய்யும்போது 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதத்திற்கான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை ரூ. 722 பில்லியன் ஆகும்.

**அட்டவணை 1.1 | அரசிறை செயற்பாடுகளின் சுருக்கம்**

*ரூபா.மில்*

| விடயம் | சனவ – நவம் 2017 | சனவ – நவம் 2018(அ) |
|---|---|---|
| **வருமானங்களும் மானியங்களும்** | **1,659,532** | **1,777,895** |
| **வருமானம்** | **1,656,845** | **1,770,232** |
| வரி | 1,527,154 | 1,587,458 |
| வரி அல்லாத | 129,691 | 182,774 |
| மானியங்கள | 2,687 | 7,664 |
| **செலவினம்** | **2,293,192** | **2,499,550** |
| **நடைமுறை** | **1,741,956** | **1,951,044** |
| சம்பளங்கள் | 541,499 | 577,946 |
| வட்டிக்கொடுப்பனவு | 672,459 | 809,258 |
| ஏனையவை | 527,998 | 563841 |
| அரசாங்க முதலீடு | 561,419 | 568,789 |
| ஏனையவை | (10,183) | (20,283) |
| **வருமானப் பற்றாக்குறை (-)/மிகை (+)** | **(85,111)** | **(180,812)** |
| **மொத்த வ.செ.தி பற்றாக்குறை (-)/மிகை (+)** | **(633,660)** | **(721,655)** |
| **நிதியளிப்பு** | **633,660** | **721,655** |
| வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய) | 346,089 | 416,200 |
| உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய) | 287,571 | 305,455 |

*மூலம்: அரசிறைக் கொள்கை திணைக்களம்*
*அ) தற்காலிகமானது*

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது வரிகளை மறுசீரமைத்தல், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம் என்பன வரி வரி நிருவாகத்தை பலப்படுத்தல், வரி அடிப்படைகளை விரிவாக்கல் மற்றும் வரி விலக்களிப்புக்களை சரிசெய்தல் ஊடாக வரி பரவலாக்கலை மேம்படுத்துவதற்கான பல முன்னெடுப்புக்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2018 ஏப்பிரல் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்ட அமுலாக்கத்துடன் நேரடி வரிகளின் மூலமான வருமானப் பரவலாக்கல் விரிவு படுத்தப்பட்டுள்ளது. மூன்று கட்ட கூட்டாண்மை வருமான வரிக் கட்டமைப்பு (14 சதவீதம், 28 சதவீதம் மற்றும் 40 சதவீதம்)

அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 16 சதவீதத்திலிருந்து 24 சதவீதம் வரை உயர் எல்லை வரி வீதத்தை அதிகரித்துள்ள அதேவேளை ரூ.500,000 இலிருந்து ரூ. 600,000 வரை தனிப்பட்ட வருமான வரி கட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. வைத்தியசாலை அறை கட்டணங்கள் தவிர்ந்த தனியார் மருத்துவச் சேவைகள் வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சுற்றுலாப் பிரயாணிகளை கவர்வதற்காக பெ.சே.வரி மீளளிப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன் பொருள் விற்பனை யிலிருந்து வருமானத்தை உருவாக்கு வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் கைத்தேறாத வெளிநாட்டு நாணய வருவாயிற்கு பொருளாதார சேவைகள் வரிகள் பெ.சே.வரி செலுத்தப்படத்தக்க விலக்களிப்புக்களை வழங்கியும் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்காக பொ.சே.க. வரியை உற்பத்தி வரி அடிப்படையில் அறவிடு வதற்காக வரி திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேலும், 2017 ஓகத்து 01 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த உடன்படிக் கைகளுக்கு தேச நிர்மாண வரி விலக்களிப்பு வழங்கப்பட்டன. அதேவேளை, காணிச் சட்டத் தின்கீழ் வெளிநாட்டவர்கள் தொடர்பாக விதிக்கப்பட்ட தடைகள் சில நிபந்தனைகளுடன் நீக்கப்பட்டன. 72 மி.மீ. மற்றும் 84 மி.மீ. நீளத்தை விஞ்சும் சிகரெட்டுக்கள் தொடர்பான சிகரெட் மீது அதன் பாவணையைக் குறைக்கும் முகமாக 2018 ஆகஸ்ட் முதல் அமுலுக்கு வரும் வகையில் உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, 2018 ஆகஸ்ட் மாதத்தில் இயந்திர கொள்ளளவு, 1000 சீ.சீ யிலும் குறைவான வாகனங்கள் தொடர்பான உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டது. உயர் தொழில்நுட்பக் கருவிகளின் இறக்குமதி தொடர்பில் செல்லுபடியாகும் துறைமுகங்கள், விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (து.வி.சே.) 7.5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீத சலுகை வீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது. தங்க இறக்குமதி தொடர்பான சுங்கத்தீர்வை பூச்சிய சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. செலவு வெளிப்பாட்டு விலையை அறிமுகம் செய்யும் முகமாக, உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகள் தொடர்பில் செலவினத்தினை அடிப்படையாகக் கொண்ட விலைப் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2017 இல் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு செலவு அடிப்படை வரி வருமானம் 475 பில்லியன்களுடன் ஒப்பிடும்பொழுது 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது அதன் பெறுமதி 497 பில்லியன்களாக 4.6 சதவீதத்தினால், உள்நாட்டு பெ.சே.வரி, தே.க.வரி மற்றும் உற்பத்தி வரிகளின் அதிகரித்த வருமானத்தினால், வருமான வரி அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களுக்கான பெறப்பட்ட இறக்குமதி அடிப்படையிலான வரி 751 பில்லியன்களுடன் ஒப்பிடும்பொழுது, 2018 இல் அக்காலப் பகுதிக்கான வரி வருமானமாது 0.2 சதவீதத்தினால் மாற்றமடைந்து ரூ.753 பில்லியன்களாகக் காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம் 2018 ஆம் ஆண்டின் இக்காலப்பகுதியில் சுங்கத்தீர்வை 28.6 சதவீதத்தினாலும் செஸ்வரி 10.6 சதவீதத்தினாலும் குறைவடைந்ததாகும்.

நிறுவன வரி, ஆளுக்குரிய வருமான வரி, உழைக்கும் போது செலுத்தும் நேரடி வரி மற்றும் வட்டி மீதான வரி காரணமாக வரி வருமானமானது அதிகரித்துள்ளதோடு, 2017 இன் முதல் பதினொரு மாதங்களில் பதிவாக்கிய ரூபா 260 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் இதே காலப்பகுதியில் ரூபா 298 பில்லியனுக்கு நேரடி வரி வருமானமானது 14.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

உள்நாட்டு வெளிநாட்டு சூழல்களில் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு அரசானது தனது அரசிறை பற்றாக்குறையை முன்னேற்பாட்டு மட்டங்களில் பேணுவதற்கு கருசனை காட்டுகிறது. அதற்கமைய பல்வேறுபட்ட அரசிறை நியதிகளை பயன்படுத்தி அரசிறை ஒழுங்குகளை அடைவதற்கும் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொள்கிறது. இதற்காக செலவின முகாமையில் பொறுப்புக் கூறல் மற்றும் அரசிறை வெளிப்படைத் தன்மை என்பனவற்றையும் மேம்படுத்துகிறது.

**அட்டவணை 1.2 | மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2018**

*ரூபா.பில்*

| விடயம் | சன – நவம் | | மாற்றம் |
|---|---|---|---|
| | மதிப்பிட | மெய்(அ) | |
| **மொத்த வருமானம்** | **2,015** | **1,771** | **-244** |
| **வரி வருமானம்** | **1,859** | **1,588** | **-271** |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | | |
| வருமானம் மற்றும் இலாபம் மீதான வரி | 344 | 287 | -57 |
| பெ.சே.வரி - உள்நாட்டு (தேறிய) | 307 | 262 | -45 |
| தேசக் கட்டுமாண வரி - (உள்நாட்டு) | 56 | 46 | -10 |
| ஏனைய | 17 | 8 | -9 |
| **உப மொத்தம்** | **724** | **603** | **-121** |
| **சுங்கத் திணைக்களம்** | | | |
| இறக்குமதித் தீர்வை | 158 | 89 | -69 |
| பெ.சே.வரி - இறக்குமதிகள் (தேறிய) | 188 | 161 | -27 |
| தேசக் கட்டுமான வரி (இறக்குமதி) | 22 | 18 | -4 |
| துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 105 | 104 | -1 |
| செஸ் வரி அறவீடு | 45 | 49 | 4 |
| விசேட நுகர்வுப் பொருள் அறவீடு, ஏனைய | 72 | 69 | -3 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 1 | 3 | 2 |
| உற்பத்தி விசேட ஏற்பாடுகள் | 373 | 348 | -25 |
| சிகரெட்டுகள் | 83 | 85 | 2 |
| பெற்றோலியம் | 72 | 62 | -10 |
| மோட்டார் வாகனங்கள் - ஏனைய | 218 | 201 | -17 |
| **உப மொத்தம்** | **964** | **841** | **-123** |
| மதுவரித் திணைக்களம் | | | |
| மதுபானம்.ஃ.புகையிலை | 115 | 104 | -11 |
| **உப மொத்தம்** | **115** | **104** | **-11** |
| **ஏனைய** | | | |
| தொலைத்தொடர்பு அறவீடு | 28 | 27 | -1 |
| உரிம வரி மற்றும் பிற | 19 | 13 | -6 |
| **உப மொத்தம்** | **47** | **40** | **-7** |
| **வரியல்லாத வருமானம்** | **156** | **183** | **27** |
| **மொத்தச் செலவினம்** | **2,661** | **2,500** | **161** |
| **நடைமுறைச் செலவினம்** | **1,973** | **1,951** | **22** |
| சம்பளங்களும் கூலிகளும் | 579 | 578 | 1 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 812 | 809 | 3 |
| ஓய்வூதியக் கொடுப்பனவுகள் | 183 | 178 | 5 |
| அரச கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்களுக்கான மாற்றல்கள் | 89 | 85 | 4 |
| ஏனைய | 310 | 301 | 9 |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய பெறுகை** | **688** | **549** | **139** |

*மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

## 1.2 அரச வருமானம்

“தூர நோக்கு 2025” என்ற அரசாங்கத்தின் கொள்கைச் சட்டகத்தோடு இணைந்த வகையில், நேரடியல்லாத வரிக்குப் பதிலாக நேரடி வரியிலிருந்து வருமானத் திரட்டினை அதிகரிக்கச் செய்வதற்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நேரடி மற்றும் நேரடியல்லாத வரிகளின் செயலாற்றுகை கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

**வரைபு 1.1 | மொத்த வருமானத்தின் வகுதி (ஜனவரி - நவம்பர் 2018)**




**வரைபு 1.2 வருமான மூலங்கள் அடிப்படையில் மொத்த வருமானம் (ஜனவரி - நவம்பர் 2018)**




**அட்டவணை 1.3 | அரசாங்க வருமான செயலாற்றுகையின் பொழிப்பு**

*ரூபா மில்*

| விடயம் | சன - நவ 2017 | சன - நவ 2018(அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **1,527,154** | **1,587,458** | **3.9** |
| **வருமான வரி** | **260,173** | **297,843** | **14.5** |
| **உள்நாட்டு நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட வரிகள்** | **475,409** | **497,114** | **4.6** |
| பெ.சே.வரி | 248,494 | 261,788 | 5.3 |
| உற்பத்தி வரி | 182,415 | 189,216 | 3.7 |
| தேசக் கட்டுமாண வரி | 44,500 | 46,110 | 3.6 |
| **இறக்குமதி வரி** | **751,358** | **752,827** | **0.2** |
| சுங்கத் தீர்வை | 125,122 | 89,392 | -28.6 |
| பெ.சே.வரி | 150,554 | 161,157 | 7.0 |
| தேசக் கட்டுமான வரி | 17,322 | 18,201 | 5.1 |
| துறைமுக,விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 92,574 | 103,848 | 12.2 |
| விசேட நுகர்வுப்பண்ட அறவீடு | 65,988 | 68,851 | 4.3 |
| உற்பத்தி வரி | 245,442 | 262,851 | -10.7 |
| செஸ் வரி | 54,356 | 48,527 | -1.3 |
| **உரிம வரிகள் மற்றும் பிற** | **40,214** | **39,673** | **-1.3** |
| **வரியல்லாத வருமானம்** | **129,691** | **182,774** | **40.9** |
| **மொத்த வருமானம்** | **1,656,844** | **1,770,232** | **6.8** |

*மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம*
*(அ) தற்காலிகமானது*

**வருமான வரி**

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்திற்குமான மொத்த அரச வருமானத்தில் வருமான வரி மூலம் திரட்டப்பட்ட தொகை 14.5 சதவீதமாகும். மீளாய்வுக் காலத்தின் போது சேகரிக்கப்பட்ட வருமான வரியானது தாபன மற்றும் தாபனமற்ற வரிகள், பொருளாதார சேவைக் கட்டணம், உழைக்கும் போது செலுத்தும் வரி ஆகியவற்றை முறையே 20.4 சதவீதம், 19 சதவீதம், 26.6 சதவீதம் என்ற வீதங்களில் கொண்டுள்ளது.

**அட்டவணை 1.4 | வருமான வரி வருமான செயலாற்றுகை**

*ரூபா.மில்*

| வரி அடிப்படை | சன - நவ 2017 | சன - நவ 2018 (அ) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| தாபன மற்றும் தாபனமல்லாத வரிகள் | 138,043 | 166,212 | 20.4 |
| உ.போ.செ. வரி | 29,348 | 37,149 | 26.6 |
| வட்டி வருமானம் மீதான வரி | 49,197 | 42,605 | -13.4 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 43,585 | 51,877 | 19.0 |
| **மொத்தம்** | **260,173** | **297,843** | **14.5** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

தாபன மற்றும் தாபனமற்ற வரி வருமானம் 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்தின் போது ரூபா 166.2 பில்லியனாக அதிகரித்ததோடு, 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இப்பெறுமானமானது, ரூபா 138 பில்லியனாக காணப்பட்டது. 16 சதவீத வளர்ச்சியிலிருந்து அதிகபட்சமான 24 சதவீதத்திலான அதிகரிப்புடன் பிணைக்கப்பட்ட வரி வருமானத்திற்கு பிரயோகிக்கத்தக்க பரப்பெல்லை விரிவாக்கத்தின் மூலம் அனுகூலங்களைப் பெற்று, 2018 இன் முதல் பதினொரு மாத காலத்தில் உழைக்கும் போது செலுத்தும் வரி மூலம் திரட்டப்பட்ட வருமானமானது, 2017 இன் இதே காலப்பகுதியில் ஈட்டப்பட்ட ரூபா 29.3 பில்லியனிலிருந்து ரூபா 37.1 பில்லியனுக்கு அதிகரித்தது. இருப்பினும், இதே குறிப்பிட்ட காலப் பகுதிகளில் சேகரிக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரியானது மீளாய்வுக் காலத்தில் ரூபா 42.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

**பெறுமதிசேர் வரி**

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்தில் பெறுமதிசேர் வரி மூலம் சேகரிக்கப்பட்ட வருமானமானது, 2017 இன் இதே காலப்பகுதியில் சேகரிக்கப்பட்டதை விடவும், ஒட்டுமொத்தத் தொகையின் அடிப்படையில் 6.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 424 பில்லியனைப் பதிவுசெய்தது. 2018 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த் பெறுமதி சேர் வரி ரூபா 550 பில்லியன் ஆகும். மீளாய்வுக் காலத்தில் உள்நாட்டு நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானம் 5.3 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 262 பில்லியனைப் பதிவுசெய்த அதேவேளை, இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி வருமானமும் 7.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 161 பில்லியனினை பதிவு செய்தது. துணிகள், மரம், ஆகாய விமானங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், புகைப்படக்கருவிகள் மற்றும் ஒளியெறிவுக் கருவிகள் (Projectors) போன்ற தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான வரி விலக்களிப்புகளை நீக்கம் செய்தமை மற்றும் சுகாதார பராமரிப்புச் சேவைகளுக்கு வரி விலக்களிப்பு வழங்கியமை போன்றன மேற்படி செயலாற்றுகைக்கு பங்களிப்புச்செய்தன.

**அட்டவணை 1.5 | பெறுமதிசேர் வரியின் செயலாற்றுகை**

*ரூபா.மில்*

| வரி அடிப்படை | சன - நவ 2017 | சன - நவ 2018 (அ) | மாற்றம் (% ) |
|---|---|---|---|
| உள்நாட்டு | 248,618 | 261,939 | 5.4 |
| இறக்குமதிகள் | 151,044 | 161,765 | 7.1 |
| **மொத்த வருமானம்** | **399,650** | **423,704** | **6.0** |
| மீளளிப்புகள் | 613 | 759 | 23.8 |
| **தேறிய வருமானம்** | **399,048** | **422,945** | **6.0** |
| மொத்த வருமானத்தில் மீளளிப்பு % | 0.15 | 0.18 | |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

## உற்பத்தி வரி

மீளாய்வுக் காலத்தில் பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த உற்பத்தி வரி விதிக்கத்தகு ஏனைய அனைத்து உற்பத்திகள் தொடர்பிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் மூலம் பயனடைந்து, 2018 ஆம் ஆண்டின் சனவரி முதல் நவம்பர் வரையான முதல் பதினொரு மாத காலத்தில் உற்பத்தி வரி மூலம், 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட ரூபா 428 பில்லியனிலிருந்து ரூபா 452 பில்லியனுக்கு 5.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 1.6 | உற்பத்தி வரி செயலாற்றுகை**

*ரூபா.மில்*

| வரி அடிப்படை | சன - நவ | | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| | 2017 | 2018 (அ) | |
| மதுபானம் | 103,507 | 103,959 | 0.4 |
| சிகரெட்டுகள், புகையிலை | 78,908 | 85,257 | 8.0 |
| மோட்டார் வாகனங்கள் | 171,815 | 193,376 | 12.5 |
| பெற்றோலியம் | 67,714 | 61,862 | -8.6 |
| ஏனையவை | 5,913 | 7,613 | 28.8 |
| **மொத்தம்** | **427,857** | **452,067** | **5.7** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

2018 ஆம் ஆண்டு சனவரி முதல் நவம்பர் வரையான காலத்தில் மதுபானம் மீதான மது வரிக் கட்டளைச் சட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட அரச வருமானமானது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட ரூபா 103.5 பில்லியனிலிருந்து ரூபா 104 பில்லியனுக்கு 0.4 சதவீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது.

**வரைபு 1.3 | உற்பத்தி வரியின் செயலாற்றுகை (சனவரி - நவம்பர்)**




2018 இன் முதல் பதினொரு மாத காலத்தில் சிகரட் மற்றும் புகையிலை போன்றவற்றின் மூலம் திரட்டப்பட்ட அரச வருமானமானது, 2017 இன் இதே காலப்பகுதியில் திரட்டப்பட்ட ரூபா 79 பில்லியனிலிருந்து ரூபா 85 பில்லியனுக்கு 8.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மீளாய்வுக் காலமாகிய 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 2.6 சதவீத சிகரட் உற்பத்தி அதிகரிப்பு இதற்குக் காரணமாக விளங்கியது. இருப்பினும், 72 மி.மீ. மற்றும் 84 மி.மீ. இற்கு மேற்பட்ட நீளத்தினைக் கொண்ட 1000 சிகரட்டுகள் மீதான உற்பத்தி வரியானது முறையே ரூபா 33,550 மற்றும் ரூபா. 37,675 என சிகரட்டு பாவனை குறைக்கும் நோக்கில் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அதிகரிக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்தின் போது மோட்டார் வாகனங்கள் மூலம் பெறப்பட்ட உற்பத்தித் தீர்வையானது, முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 12.5 சதவீத அதிகரிப்புடன் ரூபா 193 பில்லியனுக்கு அதிகரித்தது. 2018 இன் மீளாய்வுக் காலத்தில் மோட்டார் வாகன இறக்குமதியில், குறிப்பாக 1000 சீ.சீ. இற்கும் குறைவான இயந்திரக் கொள்ளளவுடைய மோட்டார் வாகன இறக்குமதியில் ஏற்பட்ட 88 சதவீத அதிகரிப்பே இதற்குக் காரணமாகும். பிளாஸ்டிக் பிசின் மற்றும் சீனியை அடிப்படையாகக் கொண்டுள்ள குடிபானங்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட உற்பத்தி வரியானது மொத்த உற்பத்தி வரி சேகரிப்பில் சாதகமானளவு பங்களிப்பினை வழங்கியுள்ளன. இருப்பினும், 2018 ஆம் ஆண்டின் சனவரி முதல் நவம்பர் வரையான காலத்தில் பெற்றோலியப் உற்பத்திப் பொருட்கள் மூலம் பெறப்பட்ட உற்பத்தித் தீர்வையானது, 2017

ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட ரூபா 68 பில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 8.6 சதவீத வீழ்ச்சியுடன் ரூபா 62 பில்லியனைப் பதிவுசெய்திருந்தது. 2018 இன் மீளாய்வுக் காலத்தில் டீசல்/ எரிவாயு எண்ணெய்யின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்திருந்தது.

**அட்டவணை 1.7 | மோட்டார் வாகன இறக்குமதி மற்றும் புதிய வாகனப் பதிவு**

*அலகு: எண்*

| விடயம் | இறக்குமதிகள் | | | | புதிய பதிவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சன - நவ | | | | சன - நவ | | | |
| | 2017 | 2018 | மாற்றம் | % | 2017 | 2018 | மாற்றம் | % |
| பேருந்துகள் | 3,365 | 2,508 | (857) | (25) | 3,009 | 2,810 | (199) | (7) |
| மோட்டார் கார்கள் | 48,058 | 90,183 | 42,125 | 88 | 35,230 | 76,816 | 41,586 | 118 |
| முச்சக்கர வண்டிகள் | 16,848 | 20,755 | 3,907 | 23 | 22,172 | 18,646 | (3,526) | (16) |
| மோட்டார் சைக்கிள்கள் | 335,238 | 330,415 | (4,823) | (1) | 319,446 | 316,728 | (2,718) | (1) |
| பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் (அ) | 103,736 | 46,874 | (56,862) | (55) | 10,548 | 8,782 | (1,766) | (17) |
| நில வாகனங்கள் (ஆ) | 143,388 | 193,447 | 50,059 | 35 | 11,991 | 9,454 | (2,537) | (21) |
| ஏனைய (இ) | 107,430 | 33,207 | (74,223) | (69) | 15,256 | 16,593 | 1,337 | 9 |
| **மொத்தம்** | **758,063** | **717,389** | **(40,674)** | **(5)** | **417,652** | **449,829** | **32,177** | 8 |

*மூலம்: மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கம்*

*(அ சிங்கல் கெப்ஸ், இருநோக்க வாகனங்கள் உள்ளடங்கலாக பொருட்கள் போக்கவரத்து வாகனங்கள்*

*(ஆ) ட்ரக்டர்கள்,கை ட்ரக்டர்கள், இழுவைப் பெட்டிகள் உள்ளடங்கலாக உழவு இயந்திரங்கள்*

*(இ) விசேட நோக்க வாகனங்கள், அம்பியுலனஸ் வண்டிகள், பிரேத வாகபனங்கள்*

### சுங்க இறக்குமதித் தீர்வை

2018 இன் முதல் பதினொரு மாத காலத்தில் சுங்க இறக்குமதித் தீர்வை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அரச வருமானமானது, 2017 இன் இதே காலப்பகுதில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 125.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 28.6 சதவீத வீழ்ச்சியுடன் ரூபா 89.4 பில்லியனைப் பதிவு செய்தது. இந்த வீழ்ச்சிக்கு பெற்றோல், டீசல், கோதுமை மா மற்றும் பால்மா போன்றவற்றின் இறக்குமதி மீதான பொதுவான தீர்வை விலக்களிப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் அமுலாக்கம் போன்றன பிரதான காரணங்களாக விளங்கின.

**அட்டவணை 1.8 | சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதி பொருட்கள் மற்றும் பெறுமதி**

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | சன - திசெ - 2018 | |
|---|---|---|
| | தீர்வைச் சலுகைக்குட்பட்ட உற்பத்திகளின் எண்ணிக்கை | இறக்குமதி (ரூபா மில்.) |
| இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 807 | 41,273 |
| பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 45 | 12,062 |
| தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA) | 96 | 1,215 |
| ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 79 | 3,076 |
| **மொத்தம்** | **1,027** | **57,626** |

*மூலம்: சுங்கத் திணைக்களம், வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்*

### விசேட வியாபார பண்ட அறவீடு

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்தில் விசேட வியாபார பண்ட அறவீடு மூலம் பெறப்பட்ட அரச வருமானம், 2017 இன் இதே காலத்தில் கிடைக்கப்பெற்ற ரூபா 66.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 4.3 சதவீத அதிகரிப்புடன் ரூபா 68.8 பில்லியனைப் பதிவுசெய்தது. சற்று அதிகரிப்புடனான இந்த செயலாற்றுகைக்கு அரிசி வகைகள், சோளம், கருவாடு, உலர்த்திய மீன், உருளைக்கிழங்கு,

பெரிய வெங்காயம், உளுந்து, துருவிய அல்லது பொடி செய்யப்பட்ட சீஸ், கௌபீ மற்றும் சீனி போன்றன மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் மேல்நோக்கிய திருத்தங்கள், அத்துடன் பயறு வகை, மெக்கரல் மீன், உலர்த்திய மீன், மாசி, பட்டாணிக்கடலை, கொண்டைக்கடலை மற்றும் குரக்கன் போன்றன தொடர்பில் வழங்கப்பட்ட தீர்வை விரிவாக்கம் போன்றன பிரதான காரணமாகும்.

### தேசக் கட்டுமான வரி

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்தில், தேசக் கட்டுமான வரி மூலம் பெறப்பட்ட மொத்த அரச வருமானத்திற்கு ரூபா 64.3 பில்லியன் கிடைக்கப்பெற்றதோடு, 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இத்தொகை 61.8 பில்லியனாகும். உள்நாட்டுச் செயற்பாடுகள் தொடர்பில் அறவிடப்பட்ட தேசக் கட்டுமான வரி மூலம் சேகரிக்கப்பட்ட அரச வருமானமானது 3.6 சதவீதத்தினால் சிறு அதிகரிப்பினைக் காட்டி ரூபா 46.1 பில்லியனைப் பதிவுசெய்தது. இருப்பினும், இறக்குமதிகள் மீதான தேசக் கட்டுமான வரி மூலம் கிடைக்கப்பெற்ற வருமானமானது 5.1 சதவீத மாற்றத்தோடு ரூபா. 18.2 பில்லியனை, 2018 இன் முதல் பதினொரு மாத காலத்தில் பதிவுசெய்தது. பல்வேறு பிரிவுகளில் மேற்கொண்ட வரி விலக்களிப்பினை நீக்குதல் போன்றன தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான நடவடிக்கைகளே இந்த செயலாற்றுகைக்கு காரணமாக அமைந்தன.

**அட்டவணை 1.9 | தே.க.வரி, முத்திரைத் தீர்வை மற்றும் மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணம்**

*ரூபா.மில்*

| விடயம் | 2017 | | | 2018 | | | மாற்றம ;% 2017/2018 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன - நவ | | | சன - நவ | | | சன - நவ | | |
| | ம.அ | மா.ச | மொத்தம் | ம.அ | மா.ச | மொத்தம் | ம.அ | மா.ச | மொத்தம் |
| **தே.க.வரி *** | **61,822** | **30,911** | **92,733** | **64,311** | **32,155** | **96,467** | **4.0** | **4.0** | **4.0** |
| உள்நாட்டு | 44,500 | 22,250 | 66,750 | 46,110 | 23,055 | 69,165 | 3.6 | 3.6 | 3.6 |
| இறக்குமதி | 17,322 | 8,661 | 25,983 | 18,201 | 9,100 | 27,301 | 5.1 | 5.1 | 5.1 |
| முத்திரைத் தீர்வை ** | - | 7,540 | 7,540 | - | 8,432 | 8,432 | - | 11.8 | 11.8 |
| மோட்டார் வாகனப் பதிவுக் கட்டணம்*** | 763 | 1,781 | 2,544 | 952 | 2,221 | 3,172 | 24.8 | 24.7 | 24.7 |
| **மொத்தம்** | **62,585** | **40,232** | **102,817** | **65,263** | **42,808** | **108,071** | **4.3** | **6.4** | **5.1** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*
** 2011 இலிருந்து, 33 1/3 சதவீத தே.க.வரி வருமான சேகரிப்பு மத்திய அரசாங்கத்தினால் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.*
*** 2011 இலிருந்து முத்திரைத் தீர்வையிலிருந்து சேகரிக்கப்பட்ட 100 சதவீத வருமானமும் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.*
**** மோட்டார் வாகன பதிவுக் கட்டணத்திலிருந்து மத்திய அரசாங்கத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 70 சதவீதம் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது.*
*குறிப்பு: ம.அ = மத்திய அரசாங்கம், மா.ச ஸ்ரீ மாகாண சபைகள் சபைகள்*

### ஏனைய வரிகள்

தொலைத்தொடர்புகள் தீர்வையானது 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்தில் 14.3 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 26.6 பில்லியனாகக் காணப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது ரூபா 31.0 பில்லியனாகக் காணப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட அழைப்பு நேர குறுக்கத்துடன் பிணைந்துள்ள இணையச் சேவைகளுக்கான வரிகளின் நீக்கம் இதற்கு செல்வாக்குச் செலுத்தியது. இதேநேரம், சர்வதேச வர்த்தகம் மீதான செஸ் அறவீடு மூலம், 2018 இன் முதல் பதினொரு மாத காலத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம், 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட ரூபா 54.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 10.7 சதவீத வீழ்ச்சியுடன் ரூபா 48.5 பில்லியனைப் பதிவு செய்தது. இதற்கு இறைச்சி, பால் உற்பத்திகள், பேரீச்சம்பழம், திராட்சைப்பழம், பெயார்ஸ், பியர் மற்றும் வைன் போன்ற தெரிவுசெய்யப்பட்ட சுமார் 253 பொருட்கள் மீதான செஸ் வீதங்களை நீக்கியமையே பிரதான காரணமாக அமைந்தது. தேயிலை ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட வருமானம் 7.1 சதவீத அதிகரிப்புடன் ரூபா 542 மில்லியனைப் பதிவுசெய்தது. இருப்பினும், இறப்பர், இறப்பர் மையப் பொருட்கள் மற்றும் தேங்காய் போன்றவற்றின் ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட வருமானம் 2018 இன் முதல் பதினொரு மாத காலத்தில் வீழ்ச்சியைக் காட்டியது. இறக்குமதிகள் மீதான செஸ் மூலம் பெறப்பட்ட வருமானமும் 2018 இன் முதல் பதினொரு மாத காலத்தில் 10.6 சதவீத வீழ்ச்சியுடன் ரூபா 46.1 பில்லியனாக காணப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டின் இதே

காலப்பகுதிக்கான இப் பெறுமானம் ரூபா 51.6 பில்லியனாக காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதத்தில் பெறப்பட்ட துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மூலமான வருமானம், 2017 ஆம் ஆண்டின் இதே காலத்தில் பெறப்பட்ட ரூபா 92.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 12.2 சதவீத அதிகரிப்புடன் ரூபா 103.8 பில்லியனைப் பதிவுசெய்தது. எரிபொருள், உருக்கு மற்றும் கோதுமைத் தாணியம் போன்றவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து இடைநிலைப் பொருட்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இத்தகைய அதிகரிப்புக்கு 2018 ஆம் ஆண்டில் பங்களிப்புச் செய்துள்ளது.

**அட்டவணை 1.10 | சர்வதேச வர்த்தகம் மூலமான செஸ் வருமானம்**

*ரூபா. மில்*

| விடயம் | சன - நவ | |
|---|---|---|
| | 2017 | 2018 |
| **செஸ் ஏற்றுமதிகள்** | **2,742** | **2,409** |
| தேயிலை - தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு) சட்டம், | 506 | 542 |
| இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் | 89 | 9 |
| இறப்பர் - இறப்பர் மீள்நடுகை உதவிச் சட்டத்தின் கீழ் | 99 | 97 |
| தெங்கு - தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் | 2,048 | 1,761 |
| ஏ.அ.ச செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் | 51,614 | 46,118 |
| **மொத்தம்** | 54,356 | 48,527 |

*மூலம் : அரசிறைக் கொள்கை திணைக்களம்.*

*(அ) தற்காலிகமானது*

**வரியல்லாத வருமானம்**

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதத்தில், மொத்த வரியற்ற வருமானம், 2017 ஆம் ஆண்டின் இதே காலத்தில் பெறப்பட்ட ரூபா 129.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 40.9 சதவீத அதிகரிப்புடன் ரூபா 182.8 பில்லியனாக பதிவுசெய்யப்பட்டது. இதற்கு பிரதானமாக மத்திய வங்கியின் ரூபா 15 பில்லியன் தொகையான இலாப பரிமாற்றங்கள், விற்பனைகள் மற்றும் அறவீடுகளிலிருந்தான 50.2 சதவீத வருமான அதிகரிப்பும் பங்களிப்புச் செய்தன. மேலும், வாடகை வருமானம் 42.4 சதவீதத்தினால் ரூபா 4.5 பில்லியனுக்கும், வட்டி வருமானம் 29.7 சதவீத அதிகரிப்புடன் ரூபா 7.2 பில்லியனுக்கும், சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புக்கள் 10.4 சதவீத அதிகரிப்புடன் ரூபா 23 பில்லியனுக்கும் ஏனைய வருமானங்கள் 154.5 சதவீத அதிகரிப்புடன் ரூபா 5.4 பில்லியனுக்கும் அதிகரித்தும் இத்தகைய செயலாற்றுகைக்கு பங்களிப்புச் செய்துள்ளது. ஆயினும், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பற்றிலிருந்து திரட்டப்பட்ட வருமானமானது 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது 3.4 சதவீதத்தினால் ரூபா 35.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது

**அட்டவணை 1.11 | அரசாங்க வருமான வேறுபாடு பகுப்பாய்வு (சனவரி – நவம்பர் 2018)**

| விடயம் | 2017 | 2018 மதிப்பீடு | 2018 தற்காலிகம் | காரணம் |
|---|---|---|---|---|
| வருமான வரி | 260.2 | 354.5 | 297.8 | 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறும் வகையிலமைந்த புதிய உண்ணாட்டரசிறைச் சட்ட அமுலாக்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் “வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை” (RAMIS) மூலம் வரி நிருவாகச் செயன்முறையினை வலுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் பிடித்து வைத்தல் வரியிலிருந்த குறைவடைந்த வருமான வரி மூலம் சேகரிக்கப்பட்ட அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு உதவின. தனியாள் வரி விதிக்கத்தகு வருமானக் கணிப்பீட்டிற்கு ஏற்புடைய பரப்பெல்லையினை விரிவாக்கம் செய்தமை மற்றும் ஊமிய வருமானத்திற்கான முன்னேற்றகரமான வரியினை 24 சதவீதம் வரை விரிவுபடுத்தியமை போன்றன உழைக்கும் போது செலுத்தும் வரி மூலாமன வருமானத்தினை அதிகரித்துக்கொள்வதற்கு உதவின. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரிச்சட்டத்தினை அமுலாக்குவதில் ஏற்பட்ட தாமதம் மதிப்பிடப்பட்ட வருமானத்திலிருந்து மெய் வருமானம் வீழ்ச்சியடையக் காரணமாக அமைந்ததோடு எதிர்பார்க்கப்பட்டதனை விடவும் மொ.உ. உற்பத்தி வளர்ச்சி வீதம் குறைவடைவதற்கும் காரணமாக அமைந்தது. |
| பெறுமதி சேர் வரி | 399.0 | 494.6 | 422.9 | உள்நாட்டுச் செயற்பாடுகளிலான விரிவாக்கம் மற்றும் இறக்குமதி செலவினத்தில் எற்பட்ட அதிகரிப்பு பெறுமதிசேர் வரி வருமான அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தன. நிலக்கரி, பால்மா, சீமெந்து மற்றும் உராய்வு நீக்கிககிகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது இறக்குமதி குறித்தான் பெறுமதி சேர் வரி வருமானத்தினை அதிகரிப்பதற்கு உதவியது. மேலும் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) இன் அமுலாக்கத்துடன் கொடுப்பனவு மற்றும் பெறுகை பற்றிய கண்காணிப்பு, அதிகரித்த வரி பற்றிய கணக்காய்வு மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி நிருவாகச் செயன்முறையினை வலுப்படுத்தல் என்பன மேற்படி வருமான அதிகரிப்பிற்கு சாதகமாக பங்களிப்புச் செய்தன. எவ்வாறாயினும், சுகாதாரம் பராமரிப்புச் சேவைகளுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் காரணமாக மதிப்பிடப்பட்ட வருமானத்திலிருந்து மெய் வருமானம் வேறுபடுவதற்கு காரணமாக அமைந்தன. |
| உற்பத்தி வரி | 427.9 | 487.3 | 452.1 | பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் தவிர்ந்த மோட்டார் வாகனங்கள், மதுபானம், சிகரெட்டு மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான அதிகரித்த உற்பத்தி வரித் தீர்வைவ் காரணமாக உற்பத்தி வரியிலிருந்தான வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாய் அமைந்தது. மோட்டார் வாகனங்கள் குறிப்பாக, 1000 சீ.சீ கொள்ள ளவுடைய வாகனங்களின் இறக்குமதி அதிகரிப்பு, மதுபான நுகர்வு முறையிலான மாற்றத்தினைப் பிரதிபலிக்கும் வகையிலமைந்த மென்பான வகை மதுபானங்களின் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் மதுபான நுகர்வு முறையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன மதிப்பிடப்பட்ட வருமானத்திலிருந்து மெய் வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாய் அமைந்தது. |
| இறக்குமதித் தீர்வை | 125.1 | 158.2 | 89.4 | இந்த வீழ்ச்சிக்கு பெற்றோல், டீசல், கோதுமை மா மற்றும் பால்மா போன்றவற்றின் இறக்குமதி மீதான பொதுவான தீர்வைத் தள்ளுபடியின் பேரில் வழங்கப்பட்ட விலக்களிப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் அமுலாக்கம் போன்றன பிரதான காரணங்களாக விளங்கின. |
| துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | 92.6 | 104.5 | 103.8 | எரிபொருள், உரம் போன்ற இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்தான வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாய் அமைந்தது.இருப்பினும், 7.5 சதவீதம் எனும் நியம வீதம் பிரயோகிக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றிற்கு 2.5 சதவீத சலுகை வீதம் பிரயோகிக்கப்பட்டதன் காரணமாக துறைமுக, விமானநிலைய அபிவிருத்தியிலுந்தான வருமானத்தில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தின. |
| தேசக் கட்டுமான வரி | 61.8 | 78.6 | 64.3 | ஒப்பந்தக்காரர் ஒருவரினால் ஒப்பந்த சேவைகள், குடியிருப்பு அடுக்குமாடிகள் விற்பனை, உள்வரும் பயண முகவர் சேவைகளுக்காக வெளிநாட்டு நாணய அலகுகளில் பெறப்பட்ட சேவைகள் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புக்களோடு இணைந்த வகையில் சம்பந்தப்பட்ட சட்டத்தினை செயற்படுத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | துவதில் ஏற்பட்ட தாமதம் மதிப்பிடப்பட்ட வருமானத்திலிருந்து மெய் வருமானம் வீழ்ச்சியடைவதற்கு காரணமாய் அமைந்துள்ளது. |
| ஏனைய வரிகள் | 160.5 | 181.7 | 157.1 | இறக்குமதிகள் மீதான செஸ் வரி மூலம் பெறப்பட்ட வருமானம் 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சிகண்டது. இதற்கு குறிப்பீடு செய்யப்பட்ட 253 பொருட்கள் மீதான ஏற்புடைய செஸ் வரியினை நீக்கியமை மற்றும் கோதுமை மா மீதான செஸ் வரியை குறைத்தமை போன்றன காரணமாக அமைந்தன. தொலைத்தொடர்பு அறவீடு மூலமான வருமானம் இணையச் சேவைகளுக்கான வரிகளின் நீக்கம் காரணமாக 14.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததோடு, இதற்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு தொலைபேசி அழைப்பு நேரங்கள் குறைவடைந்தமையும் மேற்படி தொலைத்தொடர்பு அறவீட்டின் வீழ்ச்சிக்கு வழியமைத்தது. |
| வரியல்லா வருமானம் | 129.7 | 156.0 | 182.8 | மத்திய வங்கியிலிருந்தான இலாப பரிமாற்றங்கள் வரியற்ற வருமான அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்தன. அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பள அதிகரிப்பு காரணமாக அவர்களிடமிருந்தான சமூக பாதுகாப்புப் பங்களிப்பு சேகரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு, விற்பனைகள், கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சமாதானம் செயற்பாடுகள் மூலமான வருமானம் என்பன திரட்டு நிதியினுள் சேர்க்கப்பட்டமை காரணமாக வரியற்ற வருமானம் அதிகரிப்பிற்கு சாதகமாகப் பங்களிப்புச்செய்துள்ளன. |
| **மொத்தம்** | **1,656.8** | **2,015.4** | **1770.2** | |

*அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது.*

**கட்டம் 1 | பிரதான அரசிறைச் செயற்பாடுகள் - சனவரி – நவம்பர் 2018**

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வை** | |
| 16.02.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2018.02.15 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2058/33)<br>அரச நிறுவாக சுற்றறிக்கை இல 22/99 இல் குறிப்பிட்டுள்ள பிரகாரம் I, II, III வகை பயன்பெறுனர்களுக்கான உற்பத்தி வரி விலக்கு உச்ச எல்லையை முறையே ரூ. 22.0 மில்லியன்கள், ரூ. 16.00 மில்லியன்கள் மற்றும் ரூ. 12.00 மில்லியன்களாக அதிகரிப்பதற்கு. |
| 16.02.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2018.02.15ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2058 /34)<br>வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல 01 / 2018 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்பெறுனர்களுக்கான உற்பத்தி வரி விலக்கு உச்ச எல்லையை முறையே ரூ. 5.0 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கு. |
| 12.04.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.04.12 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2066 / 40)<br>01 / 2017 ஆம் இலக்க உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை சுற்றறிக்கையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்பெறுனர்களுக்கான 2017. நவம்பர் 09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திறக்கப்பட்ட வாகனங்களுக்கு வரி விடுகையை வழங்குவதற்கு. |
| 24.04.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.04.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2068/9)<br>ஜெனரால் (ஓய்வு பெற்ற) ஹமில்டன் வனசிங்கவுக்கு வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு. |
| 15.05.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.05.15 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2071/16)<br>100 சதவீத வரிச் சலுகையில் இராஜதந்திர/இராஜதந்திர நிறுவனங்களால் பதிவு செய்யப்பட்டதும் இறக்குமதி செய்யப்பட்டதுமான வாகனங்களை விற்பனை செய்வதற்கு/அகற்றுவதற்கான வருடாந்த பெறுமானத்தேய்வு வீதத்தை அறிமுகம் செய்வதற்கு. |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 31.05.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.05.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2073/41) மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு ரூ. 7.00 என்ற வீதத்தில் உற்பத்தி வரியை விதிப்பதற்கு |
| 09.06.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.06.08 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2074/39) திருத்தப்பட்டவாறான வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல 1/2018 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயன்பெறுனர்களுக்கான உற்பத்தி வரி விலக்கை ரூ. 5.0 மில்லியன்களிலிருந்து ரூ. 3.6 மில்லியன்களாக வரி விடுதொகை உச்ச எல்லையை குறைப்பதற்கு |
| 14.06.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.06.14 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2075/51) மண்ணெனன்னை தொடர்பில் விதிக்கத்தகு உற்பத்தி வரியை நீக்குவதற்கு. |
| 25.07.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.07.12 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2079/58) குளிர்பானங்களில் சீனி உள்ளடக்கத்தின் அடிப்படையில் உற்பத்தி வரியை திருத்தம் செய்வதற்கு |
| 17.07.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.07.17 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2079/58) இலங்கை சுங்கத்திலிருந்து வாகனங்களை விடுவிப்பதற்கான சலுகை காலம் தொடர்பான நிபந்தனையை நீக்குவதற்கும் செல்லுபடியாகும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் விண்ணப்பதாரிகளுக்கு வசதியளிப்புச் செய்வதற்கு வரி விடுகை நிபந்தனைகள் மற்றும் சட்டங்களை மாற்றம் செய்யாது பதிவு செய்வதற்கு அனுமதிப்பதற்கும். |
| 01.08.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.07.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2082/ 10) 1000 சி.சி இற்கு குறைவான இயந்திர இயலளவைக் கொண்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உற்பத்தி வரியை அதிகரிப்பதற்கு. |
| 01.08.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.07.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2082 /11) 72 மி.மீ. நீளத்திற்கு மேற்பட்ட சிகரேட்டு தொடர்பில் உற்பத்தி வரியை அதிகரிப்பதற்கு. |
| 06.08.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள் ) சட்டம், (2018.08.06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2083/2) 2018. ஓகத்து 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு வழங்கப்பட்ட வரிச் சலுகையை வலுப்படுத்துவதற்கு |
| 18.09.2018 | ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2018.09.17 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2089 /18) சீனி தொடர்பில் உற்பத்தி வரியை விதிப்பதற்கு |
| 09.10.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.10.08 ஆந் திகதிய, 2092/5 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) கொழுப்பமிலங்கள் மீது உற்பத்தி வரியினை விதிப்பதற்கு |
| 02.11.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.11.01 ஆந் திகதிய, 2095.∴18 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) டீசல் மீதான உற்பத்தித் தீர்வையினைத் திருத்துவதற்கு |
| 12.11.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.11.12 ஆந் திகதிய, 2097/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) சீனியினை அடிப்படையாகக் கொண்டுள்ள குடிபானங்கள் மீது உற்பத்தித் தீர்வையினை அமுலாக்குவது தொடர்பில் மீள வர்த்தமானி அறிவித்தலினை வெளியிடுவதற்கு |
| 03.12.2018 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.12.03 ஆந் திகதிய, 2100/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) சீனியினை அடிப்படையாகக் கொண்ட காபனேற்றப்பட்ட குடிபானங்கள் மீதான உற்பத்தித் தீர்வையினைத் திருத்துவதற்கு, |
| **மதுவரிக் (கட்டளைச்) சட்டம்.** | |
| 10.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 02 / 2018 (2018.01.10 ஆம் திகதிய 2053 / 26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ) மதுவரி அறிவித்தல் இல. 666 இல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்துவதற்கு |
| 11.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 01 / 2018 (2018.01.10 ஆம் திகதிய 2053 / 21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிலையங்களின் வியாபார |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | மணித்தியாலங்களை திருத்துவதற்கு |
| 18.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 03 / 2018 (2018.01.18 ஆம் திகதிய 2054/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>2018.01.16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட மதுசார அனுமதிப்பத்திரங்களுக்கான வியாபார மணித்தியாலங்களை தொடர்பில் மதுவரி அறிவித்தல் இல 01/2018 இரத்துச் செய்வதற்கு |
| 18.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 04 / 2018 (2018.01.18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>2018.01.16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் மதுவரி அறிவித்தல் இல. 666 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்தம் செய்தல் தொடர்பான மதுவரி அறிவித்தல் இல 02/2018 இரத்துச் செய்வதற்கு |
| 22.01.2018 | மதுவரி அறிவித்தல் இல. 05/2018 மற்றும் மதுவரி அறிவித்தல் இல. 06/2018 (2018.01.23 ஆம் திகதிய 2055/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>1001 மற்றும் 1002 ஆவது மதுவரி அறிவித்தல் அட்டவணையில் ''கூழ்'' என்ற சொல்லை நீக்குவதற்கு |
| 21.02.2018 | மதுவரி அறிவித்தல் இல. 07/2018 (2018.02.21 ஆம் திகதிய 2059/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>தொகை கி.கி ஒன்றிற்கு ரூ. 9.00 என்ற விகிதத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட குடிபானமல்லாத ஸ்பிரித்து தொடர்பான மதுவரித் தீர்வையை குறைப்பதற்கு |
| 01.04.2018 | மதுவரி அறிவித்தல் இல. 09/2018 (2018.04.06 ஆம் திகதிய 2065/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் )<br>கள்ளு போத்தலில் அடைப்பது தொடர்பான அனுமதிப்பத்திரக் கட்டணத்தைகரூ.500,000.00 ஆல் குறைப்பதற்கு |
| 16.04.2018 | மதுவரி அறிவித்தல் இல. 08/2018 (2018.04.09 ஆம் திகதிய 2066/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் )<br>திருத்தப்பட்ட மதுவரி அறிவித்தலின் பிரகாரம் கள்ளு வடித்தல் மற்றும் இறக்குதல் தொடர்பில் அனுமதிப்பத்திரத்தை அறிமுகம் செய்வதற்கு |
| 13.06.2018 | மதுவரி அறிவித்தல் இல. 10 / 2018 (2018.06.13 ஆம் திகதிய 2075/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் )<br>2018 / 07 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலை திருத்துவதற்கு |
| 13.06.2018 | மதுவரி அறிவித்தல் இல. 11 / 2018 (2018.06.13 ஆம் திகதிய 2075/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்)<br>கள்ளுத் தவறணை திறக்கும் மற்றும் மூடும் நேரங்களைதிருத்துவதற்கு |
| 03.10.2018 | மதுவரி அறிவித்தல் 12.˙.2018 (2018.10.03 ஆம் திகதிய 2091.˙.50 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>குடிபானமல்லாத ஸ்பிரித்துக்கள் இறக்குமதியின் பேரில் உற்பத்தித் தீர்வையினைக் செலுத்துவதனை விட்டும் இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளுக்கு விலக்களிப்புக்களை வழங்குவதற்கு |
| **துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு** | |
| 05.04.2018 | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு), (2018.04.06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2065 / 42 )<br>அடையாளங் காணப்பட்ட உயர் தொழில்நுட்ப இயந்திர சாதனங்கள் மற்றும் கருவிகளின் இறக்குமதி தொடர்பாக 2.5 சதவீத து.வி.அ.அ சலுகையை வழங்குவதற்கு. |
| 11.07.2018 | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தித் தீர்வை (2018.07.11 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2079 / 34 )<br>அடையாளங் காணப்பட்ட உயர் தொழில்நுட்ப இயந்திர சாதனங்கள் மற்றும் கருவிகளின் இறக்குமதி தொடர்பாக 2.5 சதவீத து.வி.தீ சலுகையை வழங்குவதற்கு. |
| **செஸ் வரி** | |
| 25.07.2018 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2018.07.24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2081/10 )<br>தொகையளவில் ஏற்றுமதிசெய்யப்படுகின்ற தேயிலை கி.கி ஒன்றிற்கு ரூ.10 என்ற வீதத்தில் நிலையாக செஸ் வரியினை அறிமுகம் செய்வதற்கு. |
| 26.09.2018 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2018.09.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல 2090/05)<br>துப்பரவு ஏற்பாட்டு துவாய்களின் இறக்குமதி மீது 30 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ. 300 என்ற வீகிதத்தில் ஏற்புடமையான செஸ் வரியினை மீள் |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | பெயரிடுவதற்கு |
| 17.10.2018 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (2018.10.17 ஆம் திகதிய 2093/19 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>பிடவை மீதான செஸ் வரி வீதத்தினைத் திருத்துவதற்கான கட்டளையினை வெளியிடுவதற்கு |
| **முத்திரைத் தீர்வை** | |
| 01.10.2018 | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2018.10.01 ஆம் திகதிய 2091/3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>மதுபான உரிமப் பத்திரம் (AFL1, AFL2, AFL3, AFL4) மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனை மீது முத்திரைத் தீர்வையினை அமுல்படுத்துவதற்கு |
| **வருமான வரி** | |
| **தாபன வருமான வரி** | |
| 001.04.2018 | மூன்று கட்ட வருமான வரி வீதக் கட்டமைப்பு அறிமுகம் செய்யப்பட்டது.<br>- நியம சதவீதம் 28% - நிதிச் சேவைகள், காப்புறுதி, வர்த்தகம், உற்பத்தி, சலுகை / உயர் வரி வகையின் கீழ் வராத வேறு ஏதும்.<br>- 14 % சதவீத சலுகை வீதம் - சி.ந.தொ.மு, ஏற்றுமதியாளர்கள், விவசாயம், கல்விச் சேவைகள், சுற்றுலா மேம்பாடுகள், சமூகசேவை நிறுவனம், ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் ஓய்வூதிய நிதியம்.<br>- 40 சதவீத உயர் வீதம் - சூதாட்டம் மற்றும் பந்தயம், புகையிலை மற்றும் மதுசாரம். |
| **தனியாள் வருமான வரி** | |
| 01.04.2018 | **வரிவிதிக்கத்தகு வருமானம் ( ரூபா)** — **வரி வீதம்**<br>- முதலாவது 600,000 — 4%<br>- 600,000-1,200,000 — 8%<br>- 1,200,000-1,800,000 — 12%<br>- 1,800,000-2,400,000 — 16%<br>- 2,400,000-3,000,000 — 20%<br>- 3,000,000 மேல் — 24% |
| **ஊழிய வருமானம்** | |
| | ஊழிய வருமானம் தொடர்பில் 24 % சதவீதம் வரி விதிக்கப்படுவதுடன் தனிநபர் ஒருவரின் வரிவிதிதகு வருமானம் தொடர்பில் படிமுறை வரிவிதித்தல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.<br>- ரூ. 250,000.00 முதல் ரூ. 700,000.00 வரை தகமை பெறும் கொடுப்பனவு சலுகை அதிகரிக்கப்பட்டுள்ளது.<br>- ஓய்வூதிய நன்மைகள் தொடர்பில் வரிச் செயற்பாடுகள் மாற்றமடையாது உள்ளது.<br>இரண்டாம் நிலை ஊழியம்<br>- மாதமொன்றுக்கு முதல் 50,000.00 — 10%<br>- மீதிக்கு — 20% |
| **மூலதனக் கொடுப்பனவுக் கட்டமைப்பு** | |
| 01.04.2018 | **விபரம்** — **புதிய வீதம்**<br>- கனணிகள், தரவு கையாளப்படும் உபகரணம் — 20%<br>- வாகனங்கள் — 20%<br>- பொறித்தொகுதி, இயந்திரங்கள் — 20%<br>- கட்டிடங்கள் — 05%<br>- கட்புலனாகா சொத்துக்கள், நன்மதிப்பு நீங்கலாக — மெய் பயன்தரு ஆயட் காலம் அல்லது 5% |
| **நிறுத்தி வைத்தல் வரி** | |
| 01.04.2018 | **வகை** — **வீதம்**<br>வங்கி வைப்பிலிருந்தான வட்டி வருமானம் - சிரேட்ட பிரசைகள் — 5% (வருடமொன்றுக்கு ரூ.1.5 மில்லியனுக்கு அதிகமானவை)<br>பிற — 5% |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | கூட்டு கடன் பிணைமுறி தொடர்பான வட்டி 5% |
| | அரசாங்க பிணைமுறி மீதான வட்டி இல்லை |
| | வாடகை 10% |
| | குறிப்பிட்ட கட்டணம் - ரூ. 50,000 இற்கு மேற்பட்டவை 5% |
| | பங்காண்மை – ஒவ்வொரு பங்காளரினதும் பங்கு மீது 8% |
| | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் ஏல விற்பனையில் இரத்தினக்கல் விற்பனை 25% |
| | ஏனைய அனைத்து விடயங்களும் ( பங்கிலாபம், இறை முதலியன) 14% |
| **மூலதன ஈட்டு வரி மீதான வரி** | |
| 01.04.2018 | காணி மற்றும் கட்டிடங்களின் கைத்தேறிய பெறுகையின் மீது மற்றும் விலை கூறப்பட்ட பங்குகள் தவிர ஏனைய முதலீட்டுச் சத்துக்கள் மீது 10 சதவீதத்தினை செல்லுபடியாக்குவதற்கு |
| **முதலீட்டு ஊக்குவிப்பு திட்டம்** | |
| 01.04.2018 | மதிப்பீட்டு ஆண்டின் போது கற்புலனாகும் சொத்துக்கள் தவிர்ந்த பெறுமானத் தேய்வு செய்யத்தகு சொத்துக்கள் மீது செலவு செய்யத ஒருவர் தொடர்பாக மேம்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு கொடுப்பனவின் அடிப்படையில் புதிய முதலீட்டு கொடுப்பனவுத் திட்டத்தினை அறிமுகப்படத்தவதற்கு |
| **2018 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, காணி ( பாராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.** | |
| 30.07.2018 | காணிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டவர்கள் மீது விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியற்படுத்தப்பட்டுள்ள கம்பனிகள் தொடர்பில் நீக்கப்படுவதற்காக<br>- 4 ஆம் மாடிக்கு கீழ் கொள்வனவு செய்யப்படுகின்ற கூட்டு ஆதன அலகுகள் தொடர்பில் வெளிநாட்டவர்களுக்கான தடைகளை நீக்குவதற்காக |
| **2018 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க தேச கட்டுமான வரி (திருத்தம்)** | |
| 30.07.2018 | - மதுபானம் மீதான செல்லுபடியாகும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியை நீக்குவதற்காக<br>- மோட்டார்மயப்படுத்தாத உபகரணங்கள் மற்றும் நீர் விளையாட்டுக்கான உதிரப்பாகங்கள் போன்ற குறிப்பிட்ட சேவைகளின் மற்றும் இரத்தினக்கல் பட்டை தீட்டல் மற்றும் மீள் ஏற்றமதி செய்தல் தொடர்பானது வரி விலக்களிப்பதற்காக<br>- 2017 ஓகத்து 01 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையொன்றின் கீழ் வழங்கப்பட்ட நிர்மாணிப்புச் சேவைகளை வரி விலக்களிப்பதற்காக |
| **2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தம்)** | |
| 16.08.2018 | - அறை கட்டணங்கள் உள்ளடங்கலாக தனியார் மருத்துவ சேவை வழங்கல் மீது பெ.சே.வரியினை நீக்குவதற்கு அல்லது விலக்களிப்பதற்கு,<br>- நிதிச் சேவைகளின் விநியோகம் மீதான இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டத்தின் வரிவிலக்களிப்பதற்கு<br>- ஏற்றுமதி நோக்கிய கம்பனிகளின் குறிப்பிட்ட சில ஆடைகளின் உள்நாட்டு விற்பனை மிது விதிக்கத்தகு பெ.சே.வரி வீதத்தின் அடிப்படையான துண்டு வீதத்தைக் குறைப்பதற்கு<br>- குழந்தைப் பால்மா, புத்தகங்கள், சஞ்சிகைகள், ஜேர்னல்கள் அல்லது பருவ வெளியீடு போன்ற குறிப்பிட்ட சில வெளியீடுகளை வரி விலக்களிப்பதற்கு<br>- தாவரங்கள் மற்றும் மலர்கள், புடைவைகள், மரங்கள் மற்றும் மரம் சார்ந்த பொருட்கள், பொறி மற்றும் இயந்திர சாதனங்கள் / கைத்தொழில் இராக்கைகள் உள்ளடங்கலாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி அல்லது விநியோகம் தொடர்பான பெ.சே.வரி விலக்கினை நீக்குவதற்கு<br>- 2019 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் கூட்டு ஆதன வீடமைப்பு அலகுகளின் விற்பனை வரி விலக்கினை நீக்குவதற்காக<br>- சுற்றுலா பயணிகளுக்கான பெ.சே.வரி மீளளிப்பு திட்டத்தின் அறிமுகப்படுத்துவதற்கு |
| 18.09.2018 | - சீனி இறக்குமதி அல்லது இறக்குமதி மற்றும் விற்பனை மீது ஏற்புடையதான பெ.சே.வ வீதத்தினை 15% இலிருந்து 0% இற்கு குறைப்பதற்கு |
| 01.11.2018 | - இறக்குமதிப் புடவை மீது பெறுமதிசேர் வரி வீதம் விலக்களிப்பதற்கு |
| 01.11.2018 | - அரியப்பட்ட மரப்பலகை இறக்குமதியின் பேரில் ஏற்புடையதான பெறுமதிசேர் வரி வீதத்தினை 5% இற்கு குறைக்கப்பதற்கு |
| **நிதிச் சட்டம்** | |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **நிதிச் சட்டத்தின் கீழ் புதிய வரிகள் விதிக்கப்பட்டதோடு ஒரு சில வரிகளும் திருத்தியமைக்கப்பட்டன.** | |
| 01.01.2018 | 2018.12.31 அன்று அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திறக்கப்படும் போது வாகன இறக்குமதியாளர்களிடமிருந்து வாகன உரித்து அறவீட்டினை அறவிடுவதற்கும் 2019.01.01 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கின்ற திகதி முதல் இலங்கைச் சுங்கத்தினால் ஆறவீடுசெய்வதற்கும் |
| 01.10.2018 | 2018 ஆம் ஆண்டுக்காக வருடாந்த கம்பனிப் பதிவு அறவீட்டினை விதிப்பதற்கு<br>**கம்பனி வகை** — **வீதம் (ஆண்டொன்றிற்கு ரூபா)**<br>பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி — 1,500,000<br>தனியார் கம்பனி — 30,000<br>ஏனைய பிற கம்பனி — 250,000 |
| 01.10.2018 | பெறுமதி சேர்க்கப்பட்ட நிதிச் சேவைகள் வரிக்காக கணிப்பிடப்பட்ட பெறுமதி சேர்கையின் 7% இல் படுகடன் மீள் கொடுப்பனவு அறவீட்டினை அறிமுகப்படுத்துவதற்கு |
| 01.01.2019 | வாகனத்தின் இயந்திரக் கொள்வனவினை அடிப்படையாகக் கொண்டு மோட்டார் வாகனங்கள் மீது காபன் வரியினை விதிப்பதற்கு |
| 01.01.2019 | செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களிடமிருந்து கோபுரமொன்றுக்கு வருடாந்தம் ரூபா.200,000/- என்ற வீதத்தில் செல்லிடத் தொலைபேசி கோபுர அறவீட்டினை விதிப்பதற்காக, |
| 01.01.2019 | குறுஞ்செய்தியொன்றுக்கு 25 சதத்தில் செல்லிடத் தொலைபேசி குறுஞ்செய்திச் சேவைகள் மீது அறவீடொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் |
| 01.01.2019 | சுற்றுலா அபிவிருத்தி அறவீட்டினை அறிமுகப்படுத்துவதற்கு, |
| 01.11.2018 | இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரித் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படவுள்ள மையச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகளுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மைய ஏற்பாடுகளைத் திருத்துவதற்காக |
| **2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் விதிப்பனவுச் சட்டம்** | |
| 20.09.2018 | இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் உற்பத்தி வரி மீதான பொ.சே.க விதிப்பதற்காக,<br>பொ.சே.க நோக்கத்திற்கு எரிபொருள் விநியோகத்தின் மொத்த விற்பனை செல்லுபடித்தன்மை மொத்த விற்பனையின் பத்தில் ஒரு பங்காக (1∴10) இருப்பதற்காக<br>இலங்கை மத்திய வங்கியின் கைத்தேறாத நாணயமாற்று பயன்களை வரி விலக்களிப்பதற்காக |
| **அறசிறைப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 17.03.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானம் பாதுகாப்புச் சட்டம் (2018.03.16 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2062 / 45)<br>தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதித் தீர்வையை திருத்தம் செய்வதற்கு. (154 பண்டக்குறியீட்டு வகைகள் தொடர்பாக)<br>மீன்பிடி இரைகள், ஹெயார் வலைகள் மற்றும் உயிரியல் அசேதன மற்றும் சேதனமடையக் கூடிய பிலாஸ்டிக் கருவிகளாக பயன்படுத்தப்படும் சிறிய மீன்கள், அக்ரிலிக் தொடர்பாக புதிய பண்டக் குறியீடுகளை உருவாக்குவதற்கு<br>பால் எடுக்கும் பசுக்களுக்கான கஞ்சியாக பயன்படுத்தப்படும் அல்பல்பா மீதான 15 சதவீத தீர்வையை நீக்குவதற்கு<br>லொத்தர் சீட்டுக்கள் மற்றும் தொலைபேசி அட்டைகளின் இறக்குமதி மீதான இறக்குமதித் தீர்வையை ஒரு கிலோவிற்கு 30 சதவீத தீர்வைக்குப் பதிலாக 30 சதவீதம் அல்லது ரூ. 350.00 என்ற இறக்குமதித் தீர்வையை திருத்தம் செய்தல். |
| 18.04.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானம் பாதுகாப்புச் சட்டம் (2018.04.17 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல.2067/ 2)<br>பூச்சியம் 0 முதல் 15 % வரை தங்க இறக்குமதி மீது தீர்வையை அதிகரிப்பதற்காக |
| 01.05.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானம் பாதுகாப்புச் சட்டம் (2018.05.01 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2069 / 2)<br>சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 3,719 பண்டக் குறியீடுகளின் இறக்குமதித் தீர்வையை நீக்குவதற்காக |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 03.05.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானம் பாதுகாப்புச் சட்டம் (2018.05.02 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2069 / 19)<br>நிறையின் மீது 2018 மே, 03 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் பீடி இலைகள் மற்றும் பீடி புகையிலை மீதான சுங்க இறக்குமதித் தீர்வையை விதிப்பதற்காக<br>சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 3,719 பண்டக் குறியீடுகளின் இறக்குமதித் தீர்வையை நீக்குவதற்காக |
| 16.05.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானம் பாதுகாப்புச் சட்டம் (2018.05.15 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2071 / 15)<br>உள்நாட்டுச் சந்தை தொடர்பாக எரிபொருள் விலையிடல் சூத்திரத்தினை அறிமுகப்படுத்துவதற்காக |
| 11.07.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானம் பாதுகாப்புச் சட்டம் (2018.07.10 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2079 / 32)<br>- மதுவரி விதிப்பதற்காக 100 மி.லீ இற்கு 6 மி. கி. இற்கு அதிகமான பழச்சாறு உற்பதி தொடர்பாக புதிய பண்டக் குறியீட்டை அறிமுகம் செய்வதற்காக<br>முன்னைய 30 மு தீர்வை வீதம் அல்லது ஒரு கிலோ கிராமிற்கு ரூ. 250 என்ற வீதத்தில் பீடி இலை இறக்குமதி மீது தீர்வையை திருத்தம் செய்வதற்காக |
| 20.07.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானம் பாதுகாப்புச் சட்டம் (2018.07.19 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2080 / 42<br>இலங்கை சிங்கப்பூர் (சு.வ.வ) இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட 182 பொருட்கள் தொடர்பாக சுங்க இறக்குமதித் தீர்வை விடுதலையை வழங்குவதற்காக |
| 09.10.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அறசிறைப் பாதுகாப்புச் சட்டம் (2018.10.08 ஆம் திகதிய 2092/8 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>பாம் எண்ணெய்க் கொழுப்பமிலம் மற்றும் கால்நடை கொழுப்பமிலம் என்பனவற்றிற்கு புதிய எச்.எஸ் குறியீடுகளை அறிமுகப்படுத்துவதற்காக<br>-குந்தியிருந்து மலங்கழிக்கும் பாத்திரம் இறக்குமதியினால் ஏற்பட முடியுமான பாதிப்பிலிருந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் வகையில் சுங்க இறக்குமதித் தீர்வையினைத் திருத்துவதற்காக |
| 16.11.2018 | 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம் (2018.11.15 ஆம் திகதிய 2097/36 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்)<br>பெற்றோல் இறக்குமதியின் பேரில் சுங்க இறக்குமதித் தீர்வையினை லீற்றர் ஒன்றுக்கு ரூபா 35 இல் திருத்தியமைப்பதற்காக |
| **விசேட வியாபாரப் பண்ட அறவீடு** | |
| 19.01.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.01.18 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2054 / 40 )<br>கட்டியாக்கப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட வெண்கட்டி மீதான சலுகை வீதத்தை அறிமுகம் செய்தல். கட்டியாக்கப்பட்ட அல்லது மாவாக்கப்பட்ட வெண்கட்டி, மாசிக் கருவாடு மற்றும் உழுந்து போன்றவை உள்ளடங்கலாக 7 பண்டங்கள் மீதான வி.வ.ப.அ. தற்பொழுதைய செல்படியாகும் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்புச் செய்வதற்காக |
| 01.02.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.01.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2056 / 33 )<br>6 மாத காலத்திற்கு சோளம் இறக்குமதி தொடர்பில் ஒரு கிலோ கிராமிற்கு ரூ. 10.00 வி.ப.அ. அறிமுகம் செய்வதற்காக |
| 16.02.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.02.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2058 / 30 )<br>6 மாத காலத்திற்கு சீனிக்கான செயல்வலுப் பெறும் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக |
| 24.02.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.02.23 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2059 / 52 )<br>ஒரு கிலோ கிராம் உருழைக் கிழங்கிற்கு ரூ. 30.00 வி.ப.அ. அதிகரிப்புச் செய்வதற்காக |
| 08.03.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.03.07 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2061 / 22 )<br>6 மாத காலத்திற்கு டின் மீன், கொண்டக் கடலை, கடலை, கௌபி, குரக்கன் போன்றவற்றிற்கான செயல்வலுப் பெறும் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக |
| 20.03.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| | (2018.03.19 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2058 / 30 ) உழுந்து இறக்குமதி தொடர்பில் விசேட வியாபார பண்ட அறவீடான கிலோ கிராமிற்கு ரூ. 100.00 என்ற வீதத்தினை நீக்குவதற்காக. |
| 01.04.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.04.01 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2058 /30) உருழைக்கிழங்கு, அரிசி, யோகட், பட்டர், வெள்ளைப்பூடு, தோடம்பழம், திராட்சை, அப்பிள், மத்தை விதை, குரக்கன், நிலக்கடலை, கடுகு மற்றும் உப்பு தொடர்பாக தற்பொழுதைய தீர்வை வீதங்களுடன் மேலும் செல்லுபடியாகும் காலத்தை 6 மாதங்களினால் நீடிப்புச் செய்வதற்காக |
| 02.05.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.05.01 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2069 / 18) ஒரு கீலோ கிராம் உருழைக்கிழங்கிற்கு ரூ 30.00 இருந்து ரூ. 40.00 ஆகவும் ஒரு கீலோ கிராம் பெரிய வெங்காயத்திற்கு ரூ. 1.00 இருந்து ரூ. 40 இறக்குமதியின் போது தீர்வையை அதிகரிப்பதற்காக |
| 08.05.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.05.08 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2070 / 2) 6 மாத காலத்திற்கு 11 வியடங்கள் தொடர்பாக தற்பொழுதைய விசேட வியாபாரப் பண்டத் தீர்வையின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக |
| 09.05.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.05.09 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2070/06 ) மொத்த உடைத்த பருப்பு இறக்குமதி தொடர்பில் இறக்குமதி செய்யப்பட்ட தீர்வையை கிலோ கிராமிற்கு ரூ. 7.00 இருந்து ரூ. 12.00 வரை அதிகரிப்பதற்காக |
| 21.05.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.05.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2071/85 ) மேலும் 6 மாத காலத்திற்கு தற்பொழுதைய விசேட வியாபாரப் பண்டத் தீர்வையின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக |
| 01.06.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.05.31 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2073/ 37 ) தற்பொழுதைய சந்தை விலையின் நிலைத்தன்மையை முன்னைய வருட நிறைவுடன் ஒப்பீடு செய்து தேங்காய் மற்றும் அதனோடு இணைந்த உற்பத்திகள் தொடர்பில் ஒரு கிலோ கிராமிற்கு ரூ. 20.00 தீர்வையை அதிகரிப்பதற்காக |
| 14.06.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.06.14 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2075/31 ) மீன் வகைகள் மற்றும் தேய்காய் மீதான தற்பொழுதைய வி.வ.ப. அறவீட்டுக் செயல்வலுக் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக<br>இறக்குமதி செய்யப்பட்ட உழுந்து கிலோ ஒன்றுக்கு ரூ. 100.00 இருந்து ரூ. 150.00 ஆக ஒரு கிலோவுக்கு அதிகரிப்பதற்காக |
| 19.07.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.07.18 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2080 / 36 ) 7 பொருட்கள் மீது தற்பொழுதைய வி.வி.ப. அறவீட்டு செல்லுபடிக் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக |
| 01.08.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.08.01 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2082 / 31 ) இறக்குமதியின் போது சகல வகையான மீன் வகைகள் தொடர்பாக 10 % அல்லது ஒரு கிலோவிற்கு ரூ. 100.00 இருந்து ரூ. 25.00 ரூ வரை இரண்டு மாத காலங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் இறக்குமதித் தீர்வையைக் குறைப்பதற்காக |
| 09.08.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.08.08 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2083 / 09 ) 6 மாத காலம் தொடர்பாக சோள இறக்குமதி தொடர்பில் ஒரு கிலோ கிராமிற்கு ரூ. 10.00 வி.வ.ப. அறவீட்டை அறிமுகம் செய்வதற்காக |
| 16.08.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.08.16 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2084 / 30 ) சீனி மீதான தற்பொழுதைய வி.ப.அ. செல்லுபடியாகும் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக |

| பயன் வலுப் பெறும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 25.08.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.08.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2085 / 36 ) சமையல் எண்ணை இறக்குமதி தொடர்பில் ரூ. 20.00 தீர்வையொன்றை அதிகரிப்பதற்காக |
| 07.09.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.09.07 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2087 / 76 ) மேலும் ஒரு வருடத்திற்கு தற்பொழுது நடைமுறையில் உள்ள இறக்குமதித் தீர்வை செல்லுபடியாகும் காலத்தை நீடிப்புச் செய்வதற்காக |
| 18.09.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.09.17 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2089 / 19 ) இறக்குமதி செய்யப்படும் சீனி மீதான வி.வ.ப. அறவீட்டை நீக்குவதற்காக |
| 01.10.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் ( 2018.09.29 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் இல. 2090 / 47 ) மீன் இறக்குமதி தொடர்பில் தீர்வையை அதிகரிப்பதற்கும் யோகட், வெள்ளைபூடு, தோடம்பழங்கள், திராட்சை, அப்பள் முதலியன உள்ளடங்கலான பிற 11 பொருட்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்காக. |
| 02.11.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.11.01 ஆம் திகதிய 2095/16 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் மீது தற்போது பயன்வலுப் பெறுகின்ற தீர்வை விகிதத்தினை மேலும் 31 நாட்களுக்கு நீடிப்புச் செய்வதற்காக |
| 02.11.2018 | 2017 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம் (2018.11.01 ஆம் திகதிய 2095/21 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) இறக்குமதி செய்யப்படும் கொண்டைக் கடலை மற்றும் பருப்பு என்பனவற்றை கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 5 இனாலும், உழுந்து கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 25 இனாலும் தீர்வை விகிதத்தினைக் குறைப்பதற்கு,பளிங்கு நிற சீனி கி.கிராம் உன்றுக்கு ரூபா 32 இனையும், கபில நிற சீனிக்கு கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 35 இனையும் விசேட வியாபாரப் பண்ட அறவீடாக மீள அமுல்படுத்துவதற்கு, |
| 08.11.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2018.11.07 ஆம் திகதிய 2096/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) பாசிப்பயறு, மங்குஸ்தான், உலர்த்திய தோடம், பெயர்ஸ், செறிப் பழம் உள்ளடங்களாக 10 பொருட்கள் மீது தற்போது பயன்வலுப் பெறுகின்ற விசேட பண்ட அறவீட்டினை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்புச் செய்வதற்காக |
| 24.11.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2018.11.23ஆம் திகதிய 2098/27 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்) வடானாப் பருப்பின் இறக்குமதித் தீர்வை விகிதத்தினை கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 10 ஆல் குறைப்பதற்காக |
| 03.12.2018 | 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு (2018.12.03 ஆம் திகதிய 2100/2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் இறக்குமதித் தீர்வை விகிதத்தினை கி.கி ஒன்றுக்கு ரூபா 20 ஆல் குறைப்பதற்காக |
| **நிருவாக மாற்றங்கள்** | |
| 28.04.2018 | 12.5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்று தொடர்பாக ரூ. 245 வினால் உள்நாட்டு எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது. |
| 05.05.2018 | பால் மாவின் சில்லறை விலை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 50 ஆல் அதிகரிக்கப்பட்டது. |
| 30.06.2018 | 12.5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்று தொடர்பாக ரூ. 138 வினால் உள்நாட்டு எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது. |
| 27.09.2018 | 12.5 கிலோ கிராம் சிலிண்டர் ஒன்று தொடர்பாக ரூ. 195 வினால் உள்நாட்டு எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது. |

## 1.3 அரச செலவினம்

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் அரச செலவினம் ரூ. 2,500 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் ரூபா 1,951 பில்லின் மீண்டுவரும் செலவினமாகவும் ரூபா 549 பில்லியன் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் பெறுகையாகவும் காணப்பட்டது.

### ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் ஓய்வூதியம்

மாகாண சபைகளின் அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அனைத்து அரச உத்தியோகத்தர்களின் வேதனாதிகள் 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் 5.3 சதவீத அதிகரிப்புடன் ரூபா 750 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதிக்கான செலவுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 712 பில்லியனாக காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டிலிருந்தான அடிப்படைச் சம்பளங்களின் மீதான அதிகரிப்பு இதற்கான காரணமாகும். அரச உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2017 இன் மீளாய்வுக் காலத்தில் பதிவாக்கிய ரூபா 167 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 இன் இதே காலப்பகுதியில் ரூபா 178 பில்லியனுக்கு 6.5 சதவீதத்தினால் அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அரச செலவினத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தின.

**அட்டவணை 1.12 | அரசாங்க செலவினத்தின் செயலாற்றுகை**

*ரூபா. மில்*

| விடயம் | சன - நவ 2017 | 2018 (அ) |
|---|---|---|
| **நடைமுறைச் செலவினம்** | **1,684,876** | **1,951,042** |
| சம்பளங்கள் | 545,302 | 572,700 |
| ஓய்வூதியம் | 166,745 | 177,710 |
| வட்டி | 605,271 | 809,258 |
| ஏனையவை | 367,558 | 391,374 |
| **மூலதனச் செலவினம்** | **478,353** | **495,954** |
| **பொது படுகடன் மீள் கொடுப்பனவு** | **831,831** | **1,195,242** |
| **மொத்தம்** | **2,995,060** | **3,642,238** |

*மூலம்: தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*
*(அ)தற்காலிகமானது*

### வட்டிக் கொடுப்பனவு

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டி செலுத்துகை 2017 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் பதிவாக்கிய ரூ. 605 பில்லியனிலிருந்து 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்கள் வரையில் ரூ. 809 பில்லியனாக 33.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இந்த மொத்த ரூ.809 பில்லியனிலிருந்து ரூ. 634பில்லியன் உள்நாட்டுக் கடன்களுக்காகவும் ரூ.176 பில்லியன் வெளிநாட்டுக் கடன்களுக்காகவும் செலவிடப்பட்டது. வட்டி வீதத் தலம்பல்கள் மற்றும் அந்நியச் செலாவணி வீதம் என்பன காரணமாக இவ்வதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

**அட்டவணை 1.13 | அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நாணய வீதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு: 2017-2018**

| காலப்பகுதி | | திறைசேரி உண்டியல் (மு) | | | திறைசேரி முறிகள் (மு) | | | | நாணய மாற்று வீதங்கள் ரூபா/ஐ.அ.டொ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருட | 3 வருட | 4 வருட | 5 வருட | |
| 2017 | சன | 9.03 | 10.07 | 10.37 | 11.41 | - | - | 12.19 | 150.09 |
| | பெப் | 9.32 | 10.19 | 10.58 | 12.10 | - | - | 12.89 | 150.82 |
| | மார் | 9.63 | 10.62 | 10.98 | 12.30 | - | - | - | 151.43 |
| | ஏப் | 9.73 | 10.70 | 11.02 | 11.21 | - | - | 11.55 | 151.76 |
| | மே | 9.61 | 10.35 | 10.71 | 11.07 | - | - | 11.42 | 152.33 |
| | யூன் | 9.6 | 10.29 | 10.47 | - | - | 11.37 | - | 152.83 |
| | யூலை | 9.44 | 9.71 | 9.99 | - | - | 11.14 | 10.43 | 153.67 |
| | ஓகத் | 8.87 | 9.30 | 9.67 | 9.83 | - | - | - | 153.19 |
| | செத் | 8.71 | 9.01 | 9.10 | - | - | - | 10.09 | 152.90 |
| | ஒக்த் | 8.75 | 9.10 | 9.48 | - | 9.92 | - | - | 153.53 |
| | நவம் | 8.20 | 8.88 | 9.44 | - | - | - | 10.2 | 153.66 |
| | திசெ | 7.69 | 8.30 | 8.90 | - | 9.55 | - | - | 153.15 |
| 2018 | சன | - | 7.95 | 8.90 | - | - | - | 9.44 | 153.80 |
| | பெப் | 8.24 | 8.52 | 9.59 | - | 9.85 | - | - | 154.86 |
| | மார் | 8.17 | - | 9.69 | - | - | - | 10.68 | 155.73 |
| | ஏப் | 8.1 | - | 9.59 | - | 9.79 | - | - | 153.14 |
| | மே | 8.34 | 8.93 | 9.62 | - | - | - | 10.51 | 157.90 |
| | யூன் | 8.32 | 8.85 | 9.39 | - | - | - | - | 159.07 |
| | யூலை | 8.24 | 8.74 | 9.27 | - | - | - | - | 159.34 |
| | ஓகத் | 8.03 | 8.6 | 8.99 | - | - | - | 9.91 | 160.35 |
| | செத் | 8.56 | - | 9.51 | | 10.03 | | | 164.42 |
| | ஒக்த் | 9.48 | 9.75 | 10.39 | | | | 11.69 | 171.22 |
| | நவம் | 10.01 | 9.99 | 11.2 | | | | | 176.85 |

*மூலம்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் பொதுப் படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

**நலன்புரிச் செலவினங்கள்**

2018 ஆம் ஆண்டின் சனவரி முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதியில் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவு ரூபா 175 பில்லியனாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பிரிவில் அது ரூபா 162 பில்லியனாகக் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் சுகாதாரப் பிரிவில் ‘அனைவருக்கும் இலவசமாக மருந்துகள்’, திரிபோசா நிகழ்ச்சித்திட்டம் மற்றும் போசணைப் பொதி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினங்கள் அதிகரித்தமை இதற்குரிய காரணங்களாகும். அனைவருக்கும் இலவசமாக மருந்து நிகழ்ச்சித்திட்டம் என்பது அதிக செலவை எடுத்துக்காட்டிய நலன்புரி நிகழ்ச்சித்திட்டமாக காணப்பட்டது. கல்விப் பிரிவுக்கான செலவினங்களும் இக்காலப் பிரிவில் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தில் வாழ்வாதார உதவியான சமுர்த்தி மற்றும் உர மானியம் என்பன 2018 ஆம் ஆண்டின் குறித்த காலப்பகுதிக்கான நிகழ்ச்சித் திட்டங்களில் முக்கிய நிகழ்ச்சித் திட்டங்களாக காணப்பட்டன. அது தவிர அங்கவீனமுற்ற படைவீரர் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவினம் ரூபா 28 பில்லியன் உள்ளடங்கலாக சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பு வலையமைப்பு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 50 பில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. அது நூற்றுக்கு 12 சதவீத அதிகரிப்பைக் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் மீளாய்வுக் காலத்தில் பதிவாக்கியிருந்தது.

**அட்டவணை 1.14 | நலனோம்புச் செலவினம்**

*ரூபா. மில்*

| விடயம் | சன - நவ 2017 | சன - நவ 2018 (அ) |
|---|---|---|
| **சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசாக்கு** | **38,349** | **46,834** |
| அனைவருக்கும் இலவச மருந்து | 32,077 | 40,147 |
| திரிபோசா நிகழ்ச்சித் திட்டம் | 1,542 | 1,728 |
| பாடசாலை மாணவர்களுக்கான தூய பசுப்பால் | 131 | 205 |
| போசனைப் பொதி | 4,599 | 4,754 |
| **கல்வி உதவிகள்** | **15,402** | **16,799** |
| இலவசப் பாடநூல்கள் | 3,288 | 3,877 |
| இலவச சீருடைகள் | 1,184 | 920 |
| பாடசாலை பருவகால சீட்டுக்கள் | 4,923 | 4,009 |
| பாடசாலை போசாக்குணவு | 3,721 | 4,751 |
| பாடசாலை பிள்ளைகளுக்கான பால் | 212 | 374 |
| கஷ்ட மற்றும் அதி கஷ்ட பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் | 220 | 208 |
| ஐந்தாம் தர புலமை பரிசில் | 310 | 217 |
| மஹாப்பொல புலமைப்பரிசில் | 528 | 1,292 |
| உதவு தொகை | 358 | 605 |
| தம்ம பாடசாலை பாடநூல்கள் | 191 | 57 |
| தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகள் | 34 | 93 |
| தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான உதவி | 433 | 397 |
| **வாழ்வாதார உதவிகள்** | **61,034** | **60,927** |
| உர மானியங்கள் | 22,445 | 23,881 |
| உர மானியங்கள் (பெருந்தோட்டம்) | 1,115 | 69 |
| சமுர்த்தி நிவாரணம் | 36,440 | 36,008 |
| மீள் பயிரிடலுக்கான உதவி (இறப்பர் / தேயிலை) | 954 | 770 |
| ஏற்றுமதிப் பயிர்கள் அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கு உதவி | 80 | 199 |
| **சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பும்** | **46,744** | **50,252** |
| மாற்றுத் திறனாளிகள், சிறுநீரக நோயாளர்களுக்கான உதவிகள் | 1,754 | 2,236 |
| முதியோர்களுக்கான உதவிகள் | 8,262 | 8,773 |
| மாற்றுத் திறனாளிகளான படை வீரர்களுக்கான உதவிகள் | 25,459 | 27,734 |
| ரணவிரு பெற்றோர்களுக்கான சமூகப் பாதுகாப்பு | 2,197 | 2,187 |
| உணவு உதவி, வெள்ள, வரட்சி நிவாரணம் | 4,072 | 4,393 |
| சிக்கனமற்ற வீதிகளுக்கான பஸ் சேவைகள் | 5,000 | 4,929 |
| **மொத்தம்** | **161,529** | **174,812** |

*மூலம்: தேசிய வரவு செலவுத் திட்டம்*
*(அ) தற்காலிகமானது*

## பொது முதலீடு

2018ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் நெடுஞ்சாலைகள், நீர் வழங்கல், நீர்ப்பாசன, போக்குவரத்து, விவசாயம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி உள்ளடங்களாக அரசாங்க முதலீட்டுக்கான செலவினம் ரூ.496 பில்லியனாகக் காணப்பட்டது. இதனை 2017 ஆம் ஆண்டு அக்காலப் பகுதிக்கான முதலீட்டுச் செலவினம் ரூ. 478 பில்லியன் ஆகக் காணப்பட்டது.

## கடன் மீள் செலுத்தல்

அரச வளங்களில் பிரதான பகுதி படுகடன்களை திருப்பிச் செலுத்துவதற்காக தொடர்ந்தும் பயன்படுத்தப் பட்டது. 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் மீள் செலுத்தப்பட்ட படுகடன்களின் பெறுமதி ரூபா 1195 பில்லியனாக காணப்பட்டதோடு 2017 ஆம் ஆண்டின் அக்காலப் பகுதியுடன் ஒப்புநோக்கும் போது அது ரூபா 832 பில்லியனாக 43.6 சதவீத அதிகரிப்பினால் அதிகரித்துள்ளது. அதில் ரூ. 929 பில்லியன் உள்நாட்டுக் கடன்களுக்காவும் ரூ.266 பில்லியன் வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்காகவும் மீளாய்வுக் காலத்தில் செலவிடப்பட்டுள்ளது.

## 1.4 திறைசேரி செயற்பாடுகள்

### பொதுத் திறைசேரி காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை

2018 இன் முதல் பதினொரு மாதங்களின் போது வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்தான திறைசேரிக்கான அரசாங்கத்தின் காசுப் உட்பாய்ச்சலானது 2017 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 1,606 பில்லியனிலிருந்து ரூபா 1,766 பில்லியனுக்கு 10 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதே காலப்பகுதியில், நடைமுறை மற்றும் பொது முதலீடுகளுக்குப் மொத்த காசு வெளிப்பாய்ச்சலானது முன்னைய ஆண்டுக்கெதிராக ரூபா 2,165 பில்லியனிலிருந்து ரூபா 2,394 பில்லியனுக்கு 10.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதியுள்ளவாறு, மொத்த காசுப் பற்றாக்குறையானது ரூபா 628.2 பில்லியனாக காணப்பட்டதோடு, 2017 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ரூபா 559 பில்லியனோடு ஒப்பிடுகையில், இது 12.4 சதவீத அதிகரிப்பாகும். இதற்கு பொதுத் திறைசேரிக்கான காசு உட்பாய்ச்சல் 10.0 சதவீதத்தினால் அதிகரித்தும் அதற்கெதிராக மூலதனச் செலவினத்திற்காக காசு வெளிப்பாய்ச்சல் 16.8 சதவீதத்தினால் அதிகரித்தமையே பிரதான காரணமாக அமைந்துள்ளது. இதே காலப்பகுதியில், தொழிற்பாட்டு செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ஒட்டுமொத்த காசு இருப்பு இறுதி மீதி மற்றும் வங்கி மீதி என்பனவற்றில் 2018 இன் நவம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 225.3 பில்லியனுக்கு 2017 இன் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் அதிகரிப்பதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

**அட்டவணை 1.15 | அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் தொழிற்பாடு மீதான கூற்று**

*ரூபா.பில்*

| விடயம் | 2017<br>சன – நவம்<br>மெய் | 2018<br>சன – நவம்<br>மதிப்பீடு | <br><br>மெய் |
|---|---|---|---|
| சனவரி 1 அன்றுள்ளவாறு ஆரம்ப காசு மீதி | (160.3) | (186.2) | (186.2) |
| வருமானம் மற்றும் பிற பெறுகைகளிலிருந்தான மொத்த காசு உட்பாய்ச்சல் | 1,606.2 | 1,952.8 | 1,766.1 |
| நடைமுறைச் செலவினங்களுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | (1,695.7) | (1,954.7) | (1,845.8) |
| மூலதனக் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல் * | (465.5) | (760.1) | (548.5) |
| தேறிய காசு மிகை (பற்றாக்குறை) | (559.0) | (762.0) | (628.2) |
| மொத்த பெறுகை * | 1,363.8 | 1,822.4 | 1,782.2 |
| படுகடன் மீள் கொடுப்பனவு | (834.4) | (1,116.2) | (1,191.1) |
| தேறிய பெறுகை | 529.4 | 706.2 | 591.1 |
| (சரிப்படுத்தல் கணக்கு மீதி (ரீஇபி, தேறிய வைப்புகள் போன்றன) | 9.7 | - | (2.0) |
| நவம்பர் 30 அன்றுள்ளவாறு இறுதி காசு மீதி | (180.2) | (242.0) | (225.3) |

*மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**2016 யூலை 31 அன்றுள்ளவாறு CS-DRMS இல் பதிவாக்கிய அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம்*

### அரசாங்க படுகடன் முகாமை

2018 ஆம் ஆண்டுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன்பெறுகை எல்லையானது ரூபா 1893.8 பில்லியனாக காணப்பட்டதோடு, அதில் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் நவம்பர் மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்காக அரசாங்கத்தின் கடன் பெறுகைகள் ரூபா 1782.2 பில்லியனாகும். மொத்த பெறுகை எல்லையானது இக் காலப்பகுதியில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் செயற்பாடுகளுக்கு நிதியிடுவதற்காக வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 704.1 பில்லியனினையும் உள்நாட்டுக் கடன் பெறுகை மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 1078.1 பில்லியனினையும் உள்ளடக்கியுள்ளது. திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன இக் காலப்பகுதிக்காக அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் பெறுகையின் பிரதான மூலங்களாகக் காணப்பட்டன. அதற்கமைய, மொத்த உள் நாட்டுப் பெறுகைகளின் ஏறக்குறைய 65

சதவீதமான பெறுகைகள் திறைசேரி முறிகள் மூலமும் மொத்த உள்நாட்டு பெறுகைகளின் ஏறக்குறைய 22 சதவீதமான பெறுகைகள் திறைசேரி அபிவிருத்தி முறிகள் மூலம் பெறப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, உள்நாட்டுப் பெறுகைகள் 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளிநாட்டு நாணய படுகடன் சேவைக் கொடுப்பனவில் பகுதியளவில் நிதியளிப்புச் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டதோடு, ஆண்டின் இரண்டாம் காலாண்டில் விநியோகிக்கப்பட்ட சர்வதேச நாணய முறிகளிலிருந்தான பெறுகைகள் வெளிநாட்டு நாணய படுகடன் சேவைக் கொடுப்பனவுகளுக்கு பூரணமாக நிதியளிப்புச் செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டன. இக்காலப்பகுதியின் இறுதி யிலுள்ளவாறாக தேறிய பெறுகையானது ரூபா 591.1 பில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 1.16 | சாதன அடிப்படையில் மொத்த உள்நாட்டுப் பெறுகைகள்**

*ரூபா.பில்*

| சாதனங்கள் | சன – நவம் 2018 |
|---|---|
| திறைசேரி முறிகள் | 705.6 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 234.1 |
| வெளிநாட்டு நாணய வங்கியடல் அலகு | 62.4 |
| திறைசேரி உண்டியல்கள் (தேறிய) | 51.0 |
| இலங்கை மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 25.0 |
| **மொத்தம்** | **1,078.1** |

*மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**வரைபு 1.4 | சாதன அடிப்படையில் மொத்த உள்நாட்டுப் பெறுகைகள் (சனவ - நவம் 2018)**




### திறைசேரி உத்தரவாதங்கள் மீதான நானாவித பொறுப்புக்களை வெளிப்படுத்தல்

2016 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) (திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் ஏற்புடையதாகும் விநியோகிக்கப்படாதிருக்கும் திறைசேரி உத்தரவாதங்களின் பெறுமதி எல்லையானது ரூபா 1,076.9 பில்லியனாகும்.

## 1.5 வெளிநாட்டு நிதியளிப்பு

### வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்பாடுகள்

நடுத்தரக் கால அரசிறை வேலைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பேரண்ட பொருளாதார இலக்குகளை அடையும் வகையில், பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் 2018 சனவரி 01 ஆந் திகதி முதல் 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்கள்/கடன் வழங்கும் முகவர் நிறுவனங்கள் என்பவற்றுடன் ஐ.அ.டொ. 1,131.2 மில்லியன் பெறுமதியான முப்பத்து ஐந்து (35) நிதியளிப்பு அர்ப்பணிப்பு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளன.

2018 சனவரி முதல் - நவம்பர் வரையான காலப்பகுதியில் அபிவிருத்தி செயற்பாடு களுக்காக வழங்கப்பட்ட மொத்த நிதி உடன்பாடுகளில், இக்காலப்பகுதியில் அதிகபட்ச உடன்பாடாக, ஆசிய அபிவிருதி வங்கி ஐ.அ.டொ. 438.0 மில்லியன் பெறுமதியான உடன்பாடுகளை வழங்கியுள்ளதோடு, அதனைத் தொடர்ந்து முறையே உலக வங்கி (ஐ.அ.டொ.

104.0 மில்லியன்) யப்பான் (ஐ.அ.டொ.98.2 மில்லியன் மற்றும் சீனா (85.0 மில்லியன்) எனவும் உடன்பாடுகளை வழங்கயுள்ளன. அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்காக பெறப்பட்ட இத்தகைய உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கு மேலதிகமாக, அரசாங்கம் ஒவ்வொன்றும் ஐ.அ.டொ. 1,250 மில்லியன் தொகையான இரண்டு வெளிநாட்டு நாணய முறிகளை வெளியிட்டதுடன் அவை முறையை 5.75 சதவீதம் மற்றும் 6.75 சதவீத வட்டி வீதத்தையும் 5 தொடக்கம் 10 வருட கால முதிர்வுகளையும் கொண்டுள்ளன. அத்துடன், வெளிநாட்டு நாணய நியதிக் கடன் திட்டத்திலிருந்தும் ஐ.அ.டொ.1,000 மில்லியன் பெறுமதியான கடனினையும் அரசாங்கம் பெற்றுள்ளது.

ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் பாடுகளை துறைசார்து நோக்குகையில், அதிகூடிய தொகை கல்வி மற்றும் பயிற்சிக்கும் (ஐ.அ.டொ. 269.0 மில்லியன்கள்) அதனைத் தொடர்ந்து சுற்றாடல் (ஐ.அ.டொ.210.0 மில்லியன்) சுகாதாரம் மற்றும் சமூக நலன்புரி (ஐ.அ.டொ.157.1 மில்லியன்கள்), வீதி மற்றும் பாலங்கள் (ஐ.அ.டொ.144.1 மில்லியன்கள்), புகையிரத துறை (ஐ.அ.டொ. 79.8 மில்லியன்கள்) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் துறை (ஐ.அ.டொ.75.0) எனவும் உடன்பட்டுள்ளன.

**வரைபு 1.5 | துறை ரீதியான அர்ப்பணிப்பு (2018 சனவரி 01 முதல் நவம்பர் 30 வரையில்) (ஐ.அ.டொ.மில்)**




*ஏனையவை: நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடுகள், மகளிர் விவகாரம், மனிதாபிமான உதவிகள்*

## அட்டவணை 1.17|2018 சனவரி 01 முதல் நவம்பர் 30 வரையில் நிதியங்களுடனான வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புக்கள்

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் முகவர் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி (ஆண்டு/ மாதம்/திகதி) | கருத்திட்டம் / நிகழ்ச்சித் திட்டம் / சாதனத்தின் பெயர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நியதிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | நியதிகள் | | | | | |
| | | | | | | | | வட்டி | | | | | |
| | | | | நாணயம் | சாதன நாணயத்தில் | ரூபா. | ஐ.அ. டொ | வகை | வருடாந் த விகிதம் (%) | அண்ணளவாக (100) அடிப்படை புள்ளிகள் | ஏணைய கட்டணங் கள் | சலுகைக் காலம் (ஆண்டு கள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கை திகதியிலிருந் தான காலம் |
| **இருதரப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்பு** | | | | | | | | | | | | | |
| அவுஸ்திரேலியா | மானியம் | 2018/01/30 | துணை உடன்படிக்கைகள் ( நல்லாட்சி / வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்) | அவு.டொ. | 31 | 3,850.9 | 25 | ஏற்புடையதாகாது | | | | | 3 |
| பிரான்ஸ் | கடன் | 2018/10/17 | பசுமைச் சக்தி அபிவிருத்தி திட்டச் செயலாககம், வலுச்சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கட்டம்2 | யூரோ | 30 | 5,930.90 | 34.7 | மாறக்கூடிய | யுரிபோர் | 1.2 | உடன்பாட்டுக் கட்டணம் 0.5% மதிப்பீட்டுக் கட்டணம் 0.5% | 5 | 20 |
| | கடன் | 2018.9/28 | பிரான்ஸ் இலகு கடன் திட்டத்தின் கீழ் சிறிய பாற்பண்ணைகளை அபிவிருத்திசெய்தல் | யூரோ | 13.9 | 2,739.60 | 16.2 | நிலையானது | 0.0016 | ஏற்புடையதாகாது | இல்லை | 10 | 34 |
| யப்பான் | மானியம் | 2018/06/26 | மனித வள அபிவிருத்தி புலமைப்பரிசில் செயற்திட்டம் | யென் | 265.0 | 384.2 | 2.4 | ஏற்புடையதாகாது | | | | | 3 |
| | கடன் | 2018/07/11 | சுகாதார மற்றும் மருத்துவச் சேவை மேம்பாட்டு செயற்திட்டம் | யென் | 10,639.0 | 15,260.6 | 95.8 | நிலையானது | 0.1 செலவின காலத்தின் போது, 0.01 பதில் வழங்கல் காலத்தின் போது | ஏற்புடையதாகாது | முன்னோக்கிய கட்டணம் யென் 10.6 மில்லியன்கள் | 12 | 40 |
| கொரியா | மானியம் | 2018/05/15 | கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி சுற்றாடல் மேம்பாட்டு செயற்திட்டம் | ஐ.அ.டொ | 7.5 | 1,184.4 | 7.5 | | | ஏற்புடையதாகாது | | | 3 |
| | கடன் | 2018.06.28 | தென்னிலங்கையில் கழிவுகளைத் திரட்டும் | ஐ.அ.டொ | 7 | 1,110.70 | 7 | வட்டியற்ற | | | - | 10 | 30 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கொம்பக்டெர்களை வழங்கல் | | | | | | | | | | |
| | கடன் | 2018.06.28 | வடக்கு, மத்திய மாகாணங்களுக்கு கழிவுகளைத் திரட்டும் கொம்பக்டெர்களை வழங்கல் | ஐ.அ.டொ | 7 | 1, 110.70 | 7 | வட்டிய ற்ற | | | | 10 | 30 |
| சீனா | கடன் | 2018/06/07 | 64.31 கி.மீ. பாதை அகலமாக்கல் மற்றும் மேம்பாடு மற்றும் இலங்கையின் மத்திய மற்றும் ஊவா மாகாணத்தில் 13 பாலங்கள் நிர்மாணிப்பு | ஐ.அ.டொ | 85 | 13,482.3 | 85 | மாறக் கூடிய | ஐ.அ.டொ க்கான 6 மாதம் லிபோர் | 2.9 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.5%, முகாமைகட்டணம் 424,944.77, காப்புறுதி கட்டணம் 1.4 மில்லியன் | 3 | 18 |
| எச்எஸ்பிசி (ஹொங்கொங்) | கடன் | 2018/04/27 | இலங்கை புகையிரத மலைநாட்டுக்கான லைன் ஒபரேட்டஸ் டீசல் பல்பக்க அலகுகள் 09 இன் கொள்வனவு | ஐ.அ.டொ | 79.8 | 12,578.2 | 79.8 | மாறக் கூடிய | ஐ.அ.டொ க்கான 6 மாதம் லிபோர் | 2.0 | காப்புறுதி கட்டணம் ஐ.அ.டொ 2.2 மில்லியன், செயன்முறைக் கட்டணம் ஐ.அ.டொ 877,665.87, அர்ப்பணிப்புக் கட்டணம் 0.5% | 1 | 13.5 |
| ஐக்கிய அமெரிக்கா | மானியம் | 2018/01/30 | சனநாயக ஆட்சி மற்றும் சமூக ஒருங்கிணைப்புக்கான வலுப்படுத்தப்பட்ட பங்காண்னை | ஐ.அ.டொ | 9"7 | 1,487.1 | 9.7 | | | ஏற்புடையதாகாது | | | 10 |
| | மானியம் | 2018/01/30 | நிலையான மற்றும் முழுமையான பொருளாதார வளர்ச்சி | ஐ.அ.டொ | 8"2 | 1,263.0 | 8.2 | | | ஏற்புடையதாகாது | | | 9 |
| இந்தியா | கடன் | 2018/01/10 | காங்கேசன் துறைமுகத்திற்கான டொலர் கடன் திட்டம் | ஐ.அ.டொ | 45.3 | 6,963.4 | 45.3 | மாறக் கூடிய | ஐ.அ.டொ . க்கான 6 மாதம் லிபோர் | 0 | இல்லை | 1 | 15 |
| | | 2018.08.03 | கிராம கடுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் | யூரோ | 10.5 | 2,019.40 | 13 | வட்டிய ற்ற | | | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.4% | 6.5 | 15 |
| ஆஸ்திரியா | கடன் | 2018/03/08 | கிராம கடுவான ஒருங்கிணைக்கப்பட்ட நீர் விநியோக திட்டத்தின் அமுல்படுத்தல். | யூரோ | 10.5 | 2,019.4 | 13.0 | | வரியற்றது | | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.4%, முகாமைத்துவக் கட்டணம் யூரோ 47,185.25, கையாள்கை கட்டணம் | 6.5 | 15 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | யூரோ 1,440, முற்பணக் கட்டணம் யூரோ 58,981.6 | | |
| | கடன் | 2018/04/12 | இலங்கையில் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக்கான ஆய்வுகூட மற்றும் மருத்துவ உபகரணங்களை விநியோகித்தலும் நிறுவுதலும். | யூரோ | 4.9 | 949.1 | 6.1 | | வரியற்றது | | முகாமைத்துவக் கட்டணம் யூரோ 22,176.0, கையாளல் கட்டணம் யுரோ 1,440, முற்பணக் கட்டணம் யூரோ 7,500.0 | 6 | 18 |
| | கடன் | 2018/0 8/.23 | ஆஸ்திரிய இலகு கடன் திட்டத்தின் கீழ் சத்திர சிகிச்சை கூடங்களை மேம்படுத்தல் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு உபகரணங்களை வழங்கல் | யூரோ | 9.6 | 1780.50 | 11.3 | மாறக் கூடிய | யூரிபோர் 6 மாதங்கள் | 1.00 | உடன்பாட்டுக் கட்டணம; 0.4% முகாமைத்துவக் கட்டணம் யூரோ 38,350.2 முன்னணிக் கட்டணம் யுரோ17,976.7 கையாளல் கட்டணம் யுரோ 1,440, | 5.6 | 18 |
| சவுதி அரேபியா | கடன் | 2018/07/18 | களு கங்கை அபிவிருத்தி செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பு | சவுதி ரியால் | 60 | 2,531.90 | 15.8 | மாறக் கூடிய | 2 | ஏற்புடையதாகாது | இல்லை | 5 | 25 |
| ஹங்கேரி | கடன் | 2018/06/26 | லபுகம் நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி புனரமைத்தல் கருத்திட்டம் | யூரோ | 0.037 | 7.00 | 0.04 | நிலையான | 1.03 | ஏற்புடையதாகாது | இல்லை | 8 | 20 |
| நெதர் லாந்து | கடன் | 2018/05/23 | ஆஸ்திரிய மென் கடன் திட்டத்தின் கீழ் சத்திரசிகிச்சைக் கூடங்கள் மற்றும் ஐ.சி.யு உபகரணங்களின் மேம்பாடு | யூரோ | 9.6 | 1,780.5 | 11.3 | மாறக் கூடிய | யூரிபோர் 6 மாதங்கள் | 1 | உடன்பாட்டுக் கட்டணம; 0.4%, முகாமைத்துவக் கட்டணம் யூரோ 38,350.2 முற்பணக் கட்டணம் யூரோ 17,976.7, கையாளல் கட்டணம் யூரோ 1,440 | 5.6 | 18 |
| | கடன் | 2018/11/26 | கிராமியப் பாலங்களைப் புனரமைத்தல் (யுரோ 44.6 மில்லியன்) | யூரோ | 7.8 | 1,590.0 | 8.7 | மாறக் கூடிய | யூரிபோர் 6 மாதங்கள | 4.0 | முகாமைத்துவக் கட்டணம் யூரோ 39,089.5 | 3.5 | 4.4 |
| **பலதரப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி ஒத்துழைப்பு** | | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | கடன் | 2018/02/16 | சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில முயற்சி கடன் மார்க்கம் - மேலதிக நிதியளிப்பு | ஐ.அ.டொ | 75 | 11,649.3 | 75.0 | மாறக் கூடிய | லிபோர் 6 மாதங்களுக்கு ஐ.எம்.எ | 0.6 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.15% | 11 | 11 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | ன்.எல்.எச் | | | | |
| | மானியம் | 2018/05/11 | திறன்கள் துறை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - மேலதிக / நிதியளிப்பு 9193 | ஐ.அ.டொ | 3 | 473.6 | 3.0 | | | ஏற்புடையதாகாது | | | 0 |
| | மானியம் | 2018.10.26 | சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் | ஐ.அ.டொ. | 12.5 | 2,160.3 | 12.5 | | | | | | 4.8 |
| | கடன் | 2018/05/18 | மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டுச் செயற்திட்டம் - கிளை 2 | ஐ.அ.டொ | 179 | 28,293.90 | 179 | மாறக் கூடிய | ஐ.அ.டொ . க்கான 6 மாத லிபோர் பெறுமதி | 0.70 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.15% | 5 | 19 |
| | கடன் | 2018/05/18 | மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டுச் செயற்திட்டம் - கிளை 2 | ஐ.அ.டொ | 31 | 4,900.10 | 31 | நிலையானது | 2 | ஏற்புடையதாகாது | இல்லை | 5 | 24 |
| | கடன் | 2018/05/11 | திறன்கள் துறை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - மேலதிக / நிதியளிப்பு | ஐ.அ.டொ | 60 | 9,472.7 | 60 | நிலையானது | 2 | ஏற்புடையதாகாது | இல்லை | 5 | 25 |
| | கடன் | 2018/05/11 | திறன்கள் துறை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் - மேலதிக / நிதியளிப்பு | ஐ.அ.டொ | 40 | 6,315.20 | 40.0 | மாறக் கூடிய | ஐ.அ.டொ க்கான 6 மாத லிபோர் பெறுமதி | 0.7 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.15% | 5 | 20 |
| | கடன் | 2018/10/26 | சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் | ஐ.அ.டொ | 37.5 | 6,481.0 | 37.5 | நிலையான | 2 | ஏற்புடையதாகாது | இல்லை | 2.6 | 12.5 |
| சர்வதேச அபிவிருத்தி சங்கம் | கடன் | 2018/07/25 | பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் | ஐ.அ.டொ | 100 | 15,947.50 | 100 | மாறக் கூடிய | ஐ.அ.டொ க்கான 6 மாத லிபோர் பெறு மதி | 1.5 | அர்ப்பணிப்புக் கட்டணம் 0.25% | 6 | 22 |
| மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனம் | கடன் (PPF) | 2018/01/30 | பி.பி.எப. – நிகழ்சசித்திட்டம் தயாரிப்பு முற்பண இல. 4940 | ஐ.அ.டொ | 4.0 | 615.10 | 4 | | | ஏற்புடையதாகாது | | | 2 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி | கடன் | 2018/01/26 | சிறு உரிமை விவசாய பங்காண்மை நிகழ்சித்திட்டத்தின் அமுல்படுத்தல். | ஐ.அ.டொ | 6.2 | 950.1 | 6.2 | நிலையானது | 2 | ஏற்புடைய தாகாது | இல்லை | 5 | 24 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உணவு மற்றும் விவசாய நிறுவனம் | மானியம் | 2018/08/15 | இ- விவசாய சுற்றாடல் வலுப்படுத்தல் மற்றும் ஐ.சி.ரீ சமரச விவசாய தீர்வுகளின் முன்னேற்றம். | ஐ.அ.டொ | 0.1 | 15.4 | 0.1 | | | ஏற்புடையதாகாது | | | 0 |
| அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக் குழு | மானியம் | 2018/01/01 | கிளிநொச்சி, புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் தனது உரிமைகளுக்கு பிரவேசித்துக் கொள்வதற்கான பெறுகைகளை இயலச் செய்தல். | இலங்கை ரூபா | 1.9 | 1.9 | 0.01 | | | ஏற்புடையதாகாது | | | 1 |
| ஐக்கிய நாடுகள் சனத் தொகை நிதியம் | மானியம் | 2018/01/26 | ஐக்கிய நாடுகள் சனத்தொகை அமைப்பின் நாடுகளுக்கான நிகழ்ச்சித்திட்டம் - 2018 - 2022 | ஐ.அ.டொ | 4 | 615.70 | 4 | | | ஏற்புடையதாகாது | | | 5 |
| ஒபெக் நிதி | கடன் | 2018/07/03 | தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ.டொ | 50 | 7,922.20 | 50 | நிலையானது | 2.5 | ஏற்புடையதாகாது | இல்லை | 5 | 20 |
| **சந்தைக் கடன்கள்** | | | | | | | | | | | | | |
| சர்வதேச இறைமை முறிகள் | கடன் | 2018/04/18 | சர்வதேச இறைமை முறி - 2018 | ஐ.அ.டொ | 1இ250 | 195,413.40 | 1,250 | நிலையானது | 5.75 | ஏற்புடைய தாகாது | இல்லை | 5 | 5 |
| சர்வதேச இறைமை முறிகள் | கடன் | 2018/04/18 | சர்வதேச பிணை முறி விநியோகம் - 2018 | ஐ.அ.டொ | 1இ250 | 195,413 | 1,250 | நிலையானது | 6.75 | ஏற்புடையதாகாது | இல்லை | 10 | 10 |
| வெளிநாட்டு நாணய நியதிக் கடன் | கடன் | 2018/10/12 | வெளிநாட்டு நாணய நியதிக்கடன் வசதி - 2018 | ஐ.அ.டொ | 1250 | 171346.60 | 1250 | மாறக்கூடியது | ஐ.அ.டொக்கான 6 மாத லிபோர் பெறுமதி | 2.56 | முன்னணிக் கட்டணம் | 3 | 8 |
| | | | | | மொத்தம் | **541,734.7** | **3,457.2** | | | | | | |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

***குறிப்பு:*** *1. LIBOR = லண்டன் வங்கியிடை வழங்கு வீதம்* 2. EURIBOR= *ஐரோப்பிய வங்கியிடை வழங்கு வீதம்*

*3.* உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட திகதியில் ஒவ்வொரு நாணயத்துக்கும் நடப்பிலிருந்த செலாவணி விகிதமே அறிக்கைக்குப் பயன்படுத்தப்பட்ட மாற்று விகிதமாகும்.

### வெளிநாட்டு நிதிப் பகிர்வுகள்

2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட மொத்த வெளிநாட்டு நிதிப் பகிர்வுகள் ஐ.அ.டொ. 1,353.5 மில்லியனாக காணப்படுவதோடு, அதில் ஐ.அ.டொ. 1,332.7 மில்லியன் கடன் மூலம் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் பயன்பாட்டிற்காக நிதியளிப்புச் செய்யப்பட்டு ள்ளதுடன், எஞ்சிய ஐ.அ.டொ. 20.8 மில்லியன் மானியமாகவும் கிடைக்கப் பெற்றுள்ளது. மேற்குறித்த மொத்த நிதிப பகிர்வுகளில் அதிகளவிலான நிதிப்பகிர்வு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டு ள்ளதோடு, அது மொத்த நிதிப பகிர்வின் 29.6 சதவீதத்தினைப் பிரதிபலிக்கிறது. அதனைத் தொடர்ந்து முறையே சீனா (26.4 சதவீதம்),யப்பான் (11.4 சதவீதம்) மற்றும் உலக வங்கி (11.3 சதவீதம்) என நிதியளிப்புக்களை மேற்கொண்டுள்ளன.

**அட்டவணை 1.18 | அபிவிருத்திப் பங்காளர்களின் நிதிப் பகிர்வுகள் ( சனவரி – நவம்பர் 2018 )**

| அபிவிருத்திப் பங்குதாரர் / கடன் வழங்கும் முகவர் | பகிரப்பட்ட தொகை (ஐ.அ.டொ.மில்) (அ) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | **755.6** | **17.6** | **773.2** |
| ஏற்றுமதி, இறக்குமதி வங்கி சீனா | 316.5 | - | 316.5 |
| யப்பான் | 139.9 | 14.4 | 154.3 |
| கலியோன் கிரடிட் எக்ரிகல் சி.ஐ.பி பிரான்ஸ் | 56.9 | - | 56.9 |
| இந்தியா | 44.7 | - | 44.7 |
| சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனம் | 40.6 | - | 40.6 |
| கோப் சென்றாலே ரய்பேய்ஸன் போரண்லீன் வங்கி – (நெதர்லாந்து) | 31.6 | - | 31.6 |
| அரேபிய பொருளாதார அபிவிருத்திககான சவுதி நிதியம் | 16.9 | - | 16.9 |
| ஏஜேன்சி பிரான்சைஸ் டி டெவலொப்மென்ட் ஒப் பிரான்ஸ் | 14.9 | - | 14.9 |
| டச் பேங்க் ஏஜி (ஐக்கிய இராச்சியம்) | 14.4 | - | 14.4 |
| எச்எஸ்பிசி ஹொங் கொங் | 14.1 | - | 14.1 |
| குவைட் | 14.0 | - | 14.0 |
| ரைபிசென் சென்றல் பேன்க் (ஆஸ்திரிய) | 13.8 | - | 13.8 |
| கொரியா | 10.2 | - | 10.2 |
| எக்ஸ்போர்ட் இம்போரட் பேன்க் ஒப் யுனைடெட் ஸ்டேட் | 9.4 | - | 9.4 |
| எச்எஸ்பிசி (ஈகேஎப் உத்தரவாதத்துடன் ) | 7.9 | - | 7.9 |
| ஸ்பெயன் | 3.9 | - | 3.9 |
| ஐக்கிய அமேரிக்க | - | 2.9 | 2.9 |
| ஜேர்மனி | 2.5 | - | 2.5 |
| யுனிகிரடிட் பேன்க் ஒஸ்திரியா | 1.2 | - | 1.2 |
| எக்ஸ்போர்ட் பைனான்ஸ், இன்சுவரன்ஸ் கோபரேசன் அவுஸ்திரேலியா | 1.0 | - | 1.0 |
| பேண்கோ பில்பாஓ விதிகயா ஆர்ஜன்டேரியா எஸ்.ஏ. ஸ்பெய்ன | 1.0 | - | 1.0 |
| பிரான்ஸ் | - | 0.3 | 0.3 |
| கேபிசி வங்கி – பெல்ஜியம் | 0.3 | - | 0.3 |
| எக்ஸ்போரட் இம்போரட் வங்கி ஹங்கேரி | 0.04 | - | 0.04 |
| **பல்தரப்பு** | **577.1** | **3.2** | **580.3** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 400.8 | - | 400.8 |
| சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | 125.5 | - | 125.5 |
| புனரமைப்பு, மீள்நிர்மாணம் என்பவற்றிற்கான வங்கி | 27.7 | - | 27.7 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 19.6 | - | 19.6 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 3.5 | - | 3.5 |
| யுனிசெப் | - | 1.8 | 1.8 |
| சர்வதேச உணவு அமைப்பு | - | 0.6 | 0.6 |
| யுஎன்எப்பீஏ | - | 0.6 | 0.6 |
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி | - | 0.2 | 0.2 |
| யுஎன்எச்சிஆர் | - | 0.01 | 0.01 |
| **மொத்தம்** | **1,332.7** | **20.8** | **1,353.5** |

*மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*
*குறிப்பு : 1. பல்வேறுபட்ட நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட நிதியளிப்புக்கள் ஐ.அ.டொ. மற்றும் ரூபா என்பனவற்றிற்கு மாற்றுவதற்காக 2018, ஒகத்து மாதம் 31 ஆந் திகதி நிலவிய நாணயமாற்று வீதங்கள் பயன்படுத்தப்பட்டன.*
*2. அரசுடமைத் தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட நிதியளிப்பு இதில் உள்ளடக்கப்படவில்லை*
*(அ) தற்காலிகமானது*

மீளாய்வு ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவீனத்திலிருந்து, அதிக தொகை வீதி மற்றும் பாலங்கள் நிர்மாணிப்பு தொடர்பாக செலவிடப்பட்டுள்ளதோடு அது ஏறக்குறைய 39 சதவீதத்தினையும் பிரதிபலிக்கிறது. அதனைத் தொடர்ந்து நீர் விநியோகம் மற்றும் துப்பர

வேற்பாடுகள் (14 சதவீதம்) துறைக்கும், நிதி மற்றும் நல்லாட்சி துறைக்கும் (9 சதவீதம்) செலவிடப்பட்டுள்ளது.

**வரைபு 1.6 | ஒவ்வொரு துறைக்குமாக மேற்கொள்ளப்பட்ட நிதிப் பகிர்ந்தளிப்பு (சனவரி - வம்பர் வரையில்) (ஐ.அ.டொ.மில்)**




**உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி**

ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாது அடுத்துவரும் 3-5 வருடங்களில் பயன்படுத் துவதற்காக 2018 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் மீதியாகவுள்ள மொத்த வெளிநாட்டு நிதியளிப்புத் தொகை ஐ.அ.டொ. 8,332.9 மில்லியனாகும்.

**வரைபு 1.7 | அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு பயன்படுத்தப்படாத மீதி (2018 நவம்பர் 30 இல் உள்ளவாறு)**




குறிப்பு: *அரசுடமை தொழில்முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களின் பகிர்வுகள் உள்ளடக் கப்படவில்லை. ஈரான் நாட்டின் பகிரப்பட்டும் பயன்படுத்தப்படாத மீதி சர்வதேச பொருளாதாரத் தடையினால் பாதிக்கபபட்ள்ளது, அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்டாத மீதியானது 2018 ஒகத்து 31 அன்று நிலவிய நாணயப் பரிமாற்ற வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது.*

**வெளிநாட்டு நிலுவைக் கடன் மற்றும் வெளிநாட்டு படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்**

2018 ஆம் ஆண்டு நவம்பர் இறுதியில், அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப்படுகடன் நிலுவையானது ஐ.அ.டொ. 32.4[1] பில்லியனாகும். 2018 சனவரி 01 முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரையிலான அரசாங்கத்தின் மொத்த படுகடன் சேவைக[2] கொடுப்பனவு ஐ.அ.டொ. 2,352.4 மில்லியனாகும். அதில் அடிப்படை கொடுப் பனவின் மீள்கொடுப்பனவாக ஐ.அ.டொ. 1,397.7 மில்லியனும் மற்றும் எஞ்சிய ஐ.அ.டொ. 954.7 மில்லியன் வட்டிக் கொடுப்பனவாகவும் செலுத்தப் பட்டுள்ளது.

---

[1] அரசுடமைத் தொழில்முயற்சிகளின் படுகடன் நிலுவை மற்றும் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களை அடிப்படையாகக் கொண்ட வதி வல்லாதோர் வைப்புக்கள் இதில் உள்ள டக்கப்படவில்லை. அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்காக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் நிலுவைகள் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

[2] படுகடன் சேவை = அடிப்படைக் கொடுப்பனவுகள் + வட்டிக் கொடுப்பனவுகள், அரசுடமைத் தொழில முயற்சிகளின் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

# உலக சூழலில் பொருளாதாரம் 02

## 2.1 மேன்நோக்கு

2018 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளின் போதும் இலங்கையின் பொருளாதாரம் விவசாயம், தொழில் மற்றும் சேவைத் துறைகளின் விரிவாக்கப்பட்ட நடவடிக்கைகளின் பிரதிபலிப்பாக 3.3 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. 2018 இன் மூன்றாம் காலாண்டின் வேலையின்மை வீதம் 4.1 வீதமாக குறைவடைந்துள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அளவீட்டின் பிரகாரம் உணவுப் பொருட்களின் விலையைக் குறைத்ததாலும் எரிபொருட்களின் விலை குறைவடைந்தாலும் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்) கார்த்திகை மாதத்தில் 3.3 வீதமாக வீழ்ச்சிடைந்தது. அதே வேளை 2018 கார்த்திகை இறுதியில் மத்திய வங்கியின் இறுக்கமான நிதிக்கொள்கை காரணமாக தனியார் துறை கடன் 16.2 வீதமாக வளர்ச்சிய டைந்துள்ளது. 2018 கார்த்திகை இறுதியில் கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் அரச பிணை பத்திரங்களின் மீதான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் காரணமாக கொடுப்பனவு மீதி ஐ.அ.டொ 807 மில்லியனை பற்றாக்குறையாக கொண்டிருந்தது. அதே வேளை உலக பொருளாதார வளர்ச்சிக்கான சவால்கள் இலங்கை உட்பட வளரும் மற்றும் அபிவிருத்தியடைந்தது வரும் பொருளா தாரங்களிலும் தாக்கத்தினை செலுத்தியுள்ளன.

## 2.2 பொருளாதார வளர்ச்சி

இலங்கையின் பொருளாதாரமானது, 2017 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் பதிவாகிய மிதமான வளர்ச்சியான 3.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் முன்னேற்ற கரமான வளர்ச்சியாக 3.3 சதவீத வளர்ச்சியை காட்டியது. நாட்டின் சில பகுதிகளில் காணப்பட்ட சீரான காலநிலை காரணமாக நெல், காய்கறிகள், பழவகைகளின் உற்பத்தி அதிகரித்துள்ளன. உள்நாட்டு மீன்பிடி, விலங்குணவு, உப பிரிவுகளிலும் கணிசமான அதிகரிப்பை அவதானிக்க முடிந்தது. இதேநேரம், மொத்த மற்றும் சில்லறை வியாபாரங்கள், நிதிச் சேவைகள், சொத்து விற்பனை, போக்குவரத்து, தங்குமிட சேவைகள் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளின் அதிகரித்த செயற்பாடு காரணமாக சேவைத் துறையும் இவ்வாண்டில் வளர்ச்சியைக் கொண்டிருந்தது. இருப்பினும், கட்டிட நிர் மாணத்துறை மற்றும் உற்பத்தித் துறைகளில் ஏற்பட்ட மந்தகதி எதிர்மறைத் தாக்கத்தை கைத்தொழில்துறையில் ஏற்படுத்தியிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சேவைகள் துறை 59 சதவீதம், கைத்தொழில் துறை 27 சதவீதம் விவசாயத்துறை 7 சதவீதம் மற்றும் குறைந்த வரி மானியம் 6 சதவீதம் பங்களிப்பு செய்துள்ளது.

**வரைபு 2.1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி**




**வரைபு 2.2 | மொ.உ.உற்பத்தி வகுதி - 2018 இன் முதல் மூன்று காலாண்டுகள்**




### விவசாயம்

2018 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் விவசாயத் துறையானது சாதகமான கால நிலைகளின் பிரதிபலிப்பாக 2017 இன் 3.5 சதவீதமான வளர்ச்சியிலிருந்து 2018 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் 4.3 சதவீதமாக அதிகரித்தது. குறிப்பாக நெல், தானியங்கள், பழங்கள், மரக் கறிகள், வாசனைத் திரவியங்கள் விலங்கு உற்பத்திகள் மற்றும் நன்னீர் நீர் வாழ் உயிரியல் வளர்ப்பு ஆகியவற்றில் விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் இக்காலப் பகுதியில் தேயிலை, தெங்கு, இறப்பர், சீனி, கடல் மீன்

உற்பத்தி மற்றும் பருவ கால பயிர்களில் சுருக்கம் காணப்பட்டது. விலங்கு உற்பத்தி 4.4 சதவீதத்தினால் 2018 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் மிதமாக வளர்ச்சிய டைந்துள்ளதோடு 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் இது 5.6 சதவீத வளர்ச்சியினைப் பதிவாக்கியிருந்தது. அதேபோல் முன்னைய ஆண்டு இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீர் வாழ் உயிரியல் வளர்ப்பு உப துறை 6.2 சதவீத உற்பத்தியால் அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் ஆழ்கடல் மீன்பிடி மற்றும் கடல் வாழ் உயிரியல் வளர்ப்பு உப துறை செயற்பாடுகள் 0.8 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

**அரிசி**

கடந்த பெரும் போகத்துடன்(மகா) ஒப்பிடுகையில் பொருத்தமான காலநிலை காரணமாக 2017/2018 "பெரும் போக" பருவத்திற்கான அரிசி உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் 2.4 மெற்றிக் தொன்னுக்கு 63 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேபோல் "சிறுபோக" (யல) பருவத்திற்கான அரிசி உற்பத்தி 1.4 மெற்றிக் தொன்னுக்கு 57 சதவீதத்தினால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, பெரும் போகத்தில் முழுமையாக 93 சதவீதமான 619,928 ஹெக்டேயர் தரிசு நிலம் அறுவடைக்காகப் பயன்படுத்தப்பட்டது. இது ஒரு ஹெக்டேயருக்கு 4,302 கிலோவாக உற்பத்தித் திறனை பதிவு செய்தது.

**தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் உற்பத்தி**

தேயிலை மற்றும் இறப்பர் உப துறைகள் முறையே 4.5 சதவீதம் மற்றும் 7.4 சதவீதம் எதிர்மறையான வளர்ச்சியை காட்டியுள்ளது. தேயிலை உற்பத்தி 4.7 சதவீதத்தினால் குறைவடைந்து 222.1 மில்லியன் கிலோகிராம் ஆக சனவரி – செத்தெம்பர் மாத காலத்தில் பதிவுசெய்திருந்தது. இருப்பினும், 2018 இன் மூன்றாம் அரையாண்டில் தெங்கு உற்பத்தியானது மாற்றமடையாது 1,908 மில்லியன் தேங்காய்களை வழங்கியுள்ளது. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானமானது முறையே 4.9 சதவீதத்தால் ஐ.அ.டொ.1093 மில்லியனாகவும் 20.3 சதவீதத்தால் ஐ.அ.டொ 25 மில்லியன் ஆகவும் 20.3 சதவீதத்தால் ஐ.அ.டொ. 25 மில்லியனாக 12.8 சதவீதத்தால் ஐ.அ.டொ. 238 மில்லியனாகவும் குறைவடைந்திருந்தன. மேலும், இம்மூன்று உற்பத்திகளினதும் ஏற்றுமதி விலைகளும் குறைவடைந்தே காணப்பட்டன.

**தானியங்கள், மரக்கறிகள், பழங்கள், வாசனைப் பொருட்கள் மற்றும் மருந்தாக்கல் பொருட்கள்**

2018 ஆம் ஆண்டு முதல் மூன்று அரையாண்டில் தானியங்கள், மரக்கறிகள், பழங்கள், வாசனைப் பொருட்கள் மற்றும் தானியங்களின் மருந்தாக்கல் பெறுமதிசேர் உற்பத்திகள், உழுந்து, சோளம், பயறு, கௌபி, குரக்கன் மற்றும் தினை என்பனவற்றில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பின் பயனாக 2017 ஆம் ஆண்டின் 16.9 சத வீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகின்ற போது இவ்வாண்டு 30.5 வீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை 2018 ஆம் ஆண்டின் இக் காலப்பகுதியில் பழங்கள் மற்றும் மரக்கறிகளின் பெறுமதி சேர் உற்பத்தி முறையே 5.6 வீதமாகவும் 12.8 வீதமாகவும் அதிகரித்தது. 2018 இன் முதல் மூன்று அரையாண்டில் வாசனைத் திரவியங்கள், நறுமணப் பொருட்கள், மாத்திரைகள் மருந்தாக்கல் பொருட்களின் உற்பத்தி 2.8 வீதமாக அதிகரித்தன.

**வரைபு 2.3| விவசாயத்துறை வகுதி - 2018 இன் முதல் மூன்று காலாண்டுகள்**




**விலங்கு மற்றும் மீன் பிடி உற்பத்தி**

2018 ஆம் ஆண்டு முதல் மூன்று காலாண்டில் விலங்கு உற்பத்தி மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு உப துறை முறையே 4.4 மற்றும் 6.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. ஆழ் கடல் மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்புத் துறை ஆகியவை கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 0.5 சதவீதத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் 0.8 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. மொத் தமாக, மீன் பிடி 385.7 மில்லியன் கி.கி.இற்கு 1.0 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. எவ்வா றாயினும் கடல் உணவு ஏற்றுமதி ஐ.அ.டொ. 191 மில்லியனுக்கு 8.4 சதவீதத்தால் அதிகரித் துள்ளது.

**அட்டவணை 2.1 | மொ.உ. உற்பத்தியில் துறை ரீதியான வகுதிகள்(2010) நிலையான விலைகள்**

*ரூபா.மில்*

| | துறை | 2015(ஆ) | 2016(ஆ) | 2017(ஆ) | முதல் ஒன்பது மாதங்கள் | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2017 | 2018(அ) | 2017 | 2018 (அ) |
| | **விவசாயம், காடாக்கம், மீன்பிடி** | **669,725** | **644,262** | **639,279** | **461,014** | **480,947** | **(3.5)** | **4.3** |
| 1 | தானியங்கள் (அரிசி நீங்களாக) | 14,984 | 13,149 | 11,799 | 8,128 | 10,603 | (16.9) | 30.5 |
| 2 | நெல் | 76,293 | 52,387 | 50,269 | 21,003 | 32,215 | (40.6) | 53.4 |
| 3 | மரக்கறிகள் | 56,730 | 58,705 | 49,198 | 33,612 | 37,930 | (22.8) | 12.8 |
| 4 | கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய பருவ காலப் பயிர்கள் | 1,882 | 2,168 | 1,863 | 1,511 | 1,334 | (13.8) | (11.7) |
| 5 | பழங்கள் | 48,038 | 46,511 | 49,960 | 38,034 | 40,180 | 6.3 | 5.6 |
| 6 | எண்ணெய் பிரித்தெடுக்கும் பழங்கள் (தேங்காய், இளநீர், பாம் விதைகள்) | 67,514 | 66,970 | 53,929 | 42,041 | 42,360 | (16.9) | 0.8 |
| 7 | தேயிலை (பச்சை இலை) | 72,051 | 63,970 | 67,021 | 50,778 | 48,483 | 6.0 | (4.5) |
| 8 | ஏனைய குடிபான பயிர்ச் செய்கை (கோப்பி, கொக்கோ முதலியன) | 1,259 | 1,354 | 1,268 | 951 | 1,000 | (6.4) | 5.2 |
| 9 | நறுமண, வாசனைத் திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பயிர்கள். | 60,797 | 62,197 | 62,500 | 46,889 | 48,190 | 1.0 | 2.8 |
| 10 | இறப்பர் | 25,783 | 23,028 | 24,167 | 18,827 | 17,430 | 1.2 | (7.4) |
| 11 | ஏனைய குறுங்காலப் பயிர்கள் | 16,839 | 16,484 | 16,739 | 12,899 | 12,577 | 3.5 | (2.5) |
| 12 | விலங்கு வேலாண்மை | 51,857 | 55,629 | 57,810 | 42,949 | 44,841 | 5.6 | 4.4 |
| 13 | விவசாய துறைக்கான தாவர வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்புச் செயற்பாடுகள் | 10,421 | 10,210 | 10,250 | 7,817 | 8,156 | 1.1 | 4.3 |
| 14 | காடாக்கம், விறகு மற்றும் பலகை உற்பத்தி | 48,362 | 52,669 | 64,261 | 48,743 | 48,810 | 20.1 | 0.1 |
| 15 | சமுத்திர மீன் பிடிப்பு மற்றும் கடல் வாழ் உயிரின வளர்ப்பு | 104,413 | 105,094 | 103,038 | 76,878 | 76,261 | 0.5 | (0.8) |
| 16 | நன்நீர் மீன் பிடிப்பு மற்றும் நன்நீர் வாழ் உயிரின வளர்ப்பு | 12,503 | 13,735 | 15,208 | 9,955 | 10,576 | 9.4 | 6.2 |
| | **கைத்தொழில்** | **2,267,725** | **2,399,285** | **2,509,829** | **1,871,028** | **1,904,084** | **4.8** | **1.8** |
| 17 | கனிய அகழ்வும் சுரங்க செயற்பாடுகளும் | 191,145 | 218,587 | 240,699 | 172,562 | 170,828 | 10.4 | (1.0) |
| 18 | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி தயாரிப்புகள் | 528,821 | 527,794 | 535,983 | 412,587 | 432,183 | (0.3) | 4.7 |
| 19 | பிடவை, தைக்கப்பட்ட ஆடை மற்றும் தோற்பொருட்களுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி தயாரிப்புக்கள் | 282,719 | 287,760 | 304,291 | 262,472 | 272,663 | 6.2 | 3.9 |
| 20 | மரம் மற்றும் தயாரிப்புக்கள், தக்கை, தளபாடங்கள் நீங்கலாக | 27,320 | 31,666 | 31,556 | 19,975 | 20,237 | 0.9 | 1.3 |
| 21 | காகிதங்கள் உற்பத்தி, ஊடக உற்பத்திகளின் மீள் உற்பத்தி மற்றும் அச்சடித்தல் | 27,728 | 30,504 | 33,236 | 23,729 | 22,900 | 12.4 | (3.5) |
| 22 | கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி தயாரிப்புக்கள் | 29,075 | 31,245 | 29,743 | 22,340 | 19,811 | (10.4) | (11.3) |
| 23 | இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி தயாரிப்புக்கள் | 83,179 | 86,929 | 89,175 | 63,982 | 65,314 | 0.9 | 2.1 |
| 24 | இறப்பர் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகள் | 76,144 | 88,635 | 96,367 | 64,269 | 64,831 | 7.5 | 0.9 |
| 25 | ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி தயாரிப்புக்கள் | 75,191 | 67,168 | 72,784 | 52,554 | 53,803 | 16.4 | 2.4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 26 | அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருத்தப்பட்ட உலோக உற்பத்தி தயாரிப்புகள் | 28,953 | 36,186 | 39,312 | 26,234 | 27,802 | 9.3 | 6.0 |
| 27 | இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உற்பத்திகள் | 38,848 | 45,087 | 48,104 | 31,820 | 30,930 | 12.1 | (2.8) |
| 28 | தளபாட உற்பத்திகள் | 94,489 | 97,958 | 102,715 | 74,035 | 73,734 | 6.2 | (0.4) |
| 29 | ஏனைய தயாரிப்புகள், உபகரணங்கள், சானங்கள் பொறுத்தல் மற்றும் பழுது பார்த்தல் | 68,509 | 72,973 | 75,874 | 58,956 | 59,935 | 9.3 | 1.7 |
| 30 | மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 85,202 | 92,350 | 94,819 | 70,981 | 75,021 | 2.8 | 5.7 |
| 31 | நீர் சேகரிப்பு, துப்பரவாக்கல் மற்றும் விநியோகம் | 12,023 | 12,971 | 13,569 | 10,218 | 10,521 | 6.7 | 3.0 |
| 32 | கழிவு நீர், கழிவு அகற்றல் செயற்பாடுகள் | 21,681 | 25,539 | 27,567 | 20,653 | 21,871 | 8.6 | 5.9 |
| 33 | நிர்மாணம் | 596,697 | 645,933 | 674,035 | 483,660 | 481,700 | 5.0 | (0.4) |
| | **சேவைகள்** | **4,894,717** | **5,124,016** | **5,289,407** | **3,884,046** | **4,054,790** | **3.2** | **4.4** |
| 34 | மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 933,216 | 956,918 | 993,501 | 766,407 | 806,912 | 3.3 | 5.3 |
| 35 | களஞ்சிய சாலை உள்ளடங்கலாக பொருட்கள் மற்றும் நபர்கள் போக்குவரத்து | 931,529 | 982,643 | 991,727 | 687,974 | 693,696 | 0.6 | 0.8 |
| 36 | தபால் கூரியர் / விரைவுத் தபால் செயற்பாடுகள் | 4,052 | 4,260 | 4,425 | 3,166 | 3,317 | 6.4 | 4.8 |
| 37 | தங்குமிடம், உணவு மற்றும் குடிபான சேவை செயற்பாடுகள் | 134,017 | 139,442 | 146,431 | 107,585 | 114,534 | 5.2 | 6.5 |
| 38 | நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஒளிபரப்புச் செயற்பாடுகள், ஒலிஃ ஒளி தயாரிப்புக்கள் | 2,624 | 2,831 | 3,205 | 2,424 | 2,077 | 19.6 | (14.3) |
| 39 | தொலைத் தொடர்பு | 34,146 | 36,982 | 41,435 | 30,522 | 34,659 | 12.1 | 13.6 |
| 40 | தகவல் தொ.நு. நிகழ்ச்சித் திட்ட மதியுரை மற்றும் இணைச் செயற்பாடுகள் | 12,148 | 13,015 | 13,564 | 10,046 | 10,748 | 4.3 | 7.0 |
| 41 | நிதிச் சேவை செயற்பாடுகள் மற்றும் துணை நிதிச் சேவைகள் | 493,785 | 554,521 | 606,468 | 451,841 | 507,357 | 10.0 | 12.3 |
| 42 | காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு | 82,013 | 88,999 | 94,088 | 71,301 | 77,880 | 8.5 | 9.2 |
| 43 | வதிவிட உரித்து உள்ளடங்களாக ஆதன விற்பனை | 489,352 | 520,080 | 544,728 | 404,800 | 419,396 | 5.0 | 3.6 |
| 44 | தொழில் வாய்மை சேவைகள் | 154,266 | 152,228 | 158,720 | 118,506 | 120,943 | 3.1 | 2.1 |
| 45 | பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூகப் பாதுகாப்பு | 430,105 | 452,586 | 430,671 | 306,490 | 304,613 | (4.8) | (0.6) |
| 46 | கல்வி | 159,875 | 171,826 | 172,698 | 125,114 | 125,225 | 0.6 | 0.1 |
| 47 | மனித நல செயற்பாடுகள், வதிவிடப் பராமரிப்பு மற்றும் சமூகப் பணிச் செயற்பாடுகள் | 160,056 | 162,400 | 174,150 | 120,406 | 121,980 | 5.2 | 1.3 |
| 48 | ஏனைய தனிப்பட்ட சேவைகள் செயற்பாடுகள் | 873,534 | 885,286 | 913,597 | 677,463 | 711,452 | 3.5 | 5.0 |
| | **மொத்த பெறுமதி சேர்க்கப்பட்டவை, அடிப்படை விலைகளில்** | **7,832,167** | **8,167,563** | **8,438,515** | **6,216,088** | **6,439,821** | **3.2** | **3.6** |
| | **(+) பொருட்கள் மீதான வரிகள் குறைவான மானியங்கள்** | **815,667** | **866,727** | **894,702** | **484,979** | **483,172** | **4.0** | **(0.4)** |
| | **மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) சந்தை விலைகளில்** | **8,647,833** | **9,034,290** | **9,333,217** | **6,701,067** | **6,922,993** | **3.2** | **3.3** |

*மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

*(அ) தற்காலிகமானது*

*(ஆ) திருத்தப்பட்ட*

## கைத்தொழில்

கைத்தொழில் துறைச் செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தில் பதிவாக்கிய 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் 1.8 சதவீதத்தால் மிதமாக அதிகரித்துள்ளது. இதற்கு உற்பத்தி துறையில் எற்பட்ட 0.4 சதவீத சுருக்கத்தின் காரணமாக தயாரிப்புச் செயற் பாடுகளில் ஏற்பட்ட மந்தகதியான செயலாற் றுகையும் இதற்கு பிரதான தாக்கத்தை செலுத் தியுள்ளது. சுங்க மற்றும் அகழ்வுத் துறைகளிலும் ஏற்பட்ட கைத்தொழிற் துறை செயற்பாட்டின் மந்தகதி வளர்ச்சிக்கு 1 சத வீதத்தால் தாக்கம் செலுத்தியுள்ளது. மின்சாரம், எரிவாயு வழங்கல், மர உற்பத்திகள், இரசாயன பொருட்களின் உற்பத்திகள் மற்றும் மருந்து பொருட்களின் உற்பத்திகள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சிப் போக்கினை கொண்டிருந்தன. இருப்பினும் பெற்றோலிய உற்பத்தி, ஊடக செயற்பாடுகள் இயந்திர மற்றும் உபரணங்களின் உற்பத்திகள் வீழ்ச்சி போக்கையே கொண்டிருந்தன.

**வரைபு 2.4 | கைத்தொழிற் துறை வகுதி 2018 இன் முதல் மூன்று காலாண்டுகள்**




## உற்பத்தித் துறை

2018 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் புடவைக் கைத்தொழில் துறையின் செயற்பாடுகள் 3.9 சதவீதத்தினால் மந்தகதியில் அதிகரிப்பைக் கொண்டிருந்தது. புடவைத் துறையானது இந்தக் காலத்தில் 3,928 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் உணவுச் செயற்பாடுகள், பானங்கள் மற்றும் புகையிலை தயாரிப்பு 4.7 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. இந்த கால கட்டத்தில் உணவு மற்றும் பானங்களின் மற்றும் புகையிலை ஏற்றுமதி ஐ.அ.டொ.347.2 மில்லியனினால் பங்களிப்புச் செய்துள்ளது. மரம் மற்றும் மரம் தொடர்பான உற்பத்திகள், இறப்பர் மற்றும் இறப்பர் தொடர்பான உற்பத்திகள், உலோக மல்லா மற்றும் கனியவளங்கள் உற்பத்திகள் முறையே 1.3 சதவீதம், 0.9 சதவீதம் மற்றும் 2.4 சதவீதத்தினால் விரிவடைந்தததுள்ளது. இந்த கால கட்டத்தில் இறப்பரை அடிப்படையாக கொண்ட உற்பத்திகள் 656 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை ஈட்டியுள்ளது. இரசாயன உற்பத்திகள், மருந்து உற்பத்திகள், உலோகம், பொருத் தப்பட்ட உலோக உற்பத்திகள் முறையே 2.1 சதவீதம் மற்றும் 6.0 சதவீதம் நேர்மறையான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளது. அச்சிடுதல் உற்பத்தி, காகித மற்றும் ஊடகம், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய, நிலக்கரி உற்பத்திகள் மற்றும் இயந்திர மற்றும் உபகரண உற்பத்திகள் 3.5 சதவீதம், 11.3 சதவீதம், 2.8 சதவீதம் மற்றும் 0.4 சதவீதமாக எதிர்மறை வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

**வரைபு 2.5 | தயாரிப்புத் துறை வகுதி - 2018 இன் முதல் மூன்று காலாண்டுகள்**




## மின்சாரம், எரிவாயு, நீர் மற்றும் கழிவு நீர்

2018 இன் முதல் மூன்று காலாண்டில் அரசாங்கத்தினுடைய மின்சாரம், நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அபிவிருத்தி முறைகள் ஆகியவற்றின் மீதான முதலீடுகள், மின்சார விரிவாக்கம், நீர் சேகரிப்பு மற்றும் கழிவு நீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு செயற்பாடுகளின் விரிவாக்கத்திற்கு துணைபுரிந்தது. நீர் சேகரிப்பு, கழிவு நீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு,

மின்சார உப துறைகள் முறையே நேர்மறையான வளர்ச்சி 3.0 சதவீதம், 5.9 சதவீதம் மற்றும் 5.7 சதவீதத்தைக் காட்டியது. மொத்த சக்தி வழங்கல் 11,436 ஜிகா வோர்ட்ஸ்ற்கு 4 சதவீத்தினால் அதிகரித்துள்ளது. நீர் வழங்கலிருந்து ஆற்றலை உருவாக்கும் திறன் மீளாய்வுக் காலத்தில் நிலவிய சாதகமான மழை வீழ்ச்சி காரணமாக 3,428 ஜிகா வோர்ட்ஸ்ற்கு 87.4 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. 2018 இன் முதல் மூன்று காலாண்டில் மின் உருவாக்கும் சக்தி மூலமான எரிபொருள் மற்றும் நிலக்கரி முறையே 23 சதவீதம், 9 சதவீதம் குறைவடைந்துள்ளது. வழக்கமல்லாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயின்படுத்தும் மின்சார உற்பத்தி 1256 ஜிகா வோர்ட்ஸ்ற்கு 23.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

## சேவைகள்

### மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து, களஞ்சியசாலை மற்றும் பயணிகள் சேவைகள்

மொத்த சில்லறை வர்த்தக நடவடிக்கைகள், 2017 ஆம் ஆண்டில் பதிவாகிய 3.3 சதவீத வளர்ச்சியோடு ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 5.3 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. போக்குவரத்து துறை 0.8 சதவீத நேர்மறை வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 2018 இன் முதல் மூன்று அரையாண்டில் வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 417,881 ஆக 10.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மோட்டார் கார்கள், 1000 சீசீ இற்கு குறைவான கொள்ளவுடைய வாகனங்கள் மற்றும் ஹைப்ரைட் வாகனங்கள் மீதான வரிகளின் திருத்தங்கள் காரணமாக வரி வருமானம் 123.5 சதவீத அளவிற்கு கணிசமாக அதிகரித்தது. இருப்பினும், லொறிகள், மற்றும் பார ஊர்திகள், கனரக வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் பதிவுகள் இக்காலப் பகுதியில் முறையே 13.7 சதவீதம், 22.9 சதவீதம் மற்றும் 13 சதவீதம் ஆக குறைவடைந்துள்ளது.

**வரைபு 2.6 | சேவைத் துறை வகுதி - 2018 இன் முதல் மூன்று காலாண்டுகள்**




மொத்த கொள்கலன்கள் கையாளுதல் 5.8 மில்லியன் கொள்கலன்களாக (TEU) 15.0 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. பிரதானமாக 20 அடி கொண்ட கொள்கலன் கையாளுதல், கப்பல் மாற்றுகை மற்றும் பொருட்களை இறக்குதல் முறையே 19.6 சதவீதம், 15.0 சதவீதம் ஆக அதிகரித்துள்ளது. மொத்த சரக்கு நிரப்புதல் 36 மில்லியன் மெற்றிக் தொன்னுக்கு 16.6 சதவீதமாக அதிகரித்தும் சரக்கு வெளியே ற்றுதல்கள் 50.9 மில்லியன் மெற்றிக் தொன்னாக 10.3 சதவீதமாக அதிகரித்திருந்தது. இலங்கை துறைமுகங்களின் 2018 இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் மொத்த சரக்கு கையாளுகை 12.8 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது.

**அட்டவணை 2.2 | சேவைகள் துறையில் தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்**

| சுட்டி | 2014 | 2015 | 2016 | 2017 | 2017 சன -நவம் | 2018 சன -நவம் (அ) |
|---|---|---|---|---|---|---|
| **துறைமுக சேவைகள்** | | | | | | |
| வருகை தந்த கப்பல்கள் | 4,298 | 4,728 | 4,998 | 4,879 | 4,449 | 4,487 |
| மொத்த சரக்கு கையாடல் (மொ.தொ'000) | 74,431 | 77,579 | 86,519 | 93,857 | 85,242 | 95,918 |
| மொத்த கொள்கலன் கையாடல் ( TEU '000) | 4,908 | 5,185 | 5,735 | 6,209 | 5,622 | 6,439 |
| இடைமாற்றம்செய்யப்பட்டவை ( TEU '000) | 3,781 | 3,888 | 4,355 | 4,742 | 4,293 | 5,121 |
| **தொலைதொடர்பாடல் சேவை** | | | | | **சன - செத்** | **சன – செத (அ)** |
| நிலையான தொலைபேசி இணைப்பு (எண். '000) (ஆ) | 2,679 | 2,601 | 2,550 | 2,603 | 2,496 | 2,509 |
| கையடக்க தொலைபேசி (எண். '000) | 22,123 | 24,385 | 26,228 | 28,199 | 28,229 | 32,050 |
| கம்பியல்லா தொலைபேசி (எண். '000) | 1,556 | 1,473 | 1,384 | 1,405 | 1,306 | 1,303 |
| இணைய, மின்னஞ்சல் வசதி (எண் '000) | 3,383 | 4,091 | 4,921 | 5,904 | 5,642 | 7,126 |
| **சுகாதாரத்துறை** | | | | | **சன - ஜுன்** | **சன - ஜுன் (அ)** |
| தனியார் வைத்தியசாலைகள் | 210 | 217 | 225 | 181 | 181 | 191 |
| அரசாங்க வைத்தியசாலைகள் | 601 | 610 | 598 | 612 | 612 | 612 |
| கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 76,918 | 76,781 | 76,829 | 76,774 | 76,774 | 76,824 |
| வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்கம்) | 21,331 | 19,429 | 20,458 | 20,349 | 20,349 | 19,692 |
| தாதிகள் எண்ணிக்கை (அரசாங்கம்) | 31,964 | 32,272 | 32,499 | 34,221 | 34,221 | 34,714 |
| **நிதித்துறை** | | | | | **சன - ஓகத்** | **சன - ஓகத்அ)** |
| வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள் | 6,554 | 6,583 | 6,107 | 6,227(ஈ) | 6569(இ) | 6609(இ) |
| பாவனையிலுள்ள கடன் அட்டைகள் | 1,032,833 | 1,142,231 | 1,315,915 | 1,486,545 | 1,435,053 (இ) | 1,640,7(இ) |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 48 | 47 | 46 | 45 | 45 | 43 |
| பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிகள் | 8 | 7 | 7 | 6 | 6 | 5 |
| **சுற்றுலாத்துறை** | | | | | | |
| சுற்றுலாப் பயணிகளின் வருகை | 1,527,153 | 1,798,380 | 2,050,832 | 2,116,407 | 1,871,871 | 2,080,627 |
| சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்) | 2,431 | 2,981 | 3,519 | 3,925 | 3,472 | 3,906 |
| அறை பயன்பாட்டு விகிதம் | 74.3 | 74.5 | 74.8 | 73.3 | 72.5 | த.இ. |
| **போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவு)** | | | | | | |
| பேரூந்து | 3,851 | 4,140 | 2,685 | 3,331 | 3,009 | 2,810 |
| கார்கள் | 38,780 | 105,628 | 45,172 | 39,182 | 35,230 | 76,816 |
| லொறிகள் (உ) | 5,121 | 7,142 | 7,563 | 11,432 | 10,548 | 8,782 |
| மோட்டார் சைக்கிள்கள் | 272,885 | 370,889 | 340,129 | 344,380 | 319,446 | 316,728 |
| முச்சக்கர வண்டிகள் | 79,038 | 129,547 | 56,945 | 23,537 | 22,172 | 18,646 |
| நில வாகனங்கள்,இழுவைவண்டிகள் | 9,082 | 12,105 | 13,947 | 13,049 | 11,991 | 9,454 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*
*(அ) தற்காலிக*
*(ஆ) கம்பியல்லா தொலைபேசிகளின் எண்ணிக்கையை இது உள்ளடக்கியுள்ளது.*
*(இ) செத்தெமபர் இறுதியில்*
*(ஈ) விசேட நோக்க வாகனங்களின் எண்ணிக்கையினை இது உள்ளடக்கியுள்ளது.*

**தங்குமிட வசதிகள் உணவு மற்றும் குடிபானங்கள்**

தங்குமிட வசதிகள் உணவு மற்றும் குடிபான உபதுறையின் பெறுமதி சேர் உற்பத்திகள் 2017 ஆம் ஆண்டின் முதல் மூன்று அரையாண்டில் 5.2 வீதத்துடன் ஒப்பிடும் போது 2018 இதே காலப்பகுதியில் 6.5 வீதமாக அதிகரித்துள்ளது. 2017 இல் 1.5 மில்லியனாக காணப்பட்ட உல்லாசப் பிரயாணிகளின் வருகை 2018 இதே காலப்பகுதியில் 11.6 வீத வளர்ச்சியடைந்து 1.7 மில்லியனாக அதிகரித்தது. இதே காலப்பகுதியில் உல்லாசப் பிரயாணத்துறை 11.6 வீத வளர்ச்சியினால் ஐ.அ.டொ 3,212 மில்லியன்களை வருமானமாகப் பெற்றுக் கொண்டது.

**அட்டவணை 2.3 | சுற்றுலாத்துறையின் செயலாற்றுகை**

| மாதம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | | | சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்.) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
| சனவரி | 146,575 | 156,246 | 194,280 | 219,360 | 238,924 | 233.3 | 259.0 | 333.3 | 407 | 449 |
| பெப்ரவரி | 141,878 | 165,541 | 197,697 | 197,517 | 235,618 | 225.9 | 274.4 | 339.2 | 366 | 442 |
| மார்ச் | 133,048 | 157,051 | 192,841 | 188,076 | 233,382 | 211.8 | 260.3 | 330.8 | 349 | 438 |
| ஏப்ரல் | 112,631 | 122,217 | 136,367 | 160,249 | 180,429 | 179.3 | 202.6 | 234.0 | 297 | 339 |
| மே | 90,046 | 113,529 | 125,044 | 121,891 | 129,466 | 143.3 | 188.2 | 214.5 | 226 | 243 |
| யூன் | 103,175 | 115,467 | 118,038 | 123,351 | 146,828 | 164.2 | 191.4 | 202.5 | 229 | 276 |
| யூலை | 133,971 | 175,804 | 209,351 | 205,482 | 217,829 | 213.3 | 291.4 | 359.2 | 381 | 409 |
| ஓகத்து | 140,319 | 166,610 | 186,288 | 190,928 | 200,539 | 223.4 | 276.1 | 319.6 | 354 | 376 |
| செத்தெம்பர் | 105,535 | 143,374 | 148,499 | 145,077 | 149,087 | 168.0 | 237.6 | 254.8 | 269 | 280 |
| ஒக்தோபர் | 121,576 | 132,280 | 150,419 | 152,429 | 153,127 | 193.5 | 219.2 | 258.1 | 283 | 287 |
| நவம்பர் | 119,727 | 144,147 | 167,217 | 167,511 | 195,582 | 190.6 | 238.9 | 286.9 | 311 | 367 |
| திசெம்பர் | 178,672 | 206,114 | 224,791 | 244,536 | 253,169 | 284.4 | 341.6 | 385.7 | 453 | 475 |
| **மொத்தம்** | **1,527,153** | **1,798,380** | **2,050,832** | **2,116,407** | **2,333,796** | **2,431.1** | **2,980.7** | **3,518.6** | **3,925** | **4,381** |

*மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை, இலங்கை மத்திய வங்கி*
*(அ)திருத்திய*
*(ஆ) தற்காலிகமானது*

**தொலைத்தொடர்பு, தபால் மற்றும் விரைவு தபால் சேவைகள்**

2018 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டில் தொலைத் தொடர்பு துறை 13.6 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. அதேபோல் தகவல் தொழில் நுட்ப மதியுரை சேவைகள் மற்றும் தபால் தொடர்பான சேவைகள் முறையே 7.0 சதவீதம், 4.8 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018 ஆம் ஆண்டில் 100 நபர்களிற்கிடையிலான செல்லிடத் தொலைபேசி பாவனை 11.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இணையத்தள வசதிகள் இணையத்தள வாடிக்கையாளர்களின் அதிகரி ப்பினால் 7.1 மில்லியனுக்கு 26.3 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது. செல்லிடத் தொலைபேசி 32 மில்லியனுக்கு 13.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

**நிதி மற்றும் காப்புறுதிச் சேவைகள்**

பெறுமதி சேர் நிதி மற்றும் காப்புறுதிச் சேவைகள் துறையானது 2017 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டில பதிவுசெய்யப்பட் 10.0 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2018 இன் இதே காலப்பகுதியில் 12.3 வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. இதேநேரம், காப்புறுதித் துறை 9.2 சதவீதமாக இக்காலப்பகுதியில் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

**சொத்து விற்பனைகள் மற்றும் ஏனைய சேவைகள்**

கல்விச் சேவைகள், சுகாதார சேவையும் முறையே 0.1 சதவீதம் 1.3 சதவீதமாக 2018 இன் முதல் மூன்று அரையாண்டு காலப்பகுதியில் அதிகரிப்பை கொண்டிருந்த போது சொத்து விற்பனைகள் நடவடிக்கைகள் 3.6 சதவிகித அதிகரிப்பை இக்காலப்பகுதியினுள் பதிவு செய்திருந்தது.

அட்டவணை 2.4 |மொ.உ.உ வளர்ச்சி (%) இல் துறை ரீதியான பகிர்வு

| துறை | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | முதல் ஒன்பது மாதங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2017 | 2018(அ) |
| **விவசாயம்** | **3.2** | **-2.2** | **5.5** | **-4.2** | **-0.8** | **-3.5** | **4.3** |
| தேயிலை | 3.7 | -1.3 | -2.6 | -11.2 | 4.8 | 6.0 | -4.5 |
| நெல் | 5.3 | -18.6 | 23.3 | -31.0 | -4.0 | -40.6 | 53.4 |
| இறப்பர் | -14.2 | -24.5 | -10.1 | -10.7 | 4.9 | 1.2 | -7.4 |
| தானியங்கள் | 14.3 | -1.9 | 1.0 | -10.5 | -10.3 | -16.9 | 30.5 |
| மரக்கறிகள் | 5.7 | 1.4 | 24.9 | -2.1 | -16.2 | -22.8 | 12.8 |
| கால்நடைகள் | 24.0 | -25.4 | 8.0 | 6.3 | 3.9 | 5.6 | 4.4 |
| காடாக்கம், விறகு | 12.7 | 8.3 | 1.9 | 5.5 | 22.0 | 20.1 | 0.1 |
| மீன்பிடி | 6.1 | 2.1 | -2.7 | 1.6 | -0.5 | 1.4 | 0.0 |
| **கைத்தொழில்** | **4.1** | **1.2** | **3.0** | **6.7** | **4.6** | **4.8** | **1.8** |
| அகழ்வு, சுரங்கமறுத்தல் | 7.6 | 2.2 | -0.9 | 14.4 | 10.1 | 10.4 | -1.0 |
| தயாரிப்புச் செயற்பாடுகள் | 2.3 | 2.9 | 4.7 | 1.8 | 3.9 | 3.9 | 2.8 |
| ஏனைய கைத்தொழில்கள் | 2.9 | 4.1 | 10.1 | 10.0 | 3.9 | 4.3 | 5.5 |
| நிர்மாணம் | 7.5 | -3.4 | -0.9 | 14.9 | 4.4 | 5.0 | -0.4 |
| **சேவைகள்** | **3.8** | **6.5** | **5.3** | **4.2** | **3.2** | **3.2** | **4.4** |
| மொத்த, சில்லறை வர்த்தகம் | 1.3 | 3.8 | 4.7 | 2.5 | 3.8 | 3.3 | 5.3 |
| போக்குவரத்து, களஞ்சியசாலை | 5.4 | 4.5 | 5.5 | 4.1 | 0.9 | 0.6 | 0.8 |
| தங்குமிட வசதி, உணவுச் சேவைச் செயற்பாடுகள் | -5.8 | 4.0 | -1.3 | 4.0 | 5.0 | 5.2 | 6.5 |
| தகவல், தொடர்பாடல் | 7.7 | 11.4 | 12.5 | 8.0 | 9.7 | 10.1 | 10.3 |
| நிதி, காப்புறுதிச் செயற்பாடுகள் | 5.3 | 14.6 | 14.8 | 11.8 | 8.9 | 9.8 | 11.9 |
| ஆதன விற்பனை செயற்பாடுகள் | 12.8 | 6.4 | 9.6 | 4.2 | 4.7 | 5.0 | 3.6 |
| தொழிற்துறை சேவைகள் | 4.0 | 2.8 | -7.1 | -3.1 | 4.3 | 3.1 | 2.1 |
| கல்வி, தேகாரோக்கியம், சமூகப் பணிச் செயற்பாடுகள் | -10.8 | 5.7 | -1.6 | 4.5 | 3.8 | 2.8 | 0.7 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | -0.8 | 5.2 | 6.9 | 5.2 | -4.8 | -4.8 | -0.6 |
| ஏனைய சேவைகள் (சுய சேவைகள் நீங்களாக) | 10.0 | 8.6 | 2.9 | 1.3 | 3.2 | 3.5 | 5.0 |
| **மொ.உ.உ** | **3.4** | **4.5** | **4.8** | **4.2** | **3.3** | **3.2** | **3.3** |

*மூலம் : தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களம்*
*(அ) தற்காலிகமானது*

## வேலையின்மை

வரைபு 2.7 | வேலையின்மை




வேலையின்மை வீதம் 2017 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டின் இக் காலப்பகுதியில் 4.1 சதவீதமாக முன்னேற்ற மடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் இக் காலப்பகுதியில் வேலையின்மை வீதம் ஆண் களிடையே 2.8 சதவீதமாக அதிகரித்தும் பெண் களுக்கிடையில் 6.6 சதவீதமாக குறை வடைந்தும் உள்ளது. ஒரு மில்லியன் வேலை களை குறிப்பாக, இளைஞர்களிடையே உருவா க்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி நிலை யங்களுடாக எடுக்கப்பட்டுள்ளது,

### 2.3 நாணயத்துறை அபிவிருத்திகள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகளோடு இணைந்த வகையில் நாட்டின் நிதிச் சந்தையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக இலங்கை மத்திய வங்கியானது 2018 இன் முதல் பதினொரு மாதங்களின் போது தளர்வான நாணயக் கொள்கையினைப் பின்பற்றியது. உள்நாட்டு நிதிச் சந்தையில் தீவிர திரவத்தன்மைப் பற்றாக்குறையொன்றினை இலங்கை மத்திய வங்கியானது அவதானித்ததன் காரணமாக 2018 இன் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபாய் பொறுப்புக்கள் மீதும் விதிக்கப்பட வேண்டியிருந்த நியதிச் சட்ட ஒதுக்கு வீதத்தினை (SRR) 7.50 சதவீத த்திலிருந்து 6.00 சதவீதம் வரையில் 1.50 சதவீதத்தினால் மத்திய வங்கி குறைத்துள்ளது. இது வங்கிகளின் நிதிச் செலவினத்தினைக் குறைப்பதற்கு உதவியாக அமையும். அவ்வாறே, நிதிக் கொள்கையினைத் தளர்த்துவதற்காக, 2018 இன் நவம்பர் 14 ஆம் திகதியன்று நிலையான வைப்பு வசதி சதவீதத்தினை (SDFR) 8.00 சதவீதத்திற்கு 75 அடிப்படைப் புள்ளிகளினாலும் நிலையான கடன்பெறுகை வைப்புச் சதவீதத்தினை (SLFR) 9.00 சதவீதம் வரையில் 50 அடிப்படைப் புள்ளிகளினாலும் அதிகரித்துள்ளது. இத்தகைய சரிசெய்கைகள் வைப்பு மற்றும் கடன்பெறுகை வீதங்கள் என்பனவற்றிற்கிடையிலான இடை வெளியினைக் குறைப்பதற்கு உதவும். இதேவேளை, விரிந்த பணமானது (M2b) ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு இதே மீளாய்வுக் காலத்தில் பதிவாக்கிய 17.9 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஆண்டு ஓகத்து மாதத்தில் ரூபா 7,043 பில்லியனுக்கு 13.9 சதவீத்தினால் விரிவடைந்துள்ளது. தனியார் துறைக்காக ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட கடனானது, 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய 15.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ரூபா 5,509 பில்லியனுக்கு 16.2 சதவீத்தினால் அதிகரித்துள்ளது. 2018 இன் காரத்திகை மாத இறுதியில் சராசரி நிறையிடப்பட்ட அழைப்புப் பண விகிதம் (AWCMR) மற்றும் சராசரி நிறையிடப்பட்ட முதன்மைக் கடன் பெறுகை வீதம் (AWPR - Weekly) முறையே 8.96 சதவீதம், 12.03 சதவீதம் ஆக 2018 இன் கார்த்திகை மாத இறுதியில் காணப்பட்டது.

**வரைபு 2.8|விளைவு வீதங்கள், நாணய சராசரி, தனியார்த்துறை கடன் வளர்ச்சி**







சராசரி நிறையிடப்பட்ட புதிய வைப்பு விகிதம் (AWNLR) மற்றும் சராசரி நிறையிடப்பட்ட புதிய கடன் பெறுகை விகிதம் (AWNLR) முறையே 14.50 சதவீதம், 14.51 சதவீதம் ஆக 2018 இன் கார்த்திகை மாத இறுதியில காணப்பட்டது. சராசரி நிறையிடப்பட்ட வைப்பு விகிதம் (AWDR) மற்றும் சராசரி நிறையிடப்பட்ட நிலையான வைப்பு விகிதம் (AWFDR) என்பனவும் முறையே 8.77 சதவீதம், 10.81 சதவீதங்களாகவும் 2018 இன் கார்த்திகை மாத

இறுதியில் காணப்பட்டது. உள்நாட்டு பணச் சந்தைகளில் நிலவும் இறுக்கமான திரவ நிலைக்கு பதிலளிக்கும் வகையில், குறுகிய கால வட்டி விதங்கள் மேல் நோக்கி அதிகரித்த போது முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சந்தைகளில் அரசாங்க பத்திரங்கள் மீதான வருவாயில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டுள்ளது.

**பணவீக்கம்**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI, 2013=100) ஆல் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் அளவிடப்படுகின்ற பணவீக்கம் உணவு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணத்தினால், 2018 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் பதிவாக்கிய 3.1 சதவீதத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு கார்த்திகை 3.3 வீதமாக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் (NCPI,2013=100) ஆண்டுக்கு ஆண்டு அடிப்ப டையில் அளவிடப்பட்ட முழுமையான பணவீக்கம் 2018 ஐப்பசி மாதத்தில் பதிவாக்கிய 0.1 சதவீதத்திலிருந்து 2018 கார்த்திகையில் 1.0 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.5 | தலைக்குரிய பணவீக்கம், முக்கிய பணவீக்கம் மற்றும் உணவுப் பணவீக்கம் (அடிப்படை: 2013=100)**

| மாதம் | தலைக்குரிய பணவீக்கம் (%) | | | | முக்கிய பணவீக்கம்* (%) | | | | உணவுப் பணவீக்கம் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | | வருடத்திற்கு வருடம் | | வருடாந்த சராசரி | |
| | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 |
| சனவரி | 5.5 | 5.8 | 4.3 | 6.6 | 7.0 | 3.5 | 4.7 | 5.6 | 4.5 | 10.5 | 6.4 | 9.8 |
| பெப்ரவரி | 6.8 | 4.5 | 4.6 | 6.4 | 7.1 | 3.5 | 5.0 | 5.3 | 7.7 | 6.0 | 6.9 | 9.6 |
| மார்ச் | 7.3 | 4.2 | 5.0 | 6.1 | 7.3 | 3.4 | 5.3 | 5.0 | 9.2 | 5.1 | 7.4 | 9.2 |
| ஏப்ரல் | 6.9 | 3.8 | 5.3 | 5.9 | 6.8 | 3.5 | 5.5 | 4.7 | 8.6 | 3.0 | 7.5 | 8.8 |
| மே | 6.0 | 4.0 | 5.4 | 5.7 | 5.2 | 3.2 | 5.5 | 4.5 | 9.3 | 3.3 | 7.6 | 8.3 |
| யூன் | 6.1 | 4.4 | 5.5 | 5.6 | 5.1 | 3.4 | 5.5 | 4.4 | 9.1 | 2.9 | 7.6 | 7.7 |
| யூலை | 4.8 | 5.4 | 5.4 | 5.6 | 4.9 | 3.9 | 5.4 | 4.3 | 4.8 | 5.6 | 7.0 | 7.8 |
| ஓகத்து | 6.0 | 5.9 | 5.5 | 5.6 | 6.0 | 3.7 | 5.6 | 4.1 | 6.9 | 7.5 | 6.9 | 7.8 |
| செத்தெம்பர் | 7.1 | 4.3 | 5.8 | 5.4 | 6.0 | 3.8 | 5.8 | 3.9 | 10.4 | 2.3 | 7.1 | 7.1 |
| ஒக்தோபர் | 7.8 | 3.1 | 6.1 | 5.0 | 5.8 | 3.8 | 6.0 | 3.8 | 12.6 | -2.3 | 7.6 | 5.9 |
| நவம்பர் | 7.6 | 3.3 | 6.4 | 4.6 | 5.2 | 3.4 | 6.0 | 3.6 | 13.8 | -1.0 | 8.4 | 4.6 |
| திசெம்பர் | 7.1 | 2.8 | 6.6 | 4.3 | 4.3 | 3.1 | 5.9 | 3.5 | 14.4 | -1.5 | 9.3 | 3.3 |

*மூலம்: சனத்தொகை புள்ளவிபரத் திணைக்களம்*

**CCPI முக்கிய பணவீக்கம் புதிய உணவு, சக்கி , போக்குவரத்து, நீங்கலாக*

**வரைபு 2.9 | தலைக்குரிய பணவீக்கம், முக்கிய பணவீக்கம், உணவுப் பணவீக்கம் (அடிப்படை : 2013 = 100)**




## 2.4 பங்குச் சந்தை

கொழும்பு பங்குச் சந்தை நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டு முதல் பதினொரு மாத காலங்களில் குறைவான செயலாற்றுகையைக் காட்டியது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்துக் கம்பனி களினதும் செயலாற்றுகையினை கணிக்கின்ற, பிரதான பங்குச் சந்தைக் குறிகாட்டியான, அனைத்து பங்குகள் விலைச் சுட்டெண் (ASPI) 2017 கார்த்திகை மாதம் இறுதியளவில் பதிவாக்கிய 6,412 புள்ளிகளோடு ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாத இறுதியில் 6019 புள்ளியில் முடிவடைந்து 6.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மிகவும் முக்கியமான எஸ் அன்ட் பி.எஸ்.எல்.20 (S&P SL 20) குறிகாட்டியானது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மீளாய்வுக் காலத்தினை ஒப்பிடுகையில் 3,179 புள்ளிகளுக்கு, 14.7 சதவீத வீழ்ச்சியை

பதிவாக்கியது. கொழும்பு பங்குச் சந்தை பரிவர்த்தனை நிலையத்தின் சந்தை மூலதனமாக்கல் செயற்பாடானது, 2018 ஆம் ஆண்டு கார்த்திகை மாத இறுதியில் ரூபா 2,824 பில்லியனை அடைந்து 3.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்தப் பங்குப் புரள் வினைப் பொறுத்தளவில், 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது ரூபா 183 பில்லியனுக்கு, 12.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

**அட்டவணை 2.6 | மூலதனச் சந்தை அசைவுகள்**

| குறிகாட்டிகள் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | நவம் இறுதியில் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 2107 | 2018(அ) |
| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (1985=100) | 5,643 | 5,913 | 7,299 | 6,895 | 6,228 | 6,369 | 6,412 | 6,019 |
| மிலங்கா விலைச் சுட்டெண் / S&P SL 20 குறிகாட்டி* | 5,119 | 3,264 | 4,089 | 3,626 | 3,496 | 3,672 | 3,725 | 3,179 |
| சந்தை மூலதனவாக்கம் (ரூபா.பில்) | 2,168 | 2,460 | 3,105 | 2,938 | 2,745 | 2,899 | 2,923 | 2,824 |
| விற்பனை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 287 | 289 | 294 | 294 | 295 | 296 | 296 | 297 |
| வருடாந்த புரள்வு (ரூபா.பில்) | 214 | 200 | 341 | 253 | 177 | 220.6 | 210 | 183 |
| வெளிநாட்டு விற்பனைகள் (ரூபா.மில்) | 33,972 | 60,873 | 83,554 | 89,790 | 74,200 | 94,627 | 88,860 | 90,003 |
| வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூபா.மில்) | 72,653 | 83,657 | 104,771 | 84,418 | 74,583 | 112,285 | 106,254 | 71,479 |
| தேறிய கொள்வனவுகள் (ரூபா.மில்) | 38,681 | 22,784 | 21,217 | -5,372 | 383 | 17,657 | 17,394 | -18,524 |

*மூலம். : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி*

** 2012 யூன் மாதம் முதல் பயன்வலுப் பெறும் வகையில் மிலன்கா விலைச் சுட்டெண்ணானது S&P SL 20 என்ற குறிகாட்டியினால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

## 2.5 வெளியகத் துறை அபிவிருத்தி

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது இலங்கையின் வெளியகத் துறையானது மிதமான செயலாற்றுகையினைப் காட்டியது. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தின் போது வர்த்தகப் பற்றாக்குறையானது, ஏற்றுமதி வருமானத்தின் மீது அதிக தாக்கம் செலுத்திய அதிகரித்த இறக்குமதிச் செலவினம் காரணமாக 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய ஐ.அ.டொலர் 8,590 மில்லியனிலிருந்து, 2018 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தின் போது ஐ.அ.டொலர் 9,642 மில்லியனுக்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஒட்டு மொத்த அடிப்படையில்,ஏற்றுமதி வருமானம் 2017 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் 10,341 மில்லியனுடன் ஒப்பிடுகையில், கடந்த பதினொரு மாதங்களில் 10,856 ஐக்கிய அமெரிக்க டொலருக்கு 5.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஏற்றுமதி வளர்ச்சிக்கு பிரதான உந்து சக்தியாக கைத்தொழில் மற்றும் விவசாய ஏற்றுமதிகள் இருந்தது, .புடவை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள், இயந்திர சாதனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் உலோக வகுதிகள் என்பனவற்றின் ஏற்றுமதி அதிகரித்தமையினால் 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதி மூலமான வருமானம் ஐ.அ.டொலர் 8,445 மில்லியனுக்கு 9.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. எப்படியாயினும், விவசாய ஏற்றுமதி வருமானம் மீளாய்வுக் காலத்தின் போது பிரதானமாக, கடலுணவு தவிர்ந்த எல்லா தொகுதிகளினதும் பெரும பாலான குறைந்த செயலாற்றுகை காரணமாக 2,363 ஐக்கிய அமெரிக்க டொலருக்கு 7.3 சதவீதத்தினால் வீழ்ச்சிய டைந்துள்ளது. மேலும், எரிபொருள், வாகனம் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் என்பவற்றின் அதிகரித்த இறக்குமதி காரணமாக 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது இறக்குமதி செலவு 20,498 ஐக்கிய அமெரிக்க டொலருக்கு 8.3 சதவீதத்தினால் அதிகரித்தது. எப்படியாயினும் இந்தக் காலகட்டத்தில், தானியம், தானியங்கள் மற்றும் அரைக்கும் தொழிற்சாலை உற்பத்திகள், இயந்திர உபகரணங்கள் என்பவற்றிற்கான இறக்குமதிச் செலவினங்கள் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 2.7 | வெளிநாட்டு வர்த்தகம்**

ஐ.அ.டொ.மில்.

| சுட்டி | 2015 | 2016 | 2017( அ) | சன – நவம் 2017 | சன – நவம் 2018 (அ) |
|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **10,505** | **10,310** | **11,361** | **10,340** | **10,856** |
| **விவசாய ஏற்றுமதிகள்** | **2,481** | **2,326** | **2,767** | **2,548** | **2,363** |
| தேயிலை | 1,341 | 1,269 | 1,530 | 1,403 | 1,311 |
| பிற விவசாய உற்பத்திகள் | 1,141 | 1,057 | 1,237 | 1,145 | 1,052 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **7,976** | **7,940** | **8,542** | **7,747** | **8,445** |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 4,820 | 4,884 | 5,032 | 4,562 | 4,824 |
| உணவு, குடிபானம்,புகையிலை | 265 | 324 | 393 | 360 | 424 |
| இறப்பர் உற்பத்திகள் | 761 | 768 | 835 | 761 | 799 |
| இயந்திர மற்றும் உபகரணங்கள் | 294 | 318 | 371 | 341 | 402 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 374 | 287 | 434 | 372 | 569 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 1,461 | 1,359 | 1,477 | 1,350 | 1,427 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **28** | **29** | **35** | **32** | **32** |
| **வகுப்பாக்கப்படாதவை** | **20** | **15** | **17** | **16** | **16** |
| **இறக்குமதிகள்** | **18,934** | **19,183** | **20,980** | **18,931** | **20,498** |
| **நுகர்வுப் பொருட்கள்** | **4,714** | **4,319** | **4,503** | **4,069** | **4,622** |
| உணவும் குடிபானமும் | 1,628 | 1,627 | 1,841 | 1,660 | 1,471 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 3,086 | 2,692 | 2,662 | 2,409 | 3,151 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **9,638** | **9,870** | **11,436** | **10,242** | **11,505** |
| பெற்றோலியம் | 2,700 | 2,481 | 3,428 | 2,995 | 3,835 |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 2,296 | 2,705 | 2,724 | 2,492 | 2,617 |
| கோதுமை மற்றும் சோளம் | 357 | 249 | 357 | 354 | 349 |
| ஏனையவை | 4,285 | 4,435 | 4,927 | 4,401 | 4,704 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,567** | **4,982** | **4,895** | **4,476** | **4,297** |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 2,278 | 2,741 | 2,621 | 2,391 | 2,292 |
| கட்டிடப் பொருட்கள் | 1,352 | 1,569 | 1,591 | 1,461 | 1,383 |
| போக்குவரத்து உபகரணம் | 931 | 663 | 675 | 617 | 616 |
| ஏனையவை | 6 | 9 | 8 | 7 | 6 |
| **வகுப்பாக்கப்படாதவை** | **16** | **13** | **147** | **144** | **74** |
| **வர்த்தகப் பற்றாக்குறை** | **-8,429** | **-8,873** | **-9,620** | **-8,591** | **-9,642** |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*
*(அ) தற்காலிகமானது*

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது ஒட்டுமொத்தக் கொடுப்பனவு மீதியானது (BOP) 2017 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் பதிவாக்கிய ஐ.அ.டொலர் 2,005 மில்லியன் மிகையோடு ஒப்பிடுகையில் அது, ஐ.அ.டொலர் 807 மில்லியன் மிகையொன்றினைப் பதிவாக்கியது. இதேவேளை, நீண்ட காலக் கடன்கள் மூலம் அரசாங்கத்தின் நிதிக் கணக்குகளில் தொடரப்பட்ட உட்பாய்ச்சல், சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பரந்தளவிலான நிதி வசதி (EFF) திட்டத்தின் மூலமான கிடைக்கப்பெற்ற ஐந்தாம் கட்டப் பெறுகை, ஐ.அ.டொலர் 2,500 மில்லியன் பெறுமதியான சர்வதேச நாணய முறி விநியோகம், அரசாங்க பங்குப் பிணைய சந்தைக்காக தேறிய உட்பாய்ச்சல்கள் மற்றும் கொழும்புப் பங்கு பரிவர்த்தனை நிலையத்திற்கான தொடர்ச்சியான முதலீட்டு உட்பாய்ச்சல் என்பன காரணமாக தொடர்ந்தும் நிதிக் கணக்குகள் வலுவடைந்தன. 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை நிலையத்தினால் வெளிநாட்டு முதலீடுகள் 106 மில்லியன் அமெரிக்க டொலர் தேறிய வெளிப்பாய்ச்சல் இரண்டாந்தர சந்தையிலிருந்தும், 77 மில்லியன் அமெரிக்க டொலர் உட்பாய்ச்சல் முதலாந்தரச் சந்தையிலிருந்தும் உள்ளடங்கலாக வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சல் 29 மில்லியன் அமெரிக்க டொலரை பதிவாக்கியது. அதே நேரத்தில் ஒட்டு மொத்த அடிப்படையில், 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது அரச பிணையங்களின் சந்தை தேறிய வெளிப்ப்பாய்ச்சலாக 802 மில்லியன் அமெரிக்க டொலரை அடைந்துள்ளது.

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2.0 மில்லியனாக 11.2 சதவீதத்தினால் அதிகரித்ததன் காரணமாக சுற்றுலாத்துறை வருமானமும் 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 3,471 மில்லியனோடு ஒப்பிடு கையில் இக்காலப் பகுதியில் ஐ.அ.டொலர் 3,905 மில்லியனுக்கு 12.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை, வெளிநாட்டு ஊழிய சம்பாத்தியம் 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கிய 6,493 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது 6,431 மில்லியன் அமெரிக்க டொலருக்கு 0.9 சதவீதமாக குறை வடைந்துள்ளது.

இதேவேளை, 2018 ஆம் ஆண்டின் கார்த்திகை மாத இறுதியில் இலங்கையின் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.0 பில்லியனுக்கு, அதாவது 3.7 மாத இறக்குமதிகளுக்கு நிகரானதாகக் காணப்பட்டதோடு, மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 9.7 பில்லியனுக்கு 5.2 மாத இறக்குமதிகளுக்கு நிகரானதாகக் காணப்பட்டது. அத்துடன், 2018 ஆம் ஆண்டின் இக்காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது அமெரிக்க டொலருக்கெதிராக 16.4 சதவீத பெறுமானத் தேய்வினைப் பதிவாக்கியது. மற்றைய நாணயங்களுக்கெதிராக ரூபாவின் பெறுமானத் தேய்வு 15.1 சதவீதத்தினால் அமைந்திருந்தது இதற்கான பிரதான காரணமாகும்.

**வரைபு 2.10 |வர்த்தக மீதி, நாணய மாற்று வீத அசைவு**







## ஏற்றுமதிகள்

2017 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தில் பதிவாக்கிய ஏற்றுமதி வருமானம் ஐ.அ.டொ. 10,341 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது ஏற்றுமதிகள் மூலம் கிடைத்த வருமானம் ஐ.அ.டொலர் 10,856 மில்லியனுக்கு 5.0 சதவீதமாக அதிகரித்தது. புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதியின் அதிகரித்த வருமானம், 5.7 சதவீதம், பெற்றோலிய உற்பத்தி 53.0 சதவீதம், இயந்திர உபகரணம் 17.8 சதவீதம் மற்றும் அடிப்படை உலோகம் 44.8 சதவீதம் ஆகியவற்றினால் 2018 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருமானம் ஐ.அ.டொலருக்கு 8,445 மில்லியனினால் 9.0 சதவீதத்தினால் அதிகரித்தது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவிலிருந்து அதிக கேள்வி மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகளுக்கு ஏற்றுமதி அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி வருவாய் 4,824 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. அதிக ஏற்றுமதி விலைகள், கப்பலிற்கான எரிபொருள் விநியோகம் மற்றும் விமான எரிபொருள்கள் விற்பனை என்பனவற்றின் இணைந்த விளைவு

காரணமாக, பெற்றோலிய பொருட்களின் ஏற்று மதிகளிலிருந்தான வருவாய் கணிசமாக அதிகரித்தது, அதே நேரத்தில் மீளாய்வுக் காலத்தில் பிரதானமாக வாசனைத் திரவியங்கள், தேங்காய், இறப்பர் மற்றும் கனிப்பொருட்கள் என்பனவற்றிலிருந்தான வருமானங்கள் குறைவ டைந்ததன் காரணமாகவும் விவசாயத்திலிரு ந்தான ஏற்றுமதிகளும் ஐ.அ.டொ. 2,363 மில்லியனுக்கு 7.3 சதவீதத்தால் வீழ்ச் சியடைந்துள்ளது.

**வரைபு 2.11 | ஏற்றுமதிகளின் வகுதி**




## இறக்குமதிகள்

கடந்த ஆண்டில் பதவாக்கிய ஐ.அ.டொ. 18,931 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவானது 2018 ஆம் ஆண்டு முதல் பதினொரு மாதங்களின் போது ஐ.அ.டொ.மில் 20,498 மில்லியன் இற்கு 8.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்பிற்கு இடை நிலைப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதிச் செலவினம் பாரியளவில் பங்களிப்புச் செய்து ள்ளது. எரிபொருட்கள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள, உரம் என்பவற்றின் மீதான அதிகரித்த இறக்குமதிச் செலவினம், ஐ.அ.டொலர் 10,242 மில்லியனிலிருந்து ஐ.அ. டொலர் 11,505 மில்லியனுக்கு 12.3 சதவீத த்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. கணிய எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களின் இறக்குமதியின் அளவு மற்றும் அதன் சர்வதேச விலைகள் அதிகரிப்பு காரணமாக அவற்றின் மீதான இறக்குமதி செலவுகள் கணிசமானளவு அதிகரித் திருந்தது.

இதேவேளை உணவல்லாத நுகர்வுப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதி காரணமாக மீளாய்வுக் காலத்தில் நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி செலவினமும் ஐ.அ.டொ. 4,623 மில்லியனுக்கு 13.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது ஆயினும், இக்காலப் பகுதியில் உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் மற்றும் பானங்கள் வீழ்ச்சியினைப் பதிவாக்கின. உணவு அல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொ 2,409 மில்லியனிலிருந்துது ஐ.அ.டொ. 3,151 மில்லியனியனுக்கு 30.8 சதவீதத்தினால் குறிப்பாக 1000 சிலிண்டர் கொள்ளளலிலும் குறைவான தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் கலப்பின மின்சார வாகனங்கள் உயர் இறக்குமதி செலவினம் இடம் பெற்றமையால் அதிகரித்துள்ளது. மீளாய்வுக் காலத்தின்போது முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் ஐ.அ.டொ. 4,296 மில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் குறிப்பாக குறைவான இயந்திர மற்றும் கட்டிடப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் குறைவடைந்துள்ளது. இக்கால கட்டத்தில் முதலீட்டுத் துறையின் அனைத்து உபபிரிவுகளிலும் ஏற்பட்ட இறக்குமதி வீழ்ச்சி 0.2 சதவீதமாக அமெரிக்க டொலர் 616 மில்லியனாக குறைந்த பதிவை காட்டியுள்ளது. 2018 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் கணக்கிடப்பட்ட மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 62 சதவீதத்தை இந்தியா, சீனா, ஐக்கிய அரபு நாடுகள், யப்பான் மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன.

**வரைபு 2.12 | இறக்குமதி வகுதி**



## 2.6 உலக பொருளாதார நோக்கு

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஐப்பசி மாத அறிக்கையின் பிரகாரம், 2018-19 ஆண்டிற்கான கணிப்பிடப்பட்ட பொருளாதார வளர்ச்சி விகிதம் 3.7 ஆகவும், அது சர்வதேச நாணய நிதியத்தினால் 2017 சித்திரை மாதம் எதிர்வுகூறப்பட்ட 2018 – 19 இற்கான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை விட 0.2 சதவிகிதம் குறைவாகவும் காணப்படும்.இதற்கு முன்னேறிய நாடுகளின் குறைந்த வளர்ச்சி, வளர்ந்து வரும் நாடுகளின் பலவீனமான பொருளாதார வளர்ச்சி மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிடையே அரசியல் மற்றும் பூகோள ரீதியான கொந்தளிப்புத் தன்மை என்பன காரணமாக அமைந்தன. வர்த்தகத் தடைகள், அதிகரித்து செல்லும் மூலதன வெளியேற்றம் என்பன வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்களில் காணப்படும். ஐ.அ.டொ. வட்டி வீதம் என்பன இத்தகைய நிலைமையை மேலும் தீவிரமடையச் செய்துள்ளது. முன்னேறிய பொருளாதாரங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையானது நாணய மாற்று வீதங்களில் கடுமையான தாக்கத்தையும் மற்றும் வளரும் சந்தைகளுக்கான மூலதன வாய்ப்புக்களிலும் சரிவினையும் ஏற்படுத் துகின்றன. உலக பொருளாதாரங்களின் இத்தகைய நிச்சயமற்ற தன்மைகளினால் இலங்கை போன்ற நாடுகள் உள்ளக மற்றும் வெளியக தாக்கங்களைள் நிவர்த்தி செய்யும் வகையில் உள்ளக கொள்கைகளை பலப்படுத்தும் அதேவேளை ஒரு முழுமையான பொருளாதார வளர்ச்சியை நோக்கிய கொள்கைளிலும் மாற்றங்களினை ஏற்படுத்த வேண்டுமென பரிந்துரைக் கப்படுகின்றது.

# அரசுடமை தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை

# 03

### 3.1 மேன்நோக்கு

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்கள் குறிப்பாக, அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சி நிறுவனங்களின் பொருளாதாரப் பங்களிப்பின் முக்கியத்துவத்துவம் கருத்திற்கொள்ளப்பட்டு, மேம்பட்ட கூட்டுறவு நடைமுறைகள், முகாமைத்துவ மறுசீரமைப்புக்கள், புத்தாக்கமிக்க நிதியளிப்பு, உறுதியானதும் விவேகம் மிக்கதுமான நிதி முகாமை, போட்டித்தன்மைக்கான ஏற்பாடு மற்றும் சர்வதேச ரீதியிலான சிறந்த நடைமுறைகள் மற்றும் வினைத்திறன் வாய்ந்த மனித வள முகாமை போன்ற விடயங்களைக் கொண்டு தன்னிறைவுமிக்க நிறுவனங்களாக அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளை ஊக்குவித்து, அவற்றுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் ஆற்றலினை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் உபாயமுறையாகத் திகழ்கிறது.

2018 ஆம் ஆண்டின் போது அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகள் பங்கிலாபமாக ரூபா 4,598 மில்லியனையும் அறவீடாக ரூபா 37,230 மில்லியனையும் உள்ளடக்கியதாக ரூபா 41,828 மில்லியனினை வரியல்லாத வருமானம் என்ற வகையில் தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கி பங்களிப்புச் செய்துள்ளன. 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது 48 அரசுடமை வியாபார தொழில்முயற்சிகள் ரூபா 42,364 மில்லியனினை நட்டமாகப் பதிவுசெய்துள்ளன.

2017 ஆம் ஆண்டில் குறிப்பாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை விமானம் மற்றும் விமானச் சேவைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை போன்ற ஐந்து முக்கிய அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களையும் ஒன்றினைத்து முத்தரப்பு கூட்டிணைவு நோக்கக் கூற்று Statement of Corporate Intent (SCI) உடன்படிக்கை ஒன்றினை அறிமுகப்படுத்தியது. குறித்த அரசுடமைத் தொழில்முயற்சிகளின் நிதி மற்றும் நிதிசாராத செயலாற்றுகையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளை இலக்காகக் கொண்ட பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளை மேற்குறித்த கூட்டிணைவு நோக்கக் குறிகாட்டி உள்ளடக்கியுள்ளது.

அதற்கமைய, அமைச்சரவையின் அங்கீகாரத்தினைத் தொடர்ந்து, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, லங்கா சதொச (தனியார்) நிறுவனம், மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம், அரச மரக் கூட்டுத்தாபனம், குருணாகல் பெருந்தோட்ட தனியார் நிறுவனம், அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) நிறுவனம், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை, மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுங்கங்கள் பணியகம் போன்ற தெரிவுசெய்யப்பட்ட 10 அரசுக்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சி நிறுவனங்களுடன் 2018 ஒக்டோபர் மாத இறுதியில் கூட்டிணைவு நோக்கக் கூற்றில் கைச்சாத்திடுவதற்கும் திட்டமிடப்பட்டது. எனினும் 2018 ஆம் ஆண்டின் கிட்டய இறுதிப் பகுதியில் நிலவிய நிருவாக மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையின்மை காரணமாக 2019 ஆம் ஆண்டின் முதற் காலாண்டின் இறுதி வரையில் குறித்த செயற்பாடானது பிற்போடப்பட்டது.

### 3.2 பிரதான அரசுடமைத் தொழில் முயற்சி களின் சுருக்க மீளாய்வு

#### இலங்கை வங்கி

வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் வசதிகளை வழங்கும் நோக்கிலான டிஜிடல் மயமாக்கல் தொடர்பான கூட்டுறவுத் திட்டத்திற்கு ஏற்ப, இலங்கை வங்கியானது 2018 ஜனவரி மாதத்தில் 'B-App' எனும் புதிய சேவையாகிய கையடக்கத் தொலைபேசிப் பிரயோகத்தினை ஆரம்பித்துள்ளது. இந்த வங்கியானது 2018 பெப்ரவரியில் 'BOC DIGI' எனும் அதன் முதலாவது தலைமைச் சேவையினை, நிதித் துறையிலுள்ள புத்தாக்கத்தில் முன்னணி வகிக்கும் நோக்குடன் ஆரம்பித்தது. இலங்கை வங்கியானது 577 எண்ணிக்கையைக் கொண்டதொரு கிளை வலையமைப்பினூடான வாடிக்கையாளர் தளத்தினைப் பேணிவருகிறது.

இலங்கை வங்கியானது 2018 நவம்பர் மாத இறுதியில் ரூபா 2.1 ட்ரில்லியன் பாரிய சொத்து அடிப்படையினைக் கொண்டு இலங்கையின் வங்கியியல் துறையில் முன்னனி வங்கியாக தொடர்ந்தும் காணப்படுகின்றது. வங்கியின் சொத்து அடிப்படையானது, 2017 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 1.9 ட்ரில்லியன் சொத்து அடிப்படையுடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீதத்தினால் அதிகரித்தள்ளது. வங்கியானது 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது 9.5 சதவீத வைப்பு வளர்ச்சியினைப் பதிவாக்கியுள்ளதோடு 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியியோடு ஒப்பிடுகையில் அது 18 சதவீதமாகவும் காணப்பட்டுள்ளது. செயலாற்றுகை அல்லாத முற்பண விகிதமும் 2017 ஆம் ஆண்டில்

இறுதியில் பதிவாக்கிய 2.9 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதத்திற்கு 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது அதிகரித்துள்ளது.

இலங்கை வங்கியானது 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களின் போது இலங்கை வங்கியானது ரூபா 27.7 பில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமாக பதிவுசெய்துள்ளதோடு 2017 ஆம் ஆண்டின் மீளாய்வுக் காலத்தோடு ஒப்பிடுகையில் வரிக்கு முன்னைய இலாபமாக 17 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவாக் கியிருந்தது.

**மக்கள் வங்கி**

மக்கள் வங்கியானது "2020 ஆம் ஆண்டளவில் பூரணமாக டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட வங்கி" ஆகத் திகழ்தல் என்ற அதன் தொலைநோக்கினை அடைந்து கொள்ளும் வகையில், கையடக்கத் தெலை பேசிக்கான 'People's Wave' எனும் வங்கிப் பிரயோகத்தினை அறிமுகம் செய்து அதன் டிஜிடல் மயமாக்கல் செயன்முறையினை முன்னெடுத்துள்ளது.இந்த வங்கியானது தனது வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமிக்க வங்கியியல் சேவையினை வழங்கும் நோக்கில் பணம் வைப்பு இயந்திரம் (CDMs), தானியக்க பணம் மீளப்பெறல் இயந்திரங்கள் (ATMs) மற்றும் நுகர்வோர் கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதற்கான கியொஸ்க் இயந்திரம் போன்ற தானியக்க இயந்திரங்களைக் கொண்ட 208 எண்ணிக் கையான "சுய வங்கியியல் சேவை அலகு" களை 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இறுதி வரை நிறுவியுள்ளது.

வங்கியின் சொத்து அடிப்படையானது 2017 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 1.5 ட்ரில்லியனிலிருந்து 2018 நவம்பர் மாத இறுதியில் ரூபா. 1.7 ட்ரில்லியனுக்கு 14 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. வங்கியின் வைப்பு அடிப்படை 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாக்கிய ரூபா 1.2 ட்ரில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் நவம்பர் மாத இறுதியல் ரூபா 1.4 ட்ரில்லியனுக்கு 16 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வங்கியின் கடன் வகுதியானது 2018 இன் முதல் பதினொரு மாத காலத்தின் போது ரூபா 1.2 ட்ரில்லியனுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. செயலா ற்றுகை அல்லாத முற்பண விகிதமானது 2017 இன் இறுதியில் பதிவாக்கிய 1.9 சதவீத த்திலிருந்து 2018 இன் முதல் பதினொரு மாதங்களின் போது 2.5 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. மக்கள் வங்கியானது 2018 சனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் ரூபா 20.7 பில்லியனினை வரிக்கு முன்னரான இலாபமாக பதிவு செய்துள்ளது.

**தேசிய சேமிப்பு வங்கி**

தேசிய சேமிப்பு வங்கியானது நாட்டின் பாரிய சேமிப்பு வங்கியாகத் திகழ்வதோடு, வைப்புத் தொகைக்கு இலங்கை அரசாங்கத்தின் முழுமையான உத்தரவாதம் வழங்கப்படுகின்ற ஒரே வங்கியாகவும் திகழ்கிறது. இந்த வங்கியானது 2018 இன் முதல் பதினொரு மாத காலத்தினுள் புதிதாக 02 கிளைகளை தனது வலையமைப்பினுள் ஒன்றிணைத்து தனது கிளை அலுவலகங்களை 255 ஆக அதிகரித்து அதன் வலையமைப்பினை விரிவாக்கம் செய்தது. தேசிய சேமிப்பு வங்கியின் வலையமைப்பானது நாடு முழுவதுமுள்ள 4,063 தபால் அலுவலகங்கள் / உப தபால் அலுவலகங்கள் ஊடான வலையமைப்பினால் மேலும் வலுவூட்டப்படுகிறது. இந்த வங்கியானது இலங்கை பிட்ச் தரப்படுத்தல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய நீண்டகால தரப்படுத்தலுக்கான AAA (lka) அந்தஸ்த்தினை தொடர்ந்தும் பதினாறாவது தடவையாக 2018 ஆம் ஆண்டில் தக்கவைத்துள்ளது.

வங்கியின் சொத்து அடிப்படையானது 2017 இன் இறுதியில் பதிவாக்கிய ரூபா 1 ட்ரில்லியனிலிருந்து 2018 இன் நவம்பர் மாத இறுதியில் ரூபா. 1.03 ட்ரில்லியனுக்கு 3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வங்கியின் வைப்பனவு அடிப்படையானது 2017 இன் இறுதியில் பதிவாக்கிய ரூபா 721 பில்லியனிலிருந்து ரூபா 803 பில்லியனுக்கு 11.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்தின் போதான தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பன ரூபா 434 பில்லியனுக்கு 20.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கியானது 2018 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியில் ரூபா 7.3 பில்லியனினை வரிக்கு முன்னைய இலாபமாக பதிவுசெய்துள்ளதோடு, 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவுசெய்திருந்த வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது 39 சதவீத வீழ்ச்சியாகும்.

**இலங்கை மின்சார சபை**

இலங்கை மின்சார சபையானது 2018 இன் நவம்பர் மாத இறுதியில் ரூபா 216,819 மில்லியனினை வருமானமாகப் பதிவுசெய்துள்ளதோடு, 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் இது ரூபா 208,018 மில்லியனாகக் காணப்பட்டது. அவ்வாறே, 2018 ஆம் ஆண்டின் முதல்

அரையாண்டின் போது மழையுடன் கூடிய வானிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அதிகரித்த நீர் மின்னுற்பத்தியானது நேரடி மின்னுற்பத்திச் செலவில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியதன் விளைவாக மீளாய்வுக் காலத்தில் 2017 ஆம் ஆண்டின் நவம்பர் மாத இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 36,061 மில்லியன் தொழிற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு நட்டம் 47 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

மின்சார உற்பத்தி மூலங்களில் நீர் மின்னுற்பத்தி, ஹேசுநு மற்றும் காற்று மூலமாக 3,950 GWh மின் சக்தியும், அனல் (எரிபொருள்) மின்னுற்பத்தி மூலமாக 4,828 GWh சக்தியும் மற்றும் அனல் (நிலக்கரி) மின்னுற்பத்தி மூலமாக 4,773 GWh மின் சக்தியுமாக 2017 இல் முறையே 29:35:36 எனும் விகிதத்திலிருந்து 2018 இல் 44:23:34 எனும் விகிதத்திற்கு மீளாய்வுக் காலத்தின் போது மாற்றம் பெற்றுள்ளது. 2018 இன் முதல் அரையாண்டுக் காலத்தில் நிலவிய மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நீர் மின்னுற்பத்தியானது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட இரட்டிப்படைந்துள்ளது. இதன் விளைவாக, அலகொன்றிற்கான உற்பத்தி செலவினமானது மறூா ஒன்றிற்கு ரூபா. 18.25 ஆக குறைவடைந்துள்ளது. இந்தப் பெறுமதியானது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் ஒரு kWh இற்கு ரூபா. 19.77 ஆகக் காணப்பட்டது.

**அட்டவணை 3.1 | மின்னுற்பத்திக் கொள்ளளவு வகுதி**

| | 2018 ஜனவரி – நவம் (அ) | | |
|---|---|---|---|
| | நிறுவப்பட்டுள்ள கொள்திறன் (மெ.வோ) | மொத்த மின்னுற்பத்தி | கி. கா.வோ. மணித்தியாலங்கள் |
| நீர் மின்னுற்பத்தி | 1,387 | 4,744 | 33 |
| அனல் மின்னுற்பத்தி இ.மி.ச. எரிபொருள் | 604 | 1,694 | 12 |
| அனல் மின்னுற்பத்தி ஐ.பி.பி எரிபொருள் | 629 | 1,553 | 11 |
| அனல் மின்னுற்பத்தி – நிலக்கரி | 900 | 4,971 | 34 |
| என்.சி.ஆர்.இ மற்றும் காற்று | 560 | 1,577 | 11 |
| மொத்தம் | **4,080** | **14,539** | **100** |

*மூலம்: இலங்கை மின்சார சபை மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

(அ) தற்காலிகமானது

மொத்த வங்கிக் கடன் பெறுகைகள் முன்னைய ஆண்டில் பதிவாக்கிய ரூபா 1,242 மில்லியனிலிருந்து 2018 இல் ரூபா 59,849 மில்லியனிற்கு கணிசமானளவு அதிகரித்துள்ளது (மக்கள் வங்கியின் ரூபா 35 பில்லியன் உள்ளிட்டது). செலவினப் பிரதிபலிப்பு விலை யிடல் பொறிமுறை ஒன்றினை அமுல்படுத்தாத நிலையில், இலங்கை மின்சார சபையானது அதன் திரவத்தன்மை சார்ந்த தேவைப்பாட்டினை அரச வங்கிகளிடமிருந்தான கடன் பெறுகைகள் ஊடாக முகாமைத்துவம் செய்ய வேண்டியி ருந்ததனால், அதற்காக, கடன் பெறுகைகள் அதிகரித்தமையே இதற்கு பிரதான காரணமாய் அமைந்துள்ளது. வங்கிக்குச் செலுத்துவதற்கான இலங்கை மின்சார சபையின் மொத்தமான நிலுவைக் கடப்பாடுகள் 2018 நவம்பர் மாத இறுதி வரையில் ரூபா 67,015 மில்லியனாக காணப்பட்டதோடு, இத்தொகையானது 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 24,393 மில்லியனாகக் காணப்பட்டது.

மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் IPP ஆகியவற்றிற்குச் செலுத்துவதற்கான நிலுவையானது, 2017 ஆம்ஆண்டில் காணப்பட்ட ரூபா 64,603 மில்லியனிலிருந்து மீளாய்வுக் காலத்திற்கு ரூபா 60,556 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது.

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதி வரையான காலத்தில் ரூபா 19,034 மில்லியனினைத் தொழிற்பாட்டு நட்டமாக பதிவுசெய்துள்ள அதேவேளை, 2017 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதிக்கான தொழிற்பாட்டு நட்டம் என ரூபா 15,450 மில்லியனாக காணப்பட்டதோடு, இதற்கு உற்பத்திச் செலவினத்தையும் விடக் குறைந்த விலையில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தமையே எனக் கண்டறியப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாத காலத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் இறக்குமதிகள் (முடிவுப் பொருட்கள்) 335,526 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டன. 2018 இன்

முதல் பதினொரு மாத காலத்தில் பிரண்ட் மசகு எண்ணெய்யின் சராசரி விலையானது பீப்பாவிற்கு கிட்டத்தட்ட 57.19 ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டதோடு, 2017 இன் இதே காலப்பகுதியில இப் பெறுமதியானது ஒரு பீப்பாவிற்கு 56.68 ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அதன் தொழிற்பாட்டு நட்டம் மற்றும் நிதிசார்ந்த கட்டுப்பாடுகளை குறைப்பதற்கானதொரு உபாயமுறை நடவடிக்கையாக விலைச் சூத்திரம் ஒன்றினை அறிமுகம் செய்தது. இருப்பினும், இடர்வுகளை ஏற்படுத்தும் சந்தை நெருக்கடிகள் மற்றும் வர்த்தகச் சர்ச்சைகள் போன்றன எண்ணெய்க்கான கேள்வியை ஒடுக்கக்கூடும் என்பதனால் குறித்த காலப்பகுதியில் விலை அதிகரிப்புப் போக்கானது வீழ்ச்சிகண்டது.

2018 இன் முதல் பதினொரு மாதங்களில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனைச் செலவானது 2017 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா. 373,657 மில்லியனிலிருந்து ரூபா. 475,330 மில்லியனுக்கு 27 சதவீதத்தினால் அதிகரித் துள்ளது. இதனால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நிதி சார்ந்த இழப்புகள் மற்றும் நிலுவையிலுள்ள கடன் தொகைகள் காரணமாக கடுமையான நிதி நெருக்கடியினை தற்பொழுது எதிர் கொண்டுவருகிறது. இவை தவிர, ரூபா 65,999 மில்லியன் கடன் வரவுகளின் கணிசமான பாகமானது இலங்கைப் பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிதி நிலைமையினை கடுமையாகப் பாதித்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கடுமையான இடர்வு நிலைமை தொடர்பில் மொத்தமான இழப்புத் தொகையாக ரூபா. 313,182 மில்லியனினை 2018 நவம்பர் மாத இறுதியில் பதிவுசெய்தது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு மற்றும் நிதி சார்ந்த தாக்கங்கள் அரசுக்குச் சொந்தமான இரண்டு வர்த்தக வங்கிகளினால் தற்காலிகமாக தாங்கிக் கொள்ளப்பட்டன. 2018.08.31 ஆம் திகதியிலு ள்ளவாறு குறித்த இரண்டு வங்கிகளுக்கும் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையானது ரூபா 558,748 மில்லியன் வரை 2018.11.30 அன்று அடையப்பெற்றுள்ளது. ஐ.அ.டொ. எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி இறக்கம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையினைக் கடுமையாகப் பாதித்துள்ளது. 2018 இன் முதல் எட்டு மாதங்களின் போதான அந்நியச் செலாவணி மாற்று வீதத்தின் தாக்கம் ரூபா 75,246 மில்லியனாகுமென்பதோடு, 2017 இன் இதே காலப்பகுதிக்கான இந்தப் பெறுமானம் ரூபா 5,992 மில்லியனாகக் காணப்பட்டது.

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, 2020 ஆம் ஆண்டளவில் மொத்தமான குழாய் நீர் உள்ளடகத்தினை 60 சதவீதத்திற்கும், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் உள்ளடக்கத்தினை 91.7 சதவீதத்திற்கும் மற்றும் குழாய் மூலமான கழிவுநீர் உள்ளடகத்தினை 3.3 சதவீதத்திற்கும் மேற்கொள்வதற்கான அதன் இலக்கிற்கு எதிராக, 2018 இன் முதல் எட்டு மாத காலத்தில் மேற்படி இலக்கினை முறையே 50.2 சதவீதம், 90 சதவீதம் மற்றும் 2.1 சதவீதம் என்ற அளவில் பதிவுசெய்துள்ளது. 343 நீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு ள்ளதோடு, 02 கருத்திட்டங்கள் சபை மேற்கொ ள்ளவுள்ள கருத்திட்ட வரிசையில் உள்ளன.

எதிர்பார்க்கப்பட்டவாறு கடப்பாடுகளை எதிர்கொண்டு குறிக்கோள்களை முன்னெடுக்கும் நோக்கில், நிதி அமைச்சானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்நாட்டு நிதியைக் கொண்ட கருத்திட்டங்களுக்கான கடன் எல்லையினை ரூபா 83,908 மில்லியனுக்கும், வெளிநாட்டு நிதியைக் கொண்ட கருத்திட்டங்களுக்கான கடன் எல்லையினை 1,155.38 மில்லியன் ஐ.அ.டொலர் மற்றும் 170.03 மில்லியன் யூரோ வரையும் 2018.08.30 இலுள்ளவாறு அங்கீகரித்துள்ளது. பொதுத் திறைசேரியானது 50 சதவீதமான நகரக் கருத்திட்டங்களையும் 75 சதவீதமான கிராமிய கருத்திட்டங்களையும் மற்றும் கடுமையான சிறுநீரக நோயினைக் குறைப்பதற்கான 100 சதவீத கருத்திட்டங்களையும் முன்னெடுக்கும் நோக்கில் அமைச்சரவையினால் வழங்கப்படும் அங்கீகாரத்திற்கு ஏற்ப கடன்கள் தொடர்பிலான சேவைக்காக ரூபா 580 மில்லியன் தொகையினை 2018 இன் முதல் எட்டு மாத காலத்தின் பொழுது வழங்கியிருந்தது.

2017 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலத்தில் ரூபா 16,644 மில்லியன் எனக் காணப்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமானமானது 2018 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ரூபா 17,310 மில்லியனாக 4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, இது மூன்று தரப்பினருக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டுறவு நிறுவன உத்தேச அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இலக்கு வருமானத்தின் 40 சதவீத அடைவாகும். வருமானத்தில் 4 சதவீத அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வரிக்கு முன்னரான இலாபமானது 2017 இல் அடையப்பட்ட தொகைக்கு எதிரகா ரூபா 83 மில்லியன் தொகைக்கு 90 சதவிதத்தினால்

வீழ்ச்சியடைந்துள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தின் 1 சதவீதமாகும்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது வருமானம் சாராத நீராக ஏற்றுக்கொள்ள முடியாதளவு கொண்டுள்ளதோடு, இதற்கு நீர்க்கசிவுகள், மானியில் பிரச்சினைகள் மற்றும் சட்டவிரோத நீர் எடுத்தல்கள் போன்றன காரணமாக அமைகின்றன. வருமானம் சாராத நீரின் அளவானது 2018 இன் முதல் எட்டு மாத காலத்தில் 25.4 சதவீதத்திற்கு சற்று குறைவடைந்துள்ளதோடு, இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் 25.6 சதவீதமாகக் காணப்பட்டது.

**அட்டவணை 3.2 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களின் இலாப மீட்டல் தன்மை**

ரூபா மில்.

| தொழில்முயற்சி நிறுவனங்கள் | இலாபம்/ (நட்டங்கள்) | | 2018.11.30 அன்று (தற்காலிகமானது) |
|---|---|---|---|
| | 2016 | 2017 | |
| இலங்கை வங்கி | 31,189 | 37,592 | 27,725 |
| மக்கள் வங்கி | 20,814 | 25,913 | 20,663 |
| தேசிய சேமிப்பு வங்கி | 13,303 | 14,029 | 7,354 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 706 | 446 | 483 |
| எச்.டி.எப்.சீ வங்கி | 660 | 557 | 421 |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 259 | 378 | 275 |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | 1,256 | 2,191 | 1,425 |
| இலங்கை சேமிப்பு வங்கி | 691 | 708 | 473 |
| ஊழியர்கள் நம்பிக்கை நிதிச் சபை (அ) | 16,043 | 19,534 | 21,345 |
| இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனம் | 13,791 | 5,890 | 3,521 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (அ) | 2,840 | 813 | 2,881 |
| இலங்கை ஏற்றுமதி கடன் காப்பறுதிக் கூட்டுத்தகபனம் | 193 | (182) | 274 |
| விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபை | (3,261) | (3,895) | (2,897) |
| இலங்கை மின்சார சபை | (13,191) | (49,231) | (18,891) |
| இலங்கைப் பெற்றொலியக் கூட்டுத்தாபனம் | 69,620 | 3,504 | (94,459) |
| இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை | 1,035 | 13,222 | 12,329 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 1,737 | 738 | 350 |
| விமான நிலையம் மற்றும் விமான நிலையச் சேவைகள் (இலங்கை) லிமிட்டெட் | 6,909 | 10,820 | 9,623 |
| சிறிலங்கன் எயாலைன்ஸ் | (12,622) | (28,930) | (40,611) |
| இலங்கைப் போக்குவரத்துச் சபை | (633) | 1,617 | 2,100 |
| அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | (958) | (943) | (954) |
| மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் | 499 | 757 | 436 |
| அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் (அ) | 23 | (491) | 82 |
| மில்கோ (தனியார்) லிமிடட் (அ) | 274 | (154) | (770) |
| தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 9 | (869) | (429) |
| இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் | (117) | (101) | த.இ. |
| ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை | (564) | (399) | த.இ. |
| குருநாகல பெருந்தோட்டங்கள் | 144 | 248 | 211 |
| சிலாபம் பெருந்தோட்டங்கள் (அ) | 126 | 85 | (26) |
| களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை | 43 | 31 | (17) |
| இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் | (52) | 16 | த.இ. |
| இலங்கை கனிப்பொருள் மணல்கள் | 170 | 535 | 676 |
| லங்கா பொஸ்பேற் | 61 | 32 | 9 |
| கஹடகஹ கிறபைற் லங்கா | 1 | 24 | 22 |

| | | | |
|---|---|---|---|
| அபிவிருத்தி லொத்தர் சபை | 2,695 | 2,331 | 1,997 |
| தேசிய லொத்தர்கள் சபை | 897 | 624 | 400 |
| அரச மருந்தாக்கல்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் கூட்டுத்தாபனம் | 441 | 322 | 222 |
| இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் | 53 | 60 | 28 |
| அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம் | 1,940 | 1,868 | 1,135 |
| சிறி ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலை | (171) | (144) | (5) |
| சுயாதீன தொலைக்காட்சி வலைப்பினல் | (70) | (287) | (520) |
| இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | 107 | (196) | 223 |
| இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | 84 | 75 | 68 |
| இலங்கை கைப்பணிப்பொருட்கள் சபை | 9 | 25 | 4 |
| அரச மரக் கூட்டுத்தாபனம் | 531 | 967 | 436 |
| அரச வியாபார கூட்டுத்தாபன பொது வர்த்தக கம்பனி | 61 | 71 | 3 |
| லங்கா சதோச | (4,445) | (2,255) | (89) |
| அரச அச்சு கூட்டுத்தாபனம் (ஆ) | (32) | (229) | (222) |
| இலங்கை மீன்பிடிகள் கூட்டுத்தாபனம் | (161) | த.இ. | த.இ. |
| இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் | (113) | (64) | த.இ. |
| இலங்கை உரக் கம்பனி | 713 | 836 | 21 |
| கொழும்பு வர்த்தக உரக் கம்பனி | 253 | 70 | 184 |
| இலங்கை ஹொட்டல் அபிவிருத்தியாளர்கள் பீ.எல்.சி. | 172 | 173 | 127 |
| இலங்கை சீனி கம்பனி | 1,006 | 638 | த.இ. |
| **மொத்தம்** | **154,968** | **59,370** | **(42,364)** |

*மூலம்: அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*
*(அ) 30.09.2018 இலுள்ளவாறான இலாபம்*
*(ஆ) 31.10.2018 இலுள்ளவாறான இலாபம்*
*(இ) தகவல் இல்லை*

**அட்டவணை 3.3 | அரசுடமைத் தொழில்முயற்சிகளின் அறவீடுகள் / பங்கிலாபம்**

*ரூபா.மில்*

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018. 11.30 அன்று |
|---|---|---|---|---|---|
| **அறவீடு** | **42,137** | **26,118** | **92,338** | **50,447** | **37,230** |
| தேசிய சேமிப்பு வங்கி | 4,000 | 2,800 | 12,026 | 3,865 | 500 |
| இலங்கை வங்கி | 6,500 | 5,000 | 18,000 | 12,000 | 4,500 |
| மக்கள் வங்கி | 6,000 | 3,000 | 8,000 | 5,000 | 3,200 |
| தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 10,000 | 10,000 | 28,000 | 22,800 | 21,850 |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 10,000 | - | 10,000 | - | - |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 10 | 10 | 10 | 25 | - |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | - | 87 | 88 | - | - |
| அரச மரக் கூட்டுத்தாபனம் | 25 | 50 | 175 | 100 | 100 |
| அரச மருந்தாக்கல்கள் தயாரிப்புக் கூட்டுததாபனம் | 25 | 30 | 65 | 45 | 50 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 4,000 | 3,000 | 2,500 | 2,100 | 2,750 |
| புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் | 650 | 850 | 900 | 1,500 | 1,700 |
| தேசிய இரத்திக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை | - | 75 | 175 | 100 | 25 |
| இலங்கை மாநாட்டுப் பணியகம் | - | - | - | - | - |
| இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | 2 | - | - | - | - |
| இலங்கை மின்சார சபை | - | - | 8,000 | - | - |
| முதலீட்டுச் சபை | 100 | 141 | 115 | 220 | 250 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேசிய லொத்தர் சபை | - | 50 | 550 | - | - |
| பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழு | - | - | - | - | - |
| இலங்கை காப்பறுதிச் சபை | - | - | - | - | - |
| இலங்கை தரநிர்ணய நிறுவகம் | - | - | - | - | - |
| இலங்கை ஏற்றுமதி வரவுக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | - | - | 25 | - | 15 |
| தேசிய கால்நடை மற்றும் அபிவிருத்திச் சபை | - | - | - | | - |
| மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் | - | 25 | 25 | 25 | 25 |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகம் | 500 | 500 | 1,500 | 1,000 | 1,000 |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 250 | 400 | 768 | 800 | 800 |
| அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் | 75 | 100 | 216 | 222 | - |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையம் | - | - | 200 | 160 | 165 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | - | - | 1,000 | 185 | 200 |
| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | | | | 300 | 100 |
| **பங்கிலாபங்கள்** | **4,664** | **3,678** | **15,821** | **3,550** | **4,598** |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 60 | 60 | 60 |
| இலங்கை வங்கி | 346 | 346 | 346 | 346 | 346 |
| மக்கள் வங்கி | 316 | 316 | 316 | 316 | 316 |
| லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி | 36 | 36 | 36 | 41 | 41 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 6 | 5 | 2 | 2 | 1 |
| இலங்கை சேமிப்பு வங்கி | - | - | - | - | 86 |
| இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 2,001 | 1,003 | 11,857 | 503 | 1,856 |
| விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் | 500 | 497 | 1,500 | 850 | 300 |
| இலங்கை கனிப்பொருள் மணல்கள் | 43 | 14 | - | - | 35 |
| இலங்கை பொஸ்பேற் லிமிடட் | 35 | 30 | - | 8 | 5 |
| சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | 125 | 84 | - | 10 | 12 |
| லங்கா லேலேன்ட் லிமிடட் | 11 | 54 | 34 | 35 | 45 |
| றக்னா ஆரக்‘க லங்கா லிமிடட் | 68 | 93 | - | - | 40 |
| மந்தை சோல்ட் லிமிடட் | 1 | - | - | - | - |
| இலங்கை உரம் | 38 | 54 | 116 | 90 | 21 |
| கொழும்பு வாணிப உரம் | 12 | 10 | 25 | 12 | 20 |
| பரந்தன் இரசாயனங்கள் கம்பனி | 10 | 5 | - | 8 | 11 |
| கஹடகஹ கிறபைற் லங்கா லிமிடட் | 1 | - | - | - | - |
| அரச வியாபார கூட்டுத்தாபன பொது வர்த்தக கம்பனி | - | - | 5 | - | - |
| இலங்கை டெலிகொம் பீ.எல்.சீ | 759 | 795 | 795 | 795 | 795 |
| டீ லா றூ லிமிடட் | 49 | 61 | 62 | 79 | 106 |
| இலங்கை மின்சார கம்பனி | 25 | 87 | 152 | 218 | 305 |
| இலங்கை கைத்தொழில் பெருந்தோட்டங்கள் | 55 | 55 | 47 | 55 | 78 |
| திறன்கள் அபிவிருத்தி நிதியம் | - | 2 | - | - | - |
| சிலோன் எக்றோ இன்டஸ்றீஸ் | 7 | 6 | 12 | 12 | 19 |
| இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் | 80 | - | - | - | - |
| ஆசிய மீள்காப்புறுதிக் கூட்டுத்தபானம் | - | - | - | - | - |
| லங்கா லொஜிஸ்ரிக் லிமிடட் | 2 | 2 | 5 | - | 1 |
| இலங்கை பெற்றோலிய களஞ்சிய சாலைகள் | - | - | 438 | - | - |
| பெருந்தோட்டக் கம்பனிகள் * | 80 | 62 | 10 | 103 | 95 |
| ஏனையவைகள் ** | - | 1 | 3 | 7 | 4 |
| **மொத்தம்** | **46,801** | **29,796** | **108,159** | **53,997** | **41,828** |

*மூலம் : அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்கள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்*

**குருணாகல், களுபோவிட்டியான, சிலாபம், புஸல்லாவ, கொட்டகல, நமுனுகுல, எல்பிட்டிய ஆகியவற்றை உள்ளடக்குகிறது.*

*** வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சியசாலை முனையங்கள், காசன்ஸ் முகாமைத்துவம், லங்கா கெனரீஸ், யுனைடட் மோட்டர்ஸ் லங்கா லிமிடட், போகல கிறபைற் லங்கா லிமிடட், ஓட்டோகிறில் லங்கா லிமிடட், ஹுன்னஸ்போல்ஸ் ஹோட்டல், லங்கா ஹைட்ரோலிக் சேவிசஸ் (பிறைவட்) லிமிடட், வரை. ஜயா கொள்கலன் சாலைகள் போன்றனவற்றை உள்ளடக்குகிறது.*

# 2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான அடிப்படைகள்

# 04

## மொத்த உள்நாட்டு உற்பத்தி

விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளின் சாதகமான வளர்ச்சிப் போக்குடன் இலங்கை பொருளாதாரமானது 2019 ஆம் ஆண்டில் அதன் மெய் மொ.உ.உற்பத்தியில் 4-5 சதவீதத்திற்கு வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி மற்றும் முதலீடு என்பவற்றிற்கு ஒத்துழைத்தல், குறைந்தளவிலான பணவீக்க மட்டம் மற்றும் போட்டித்தன்மைமிக்க நாணயமாற்று வீதத்தினை ஏற்படுத்துவதற்கான கட்டமைப்பு ரீதியான பொருளாதார மறுசீரமைப்பு என்பன பொருளாதார வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ''பட்டினி இல்லாமை'' தொடர்பில் உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலைபேற்றுத்தன்மைமிக்க விவசாயம் ஒன்றினை உத்தரவாதப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் (SGD) இணங்கிச்செல்லும் வகையில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக 2019 ஆம் ஆண்டில் விவசாயத்துறையானது மேலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், விவசாய உற்பத்திகள் மற்றும் ஆராய்சி என்பனவற்றிற்காக தனியார்த் துறையினரின் பங்களிப்பும் மேலும் ஊக்கப்படுத்தப்படுகிறது. பௌதீக மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட உட்கட்டமைப்பு, சந்தை அணுகல், பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்திகள் ''எண்ட பிரைஸ் ஸ்ரீ லங்கா'' நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகள் என்பனவற்றில் ஏற்படுகின்ற முன்னேற்றங்கள் மூலம் கைத்தொழில் துறையும் மேலும் வளர்ச்சியடையும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம், தொலைத்தொடர்பு, தகவல்தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டம், சுற்றுலாத்துறை, போக்குவரத்து, நிதிச் சேவைகள் மற்றும் ஆதன விற்பனை போன்ற துறைகளில் ஏற்பட்ட சாதகமான பங்களிப்புடன் சேவைத் துறையும் அதன் வளர்ச்சிப் போக்கினைப் பேணும் எனவும் எதிர்பார்க் கப்படுகிறது.

## நுகர்வோர் விலைகள்

2019ஆம் ஆண்டில் பணவீக்கமானது தனி இலக்கத்திலும் நடுத்தரக் காலத்தில் ஒற்றை இலக்கத்தில் நிலைத்திருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேம்பட்ட உள்நாட்டு வழங்கல் மற்றும் விநியோகம், அதிகரித்த விவசாய உற்பத்தி என்பனவற்றுடன் போட்டச் சந்தைமிக்க சூழலில் சாதாரண விலையில் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அவகாசம் என்பனவற்றின் மூலம் நிலையான விலையொன்றினைப் பேணுவதற்கும் உதவும். குறைந்த வட்டி வீதம் மற்றும் போட்டித்தன்மைமிக்க சூழல் மற்றும் பொருளா தாரச் செயற்பாடுகள் என்பனவற்றின் மூலம் குறைந்த பணவீக்க வீதத்தினைப் பேணுவதன் மூலம் அதிக முதலீடுகள் மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சி என்பனவற்றினை அடைந்து கொள்வதற்கான உகந்த சூழலைத் தோற்றுவிக்கும்.

## வேலை வாய்ப்பு மற்றும் வேலையின்மை

விரிவடைந்த தனியார்த் துறை செயற் பாடுகளுடன், குறிப்பாக இளைஞர்களுக்காக தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் காரணமாக தொழில் பெறுநர்களின் எண்ணிக் கையினை வெகுவாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரித்த முதலீட்டா ளர்களது நம்பிக்கையுடன் மேலும் உட் கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய் வதற்காக முன்னுரிமை அளிக்கப்படும். குழந்தைப் பராமரிப்பு வசதிகளை அதிகரித்தல், நெகிழ்ச்சித் தன்மை கொண்ட பணி ஏற்பாடுகள், பகுதி நேர போக்குவரத்து வசதிகள், தனியார்த் துறை ஊழியர்களது மகப்பேற்று நலன்களை மேம்படுத்தல் மற்றும் தொழிற் பயிற்சிக்கான ஏற்பாடுகள் என்பனவற்றின் மூலம் செயலுக்கமான தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்கும் எதிர்பார் க்கப்படுகிறது. உள்நாட்டு தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்படாத வகையில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பினை ஊக்குவிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் துறை முதலீடு, உற்பத்தி மற்றும் அவற்றுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் ஏற்படுகின்ற விரிவாக்கத்தோடு 2019 ஆம் ஆண்டில் மொத்த ஊழியப் படையில் வேலையின்மை வீதத்தினை ஏறக்குறைய 4.0 சதவீதத்திற்கு குறைப்பதற்கும் எதிர்பார்க்க ப்படுகிறது.

## கொடுப்பனவு மீதி

சர்வதேச பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியில், இலங்கையின் அதிகரித்த வெளிநாட்டு ஒதுக்கங்களின் விளைவாகவும் ஒட்டு மொத்த கொடுப்பனவு மீதி மிகையுடனும், இலங்கையின் வெளிநாட்டுத் துறை 2019 ஆம் ஆண்டில் மேலும் வளர்ச்சியடையுமெனவும் எதிர்பார்க்கப்ப டுகின்றது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் இந்தியா போன்ற இலங்கையின் பிரதான வர்த்தக பங்காளர்களது வளர்ச்சிக்கான ஏற்பாடும் 2019 ஆம் ஆண்டில் மேலும் வளர்ச்சியடையுமெனவும் எதிர்பார்க் கப்படகிறது. சீனா, யப்பான் போன்ற நாடுகளோடு மிகவும் பரந்துபட்ட பொருளாதார கூட்டிணைப்பானது நாட்டின் ஏற்றுமதியில்

சாதகமான தாக்கத் தினையும் ஏற்படுத்தும். சுற்றுலா மற்றும் துறைமுகம் தொடர்பான சேவைகளிலிருந்து அதிகரித்த சேவைகள் கணக்கில் காணப்பட்ட மேம்பாடு மற்றும் வெளிநாட்டு ஊழியர் அனுப்புகைகளின் உற்பாய்ச்சல் காரணமாக வெளிநாட்டுக் கடன் கணக்கில் பற்றாக் குறையினை இலகுபடுத்துமென எதிர்பார் க்கப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர் நம்பிக்கை காரணமாக உருவான பங்கு மற்றும் படுகடன் முதலீட்டில் அதிகரிப்பு 2019 இல் மூலதன மற்றும் நிதிக் கணக்கினை உறுதிப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

**நாணயச் செலாவணி விகிதம்**

2019 இல் உறுதியான நாணயச் செலாவணி விகிதத்தினை தொடர்ந்தும் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் பலமான வெளிநாட்டு ஒதுக்குகள் மற்றும் சர்வதேச சந்தைகளில் இலங்கை ஏற்றுமதிப் பொருட்களின் போட்டித் தன்மைக்கு உறுதுணையளிக்கின்ற நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய நாணய மாற்று விகிதத்திற்கான அவசிய முன்னெடுப்புக்களுடன் தொடர்ந்திருக்கும்.

**நாணயச் சராசரிகள்**

2019 ஆம் ஆண்டில் பண வழங்கல் வளர்ச்சியினை மொ.உ. உற்பத்தியில் எதிர்பார்க்கப்பட்ட சாதாரண வளர்ச்சியுடன் ஒரேமட்டத்தில் பேணக்கூடியதாக இருக்கும். அரசாங்க அரசிறைச் செயற்பாடுகளில் மேற்குறித்த திரட்சி மற்றும் அரசுடமைத் தொழில்முயற்சிகளில் ஏற்பட்ட மேம்பட்ட செயலாற்றுகை என்பன எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதில் தனியார் துறையினை அவர்களது முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான வழங்கல் தொகையினை அதிகரிக்கும் நோக்கில் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருக்கும்.

**வருமானம்**

வருமான மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் பின்னிணைப்பு ஐஏ இல் தரப்பட்டுள்ளது.

**செலவினம்**

செலவின மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான அடிப்படைகள் பின்வருமாறு:

- தற்போது அரச சேவையில் 1.3 மில்லியன் அரச பணி ஊழியர்கள் கடமையாற்றுவதோடு அவர்களுக்கு வழங்கப்படும் வருடாந்த சம்பள அதிகரிப்பு காரணமாக ஏற்படுகின்ற வருடாந்த பெயரலவிலான சம்பள அதிகரிப்பினை அடிப்படையாகக் கொண்டு சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் மீதான செலவினம் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

- 2019 இல் இளைப்பாறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள ஏறக்குறைய 25,000 ஓய்வூதியம் பெறுநர்களின் பகுதியளவான தாக்கம் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செல வினத்தினை ஓய்வூதியம் பெறுநர்களின் எண்ணிக்கை 600,000 ஆக மதிப்பிடப் பட்டுள்ளது.

- வட்டிக் கொடுப்பனவுகளில் குறைந்த அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு வட்டி விகிதத்தினை குறைவடையச் செய்வதுடன் பண வீக்க வீழ்ச்சி அதேபோன்று அரசாங்கப் பெறுகைகளின் தேவைப்பாடு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் குறை வினை ஏற்படுத்தும்.

- பொது வசதிகள் சேவை மற்றும் வழங்கல்கள் மீதான செலவினம் என்பன நடுத்தர கால வரவு செலவுத்திட்ட இலக்குகளை முகாமை செய்வதற்காக கடுமையாக இறுக்கமடையச் செய்யப்படும்.

- பாடசாலை மாணவர்கள், மற்றும் அங்கவீனமுற்ற படை வீரர்களுக்கு உதவியளிக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் குடும்பங்களுக்கான மாற்றல்கள் மற்றும் உதவு தொகைகளை தொடர்ந்தும் வழங்கப்படும். விசேட தேவையுடைய நபர்களுக்காக மருந்துகளை இலவசமாக வழங்கல், வறுமையினை ஒழித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டம் போன்ற சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனோம்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அவ்வாறே, உர மானியம் போன்ற விவசாய ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒரு மில்லியன் தொழில் வாய்ப்புக்களை ஏற்படத்துவதற்கான நிகழ்ச்சித்

திட்டமும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

- தகவல் தொழிநுட்பத்தினை அடிப்படை யாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை அரச நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்காகவும் மற்றும் தயாரிப்ப தற்காகவும் அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் என்பன வற்றின் செயலாற்றுகையில் குறிப்பிட த்தக்க வளர்ச்சியொன்று எதிர்பார்க்க ப்படுவதோடு அதனை எதிர்பார்த்த மட்டத்திலும் பேணுவதற்கும், அரச – தனியார்த் துறை கூட்டுப் பங்கேற்பு கொள்கை மூலம் தனியார்த் துறையினரின் பங்களிப்பும் சாதகமாகப் பயன்படுத்தப்படும்.

- தனியார் துறை பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலம் எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்காக வறுமை மற்றும் பிராந்திய பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கில் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் பயிற்சி போன்ற பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்காக தேசிய, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்திலான அரசாங்க முதலீட்டினை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மேற் கொள்ளப்படுகின்ற பொருளாதார முதலீடு மொஉ. உற்பத்தியில் 5 சதவீதத்தில் பேணப்படும்.

- அரசாங்க செலவினத்தில் தர மேம்பாட்டினை அதிகரிப்பதற்கும் வினைத் திறனற்ற செலவினங்களைக் குறைப்பதற்குமான முயற்சிகள் வலுப படுத்தப்படும்.

- மறு பதிப்பினைத் தவிர்ப்பதற்கும், வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் பயன் பாட்டினை சுமுகமாக செயற்படுத் துவதற்கும், நிரல் அமைச்சுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனங்களின் நெருங்கிய ஒத்து ழைப்புடன் அபிவிருத்திச் செயற் பாடுகளை அமுல்படுத்தும் போது பிரயோகிக்கப்படும்.

- அரசிறை மற்றும் காசுப் பாய்ச்சல் முகாமைக்காக அர்ப்பணிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமைகள் செயற் படுத்தப்படும்.

**பெறுகைகள்**

மொ.உ. உற்பத்தியில் படுகடனானது சதவீதமானது 2020 ஆம் ஆண்டளவில் 76.6 சதவீதத்திலிருந்து 70.9 சதவீதம் வரை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மொ.உ. உற்பத்தி சத விகிதத்தில் அரசாங்கப் படுகடனினை உறுதி செய்வதற்காக பேணப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெறுகைகளுக்கு இடையில் முறையான பிணைப்பு வீழ்ச்சிய டையும். படுகடன் குறைப்புச் செயற்பாடானது வருமானத்தினை அதிகரிப்பதினூடாக, குறிப்பாக, 2020 ஆம் ஆண்டளவில் மொ.உ. உற்பத்தியில் 14.5 சதவீதமாக வரி வருமானத்தினை விரிவுபடுத்தல், வரவுசெலவுத் திட்ட செலவினங்களை ஒழுங்கபடுத்தல் மற்றும் நாட்டில் அதிகரித்த முதலீட்டுச் சூழலினை அதிகரித்தல் என்பனவற்றின் மூலம் அடையப்பெறும். படுகடன் முகாமையானது அரசாங்கத்தின் நிதியளிப்புத் தேவைகள் குறைந்த செலவில் அடையப் பெறுகின்றது என்பதனை உறுதிசெய்கின்ற வழிமுறைமை ஒன்றின் மூலம் தொடரப்படும்.

**மதிப்பீடுகளின் உணர்தன்மை**

பின்வரும் சவால்களை எதிர்கொள்வதற்காக பொருளாதார எதிர்வு கூறல்கள் உணரப்பட முடியுமாக இருக்கும்.

- விரைவாக மீட்சியடைந்துவரும் சர்வதேசப் பொருளாதாரம் சர்வதேச எண்ணெய் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களின் விலைகளின் போக்கில் தாக்கத்தினை ஏற்படுத்த முடியும். இது இறக்குமதிச் செலவினம், உள்நாட்டு நுகர்வு விலைகள் மற்றும் உற்பத்திச்செலவினம் என்பவற்றை மோசமாகப் பாதிக்கும் அதேவேளை உள்நாட்டு வளத்தினையும் வரவு செலவுத்திட்ட செலவினத்தையும் பாதிக்கும் என்பதோடு, அதன் காரணமாக ஏற்றுமதிகளும் அதிகரிப்பதற்கும் சாதகமான சூழலொன்றினைத் தோற்றுவிக்கின்றது.

- உள்நாட்டு உற்பத்தி, சர்வதேச வர்த்தகம், உள்நாட்டு விலைகள் மற்றும் ஒட்டு மொத்த வளர்ச்சி என்பனவற்றின் மீது பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தக்

கூடிய வெளிநாட்டு காரணிகளை திருத்து வதற்கான செலவுகள்.

- இயற்கை அனர்த்தங்களோடு இணைந்த இடர்வுகள் மற்றும் சர்வதேச புகோள அரசியல் அழுத்தங்கள் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள்

- விவசாய மற்றும் நீர் மின் உற்பத்திகள் மீது பாதகமான காலநிலை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம், நீர் மின்னுற்பத்தி மற்றும் விவசாயம் என்பனவற்றின் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.
- நிர்வாக மற்றும் கொள்வனவு தொடர்பான தடைகள்.
- நடுத்தரக் காலத்தில் எதிர்பார்க் கப்படுகின்ற நிலைமாற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட ஆற்றல் காரணமாக வெளிநாட்டு நிதியளிப்பு மூலம் நடை முறைப்படுத்தப்படுகின்ற பாரிய கருத்திட்டங்கள் மற்றும் அதன் முதலீட்டுப் பெறுமதி என்பன பொருளாதார வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கம்.

- அரசிறை நிலமை மீது தாக்கம் செலுத்த முடியுமான இடர்வுகள்
- எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச எண்ணெய் விலைகளில் அதிகரிப்பு அரசாங்கத்தின் செலவினத்தினையும்வருமானத்தினையும் பாதிக்கும் அதேவேளை பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையினையும் வளர்ச்சி இலக்குகளையும் அச்சுறுத்து வதாக இருக்கும்.
- சர்வதேச வர்த்தகம் தொடர்பான செயற்பாடுகளைப் பாதிக்கக் கூடிய சர்வதேச பொருளாதாரத்தின் எதிர்பார்க் கப்பட்ட மீட்சி காணப்படாமை. குறிப்பாக ஏற்றுமதிக் கேள்வியானது சர்வதேசப் பொருளாதாரத்தில் பாதகமான நிலை யினை ஏற்படுத்துவதுடன் அதன் மூலம் இலங்கையின் பொருளாதாரமும் மந்த மடையும்.
- அரச சேவைக்கான புதிய ஆட் சேர்ப்புக்கள் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியம் என்பனவற்றுடன் தொட ர்பான மீண்டெழும் செல வினத்திலும் அதிகரித்த போக்கினை ஏற்படுத்தும்.
- அரசுடமை தொழில் முயற்சிகளின் மோசமான அல்லது குறைந்த செயலாற்றுகை

**வரவு செலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்பு கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் (2018 சனவரி முதல் நவம்பர் வரை)**

ரூ.மில்

| தலைப்பு இல. | அமைச்சு / திணைக்களம் | நோக்கம் | மீண்டெழும் | மூலதனம் |
|---|---|---|---|---|
| 1 | அதிமேதகு சனாதிபதி | கிராமிய துறையில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்தல், பௌத்த நூல் நிலையம், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கு அமைவாக நூலகம் மற்றும் தேசிய பொருளாதார பேரவையை தாபித்தல், இலங்கை அமரபுர சங்க சபா மஹாநாயக்க வணக்கத்துக்குரிய கொட்டுகொட தம்மவாச தேரரின் பாவணைக்காக வாகனங்களை கொள்வனவு செய்தல் நிலுவைக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல், சிறு பற்றுநில விவசாய பங்குடமை நிகழ்ச்சித்திட்டக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல். தேசிய பொருளாதார சபைக்கான கொடுப்பனவுகளும் அபிவிருத்தியும், உள்நாட்டு உருளைக் கிழங்கினை இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களினுாடாகக் கொள்வனவு செய்தல் | 145,000,000 | 611,890,000 |
| 2 | பிரதம மந்திரியின் அலுவலகம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் ஒன்றினை தாபித்தல் மற்றும் வாகனங்கள். | 177,000,000 | 13,000,000 |
| 4 | உயர் நீதிமன்ற நீதிபதிகள் | ஆள்சார் வேதனாதிகளுக்கான கொடுப்பனவுகள். | 59,400,000 | - |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 2017 இல் இடம்பெற்ற புதிய கட்டிட நிர்மாணத்திற்கான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல். நிருவாகச் செலவுகளுக்கான கொடுப்பனவு, மூலதனச் செலவு, நிதிக் குத்தகை அடிப்படையிலான வாகனக் கொடுப்பனவினைத் தீர்த்தல் | 11,850,000 | 85,260,000 |
| 7 | நீதிச் சேவை ஆணைக்குழு | போக்குவரத்துச் சேவைகளுக்கான ஏற்பாடு | 2,600,000 | - |
| 8 | தேசிய கொள்கைகள் ஆணைக்குழு | இலங்கையில் சமாதானத்தினை கட்டியெழுப்புவதற்கான ஒத்துழைப்புக் கருத்திட்டத்திற்கு ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதி மானியத்தினை கணக்கீடு செய்தல், ஆள்சார் வேதனாதிகள், காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள். | 21,550,000 | 7,499,000 |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை | ஆள்சார் வேதனாதிகளுக்கான ஏற்பாடு. | 1,976,000 | - |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | இலஞ்சத்தை ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டமொன்றினைத் தயாரித்தல், வெளிநாட்டுப் பிரயாணம் மற்றும் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு. | 11,000,000 | 29,032,000 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதன கடன் வட்டி | 28,000 | - |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பதற்கான கருத்திட்டத்திற்கு ஐ.நா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதி ஒத்துழைப்பினை கணக்கீடு செய்தல், கிளிநொச்சி, புத்தளம் மற்றும் | - | 21,065,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மன்னாரில் மீளக் குடியேறுபவர்களுக்கான கருத்திட்டத்திற்கு ஐ.நா.அகதிகளுக்கான உயர் ஸ்தானியர் ஆலயத்தினால் வழங்கப்பட்ட நிதியினை பயன்படுத்தல், மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வினைத்திறனை வலுப்படுத்தல் | | |
| **17** | பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகம் | வாகனப் பராமரிப்பு | 450,000 | |
| **18** | பாராளுமன்ற பிரதான கொரடாவின் அலுவலகம் | வெளிநாட்டுப் பிரயாணம் | 600,000 | - |
| **22** | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகம் | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு பராமரிப்பு | 157,000 | - |
| **23** | கணக்காய்வு சேவை ஆணைக்குழு | பிரயாணச் செலவினம் | 1,000,000 | - |
| **24** | தேசிய பெறுகை ஆணைக்குழு | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி, மின்சாரம், நீர், வாடகை மற்றும் உள்நாட்டு வரிகள் | 13,206,000 | - |
| **25** | எல்லை நிர்ணய ஆணைக்குழு | ஆள்சார் வேதனாதிகள், வழங்கல்கள் மற்றும் ஏனைய சேவைகள் | 3,205,000 | - |
| **324** | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் | வெளிநாட்டுப் பிரயாணம், தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் | 480,000 | |
| **101** | புத்தசாசன அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக தொல்பொருளியல் பெறுமானமுடைய புராண ரஜமஹவிகாரை புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல், நேபாளத்தில் நிலநடுக்கத்தினால் சேதமடைந்த இடங்களை புதுப்பித்தல் மற்றும் நிலுவைப் பொறுப்புக்களை தீர்த்தல். நிருவாகச் செலவினங்களுக்கான கொடுப்பனவுகள் | 34,144,000 | 381,193,000 |
| **201** | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | தெஹமி திரிய நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்தல், தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு, தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகள், தம்ம பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுதல் வணக்கத்திற்குரிய பெல்லன்வில விமலரத்ன தேரர் மற்றும் கிரம்பே ஆனந்த தேரர் இறுதிக் கிரிகைகள் நடத்துவதற்கான செலவினை ஈடு செய்தல். | 839,220,000 | - |
| **102** | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | வசந்தம் தொலைக்காட்சி சேவையினை மேம்படுத்துவதற்கு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை வழங்குதல்,இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிலுவைகளை செலுத்துவதற்கான செலவினம், வாகனங்களுக்கான வாடகை செலுத்தல், கம்பெறளிய நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான செலவினம். ஆசிய பத்திரிகையாளர் பேரவையின் கூட்டுறவு மாநாட்டிற்கான பாதுகாப்பு, சிற்றுண்டிகள், விளம்பரம், மற்றும் துப்பரவாக்கல் பணிகளுக்கான செலவுகள் | 537,300,000 | 36,500,000 |
| **240** | தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் | யூலை வேலைநிறுத்தக்காரர்களுக்கான மொத்த கொடுப்பனவு திட்டத்தினைச் செயற்படுத்தல். | 60,000,000 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| **241** | பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம் | வரவு செலவுத் திட்ட முன் மொழிவுக் கமைவாக இலங்கை வங்கி மற்றும் கைத்தொழில் முன்னெடுப்புகளுக்கான முதலீட்டு உள்ளீடு | 150,000 | 5,002,000,000 |
| **242** | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | பிரயாணம், வழங்கல் மற்றும் போக்குவரத்து சேவைகளுக்கான ஏற்பாடு | 3,610,000 | - |
| **243** | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | சிறிய, நடுத்தர தொழல் முயற்சியாளர் களுக்கான கடன் திட்டங்களுக்கான வட்டி மானியங்களை வழங்குதல், 3 புதிய களஞ்சியசாலைகளை நிர்மாணித்தல் வரவு செலவுத்திட்ட முன்மொழிவு க்கமைவாக ''என்ரபிறைஸ் ஸ்ரீலங்கா'' முன்னெடுப்புகள் மற்றும் ஊடக வியலாளர்கள் மற்றும் கலைஞர் களுக்கான கடன் திட்டத்திற்கு வட்டி மானியம், உரிமம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கம்பனிக ளினூடாக சிரேட்ட பிரசைகளின் நிலையான வைப்புகளுக்கான வட்டி மானியம், உள்நாட்டு பால்மா தயாரிப்பாளர்களுக்கான விலை மானியம் | 770,000,000 | 1,350,000,000 |
| **244** | வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கை அபிவிருத்தி திணைக்களம் | பொதுநலவாய சிறிய அரச வர்த்தக நிதி அளிப்பு வசதிகளுக்காக பங்களிப்புக் கட்டண 1.5 மில் ஐ.அ.டொலரை மாற்றுவதற்கான ஏற்பாடு | 239,000,000 | - |
| **245** | அரச நிதி திணைக்களம் | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு ∴ மேம்பாடு மற்றும் கொள்வனவுக்கான ஏற்பாடுகள், வெளிநாட்டு உதவி களுக்கான கணக்கீடு மற்றும் USAID STAIR கருத்திட்டத்தின் பெ.சே.வரி மற்றும் தேசக் கட்டுமான வரி என்பவற்றினை தீர்த்தல், அரசாங்க ந - அரச கொள்வனவுக்கான செயலகத்தினை உருவாக்குதல். | - | 122,718,800 |
| **246** | உள்நாட்டு இறைவரி திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன் மொழிவுக் கமைவாக RAMIS நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள். | 10,000,000 | 500,000,000 |
| **248** | மதுவரி திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக் கமைவாக மதுவரி வருமான முகாமைத்துவ முறைமை (EDSL) திட்டத்தினைச் செயற்படுத்தல் | - | 50,000,000 |
| **249** | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | பொது படுகடன் மீள் கொடுப்பனவுக்கான ஏற்பாடு | - | 170,000,000 |
| **250** | அரச கணக்குகள் திணைக்களம் | ஊழியர்களுக்கான கடன் செலுத்துகை, போக்குவரத்து, எரிபொருள் செலவுகள் | 6,680,000 | |
| **323** | சட்ட அலுவல்கள் திணைக்களம் | வெளிநாட்டுப் பயணச் செலவுகளுக்கான ஏற்பாடுகள் | 1,100,000 | |
| **103** | பாதுகாப்பு அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன் மொழிவுக்கமைவாக ஐ.நா. அமைதிகாக்கும் பணியில் இலங்கை படையினருக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி, சமுத்திர பாதுகாப்பு ஆற்றல் மேம்பாட்டு ஆராய்ச்சிக் கருத்திட்ட செலவினங்கள் மற்றும் வாகன கொள்வனவு | - | 2,674,429,000 |
| **222** | இலங்கை இராணுவம் | ஐ.நா அமைதிகாக்கும் பணிக்கான ஏற்பாடுகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களை இடம்மாற்றம் செய்வதற்கான செலவினம் மற்றும் பாகிஸ்தான் கடன் திட்டத்திற்கான ஏற்பாடு | - | 1,649,172,000 |
| **223** | இலங்கை கடற்படை | 2017 உடன் தொடர்பான கொடுப்பனவு நிலுவைகளை தீர்த்தல், 6 அம்புலன்ஸ் வண்டிகள் கொள்வனவு, மூலதனச் | 150,000,000 | 2,732,035,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு, வாகனப் பராமரிப்பு மற்றும் ஐ.அ.அமெரிக்காவிலிருந்து கடற்கரைப் பாதுகாப்பு உயர்தர உபகரணங்களைப் பெறுதல் | | |
| **224** | இலங்கை விமானப்படை | ஐ.நா.அமைதிகாக்கும் படைக்கான ஏற்பாடுகள் மற்றும் 2 அம்புலன்ஸ்கள் கொள்வனவு | - | 627,400,000 |
| **104** | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | ஓய்வூதியம் பெறுநர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம், ஊழியர் தயார்படுத்தல் நிதியத்தினை தாபித்தல், இளைஞர் படையினால் நடாத்தப்படும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், வரவு செலவுத்திட்ட முன் மொழிவுக் கமைவாக ஜேர்மன் தொழில் நுட்ப பாடசாலையுடன் இணைந்து 5 தொழில்நுட்ப கல்லூரிகளை நிர்மா ணித்தல், நிலுவைக் கொடுப்ப னவுகளைத் தீர்த்தல், உயர் கல்விக்கான ஆற்றல்வள நிலையத்தினை தாபித்தல், அனர்த்த த்தினால் பாதிக ்கப்பட்ட பொருளாதார நடவடிக்கை களை மீள ஆரம் பிப்பதற்கான கடன் திட்டத்தினை உருவாக்குதல், இலங்கையில் அவசர முன் வைத்தியசாலை பராமரிப்பு அம்புலன்ஸ் சேவையினை செயற்படுத்தல், பட்டதாரி பயிலுநர்களின் ஆட்சேர்ப்பு செலவினம், ரஸ்நாயகபுரவில் கணுகெட்டிய முடுத்தாவ குளம் மற்றும் கம்பெறளிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2018-2019 இனைச் செயற்படுத்தல். ஏனைய நிருவாகச் செலவுகள் | 392,730,000 | 29,282,288,000 |
| **237** | தேசிய திட்டமிடல் திணைக்களம் | நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் கருத்திட்டத் தயாரிப்பு வசதியினைத் தாபித்தல் | - | 102,000,000 |
| **252** | தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | தேசிய அளவைகள் கருத்திட்டத்தின் முகாமை மற்றும் தரவு சேகரிப்பினை மேம்படுத்துவதற்கு தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களை செயற்படுத்தல், ஆசிய மற்றும் பசுபிக்குக்கான சர்வதேச ஒப்பீட்டு செலவினங்கள் மற்றும் 19 ஆவது ஐஊளுடு சர்வதேச மாநாட்டிற்கான கொடுப்பனவுகள் | - | 10,412,000 |
| **106** | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக வெள்ளம் மற்றும் மண்சரிவினால் அனர்த்தத்திற்கு உள்ளான பாதைகளை புனரமைத்தல், ஒவ்வொரு மாவட்டச் செயலகத்திற்கும் ரூபா ஒரு மில் ஒதுக்கீடு, நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல், வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண செலவினம் மீத்தொட்டமுல்ல சம்பவம் மற்றும் சாலாவையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல். | 5,544,140,000 | 1,047,819,000 |
| **304** | வளிமண்டளவியற் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக வளிமண்டளவியற் திணைக்களத்தினை தரமுயர்த்தல் மற்றும் பங்களிப்பு, அங்கத்துவ கட்டணச் செலவினம் மற்றும் நிருவாகச் செலவுகள் | 1,000,000 | 200,000,000 |
| **108** | அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவின்படி தொல்பொருளியல் பெறுமானமுடைய புராண இராஜமகா விகாரை மற்றும் ஏனைய வணக்கத் தளங்களை புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல். | - | 24,970,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| **202** | முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | தெஹமி திரிய நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்தல் மற்றும் தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல், தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகள் மற்றும் பாடப்புத்தகங்களை அச்சிடுதல் மின்சார மற்றும் நீர் சேவைகள் கொடுப்பனவு, முஸ்லிம் சமூகத்திற்கு பேரீச்சம்பழம் வழங்குவதற்கான கொடுப்பனவு நிலுவைகளை தீர்த்தல். | 157,200,000 | - |
| **110** | நீதி அமைச்சு | நீதியை அடைந்துகொள்வதை வலுப்படுத்தல் கருத்திட்டம் மற்றும் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்கான கருத்திட்டத்திற்காக ஐ.நா.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து மாற்றப்பட்ட நிதியினை பயன்படுத்தல் | - | 21,660,500 |
| **205** | பொது நம்பிக்கைப் பொறுப்பு திணைக்களம் | மூலதன சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான ஏற்பாடு | - | 2,000,000 |
| **228** | சட்ட நிர்வாகம் | செவிப்புல மற்றும் கட்புல பதிவு முறைமைகளுடன் விசேட உயர் நீதிமன்றம் ஒன்றினை தாபித்தல், தன்னியக்க வழக்கு முகாமைத்துவ பொறிமுறையொன்றினை அறிமுகம் செய்தல், உரிய நீதி மன்றத்தில் ஆரம்ப முறைப்பாடுகளை இலத்திரனியல் கோவைப்படுத்தலுக்கு சாதகமான விடயங்களை கண்டறிதல், மண்சரிவுக்குட்பட்ட பிரதேசங்களான இரத்தினபுரி மற்றும் வெளிமடையில் நீதி மன்றங்களை இடம் மாற்றுதல், கிளிநொச்சி, தெல்தெனிய, பூகொட மற்றும் கந்தளாயில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக நீதி மன்றங்களை விரிவுபடுத்துதல் மற்றும் போக்குவரத்து செலவினங்களுக்கான செலவினம் மற்றும் ஏனைய நிருவாகச் செலவுகள் | 570,640,000 | 975,000,000 |
| **229** | சட்டமா அதிபர் திணைக்களம் | ஆள்சார் வேதனாதிகளுக்கான ஏற்பாடு மற்றும் போக்குவரத்து, ஏனைய நிருவாகச் செலவுகள் | 469,740,000 | - |
| **230** | சட்டவரைஞர் திணைக்களம் | ஆள்சார் வேதனாதிகளுக்கான ஏற்பாடு மற்றும் நிருவாகச் செலவுகள் | 19,700,000 | - |
| **233** | அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களம் | ஏனைய வழங்குநர்களுக்கான ஏற்பாடு (மரபணு பரிசோதனை இரசாயணம் கொள்வனவு) | 67,540,000 | - |
| **234** | உயர் நீதி மன்ற பதிவாளர் | பிரதிபண்ணல் கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பு அலகுக்கான செலவினம் மற்றும் தொடரடபாடல் சேவைக் கொடுப்பனவுகள் | 6,326,000 | - |
| **111** | சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு, சுவசெரிய முன்னெடுப்பினை வலுப்படுத்தல், கொழும்பு, கண்டி, அநுராதபுரத்தில் விசேட மகப்பேறியல் அலகுகளை தாபித்தல், மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளில் புற்றுநோய் பிரிவுகளை தாபித்தல், காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் இனப்பெருக்க சிகிச்சை நிலையத்தினை தாபித்தல், பொலநறுவை வைத்தியசாலையில் மகப்பேற்று மற்றும் குழந்தை பிறப்பு தொகுதி, மொரட்டுவ பிரதேச வைத்தியசாலை விரிவாக்கல், தெனியாய மற்றும் பேருவலை தள | 2,649,000,000 | 1,767,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைத்தியசாலை விரிவாக்கல், பிரசவ, சிறுவர் சிகிச்சை, மருத்துவ மற்றும் நிர்வாக அலகுகளை கம்புறுகமுவைக்கு மாற்றுவதன் மூலம் மாத்தறையில் புதிய மாவட்ட வைத்தியசாலையினை உருவாக்குதல், மஹரகமையில் பற் சுகாதார நிறுவனத்தினை வலுப்படுத்தல், தொற்றாத நோய்களின் ஆபத்தினை கையாள்வதற்கு சுகாதார கல்விப்பணியகத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்தல், அரசாங்க மருந்தக வலையமைப்பினை வலுப்படுத்துவதனூடாக ஆரம்ப சுகாதார பராமரிப்புச் செயற்பாடுகளை மேம்படுத்தல், உணவு சுத்தம் மற்றும் உணவுப் பாதுகாப்பு முறைமையினை விருத்தி செய்தல், மனோவியல் மற்றும் நரம்பியல் சுகாதார விடயங்களை வலுப்படுத்தல், தேசிய சுகாதார மற்றும் அதனுடன் இணைந்த ஆராய்ச்சியினை வலுப்படுத்தல், பாலியல் நோய்கள் மற்றும் எச்ஐவி, எயிட்ஸ் நோய்களுக்கான விசேட அலகு, வரவு செலவுத்திட்ட முன்மொழிகளுக்கமைவாக அநுராதபுரம், பொலன்நறுவை மற்றும் யாழ்ப்பாண பொது வைத்தியசாலைகளுக்கு ஈஎஸ்டபிளியுஎல் உபகரணங்களை வழங்குதல், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வலிப்பு நோய் பிரிவின் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு மற்றும் வைத்தியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள். | | |
| **220** | ஆயுர்வேத திணைக்களம் | ஆள்சார் வேதனாதிகள், வழங்கல்கள், பொறித்தொகுதி மற்றும் இயந்திர பராமரிப்பு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணத்திற்கான செலவினம் | 167,400,000 | - |
| **112** | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | கண்டமேடை பேச்சுவார்த்தைகளுக்கான செயலகமொன்றினை தாபித்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக 70 ஆவது சுதந்திர தின விழாவினை கொண்டாடுவதற்கு வெளிநாட்டு தூதரகங்களுக்கான ஒத்துழைப்பு, நியூயோக் மற்றும் பிரேசிலியா என்பவற்றில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கான கட்டிடங்களின் உரித்து மாற்றல் கணக்கீடு, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களின் பயன்பாட்டுக்கான வாகனக் கொள்வனவு மற்றும் தொழிற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் வாடகையினை செலுத்துதல் ஐக்கிய அரபு இராச்சிய நீதிமன்ற வழக்கிற்கான சட்டவாளர் செலவு, அவுஸ்திரேலிய அரசின் ஐமுசயு நடவடிக்கை குழவிற்கான கூட்ட செலவுகள், தேசிய சமுத்திர விடய ஆய்விற்கான செயலக இடமாற்றச் செலவுகள், ஏனைய நிருவாகச் செலவுகள் | 471,817,500 | 825,025,000 |
| **114** | போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சு | முச்சக்கர வண்டி ஒழுங்குபடுத்துகை அதிகாரசபை ஒன்றினை தாபித்தல் மற்றும் கட்டாயமாக்கப்பட வேண்டிய விடயங்கள், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மின்சார பேருந்துகளை அறிமுகப்படுத்தல், பாடசாலை மற்றும் உயர் கல்வி பருவச்சீட்டுக்களை செயற்படுத்தல், வருமானமீட்டாத பாதைகளில் | 11,540,000,000 | 700,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொழிற்படும் இ.போ.சபைக்கான மானியம், இராணுவத்தினருக்கான பேரூந்து அனுமதிப்பத்திரம், வெளிநாட்டுப் பிரயாணம் மற்றும் இ.போ. சபையின் நிலுவையான ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பினை செலுத்துதல் மற்றும் நிருவாகச் செலவுகள் | | |
| **306** | இலங்கை புகையிரத திணைக்களம் | வடக்கு புகையிரத பாதைக்கான சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு முறைமையினைப் பொறுத்துவதற்கான கொடுப்பனவினைத் தீர்த்தல், மதவாச்சி – மடு பாதை மற்றும் பளை – காங்கேசந்துறை பாதையினை மாற்றீடு செய்தல், புகையிரத அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் 09 டீசல் இயந்திரங்கள் கொள்வனவு, 200 பயணிகள் கோச்சுகள் திருத்தம், தடுத்து வைத்தல் பணத்தினை மீளளிப்புச் செய்தல், கரையோர பாதைக்கான புகையிரத கருத்திட்டத்தின் இறுதிக் கொடுப்பனவு | - | 1,852,598,000 |
| **307** | மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கான ஏற்பாடுகள், தொழிற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்தின் குத்தகை வாடகை மற்றும் ஏனைய நிருவாகச் செலவுகள் | 151,082,000 | 132,000,000 |
| **117** | உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டத்தினைச் செயற்படுத்தல், கிராமிய பாதை மீளெழுச்சி நிகழ்ச்சித்திட்டம், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்குமான காப்புறுதித் திட்டம், சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமொன்றினைத் தாபித்தல், வயம்ப, சப்பிரகமுவ மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களில் அரச மருத்துவ பீடங்களை தாபித்தல், கராப்பிட்டிய வைத்தியசாலையில் பேராசிரியர் அலகொன்றினைத் தாபித்தல், றுகுணு பல்கலைக்கழகத்தில் கடற்படை கற்கைகள் மற்றும் கப்பற்றொழிலுக்கான நிலையமொன்றினை தாபித்தல், உயர் கல்விக்கான சான்றுப்படுத்தல் பொறிமுறை மற்றும் சுயாதீன தர உறுதிப்படுத்தல், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்திற்கான ஒத்துழைப்பு, உணவு, தொழில்நுட்ப, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான நிலையமொன்றினை வயம்ப பல்கலைக்கழகத்தில் தாபிப்பதற்கான ஒத்துழைப்பு, மகாபொல புலமைப்பரிசில் திட்டத்திற்கு குடும்பமொன்றுக்கான தகுதி பெறும் வருமானத்தினை வருடத்திற்கு 300,000 ரூபாவிலிருந்து 500,000 ரூபாவாக அதிகரித்தல், 7 புதிய தொழில்நுட்ப பீடங்களில் தொழில்நுட்ப துறை பட்ட படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்குதல், வயம்ப, சப்பிரகமுவ மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களில் அரச மருத்துவ பீடங்களை தாபித்தல், தரவு விஞ்ஞானம் மற்றும் பாரிய தரவு பகுப்பாய்வு, நிபுணத்துவ ஆய்வுகள் மற்றும் வியாபார பகுப்பாய்வு போன்ற புதிய துறைகளுக்கான ஒத்துழைப்பு போன்ற | 199,500,000 | 44,570,193,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துறைகளை கொழும்பு பல்கலைக்கழகத்தில் அறிமுகம் செய்தல், வவுனியா வளாகத்தில் சகல வசதிகளையும் கொண்ட நூலக மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை வலுப்படுத்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக வியாபார உயர் பாடசாலைகளின் சங்கத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல், 2017 தொடர்பான கருத்திட்டம் தொடர்பான பொறுப்பு நிலுவைகளை தீர்த்தல், 84 மாணவர் விடுதிக் கட்டிடத் தொகுதிகளை நிர்மாணித்தல், பல்கலைக்கழக மாணவர்களுக்கான இணையதள வசதிகள் மற்றும் வட்டிச் சலுகையில் மடி கணனியை வழங்குதல், றுஹுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு 10 மாடிக் கட்டிடம், வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களை ஊக்குவித்தல். மொரட்டுவப் பல்கலைக் கழகத்தின் ெழில்நுட்ப நிறுவனத்தினை இடமாற்றுவதற்காக உள்நாட்டு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களை மீளச்செலுத்ததல், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பால் சமத்துவம், பகிடிவதை மற்றும் பாலியல் நடவடிக்கைகள் பற்றிய ஆராய்ச்சிக்கான கொடுப்பனவுகள். | | |
| **214** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல மற்றும் மாணவர் உதவித் திட்டத்தினைச் செயற்படுத்தல், 2017 தொடர்பான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல் | 3,270,500,000 | 3,254,000,000 |
| **118** | கமத்தொழில் அமைச்சு | சூழலியல் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்தல், 1,500 சிறிய குளங்களை புனரமைத்தல் மற்றும் தூரெடுத்தல், விவசாயிகளுக்கான பங்களிப்பு காப்புறுதித் திட்டத்தினை அறிமுகப்படுத்தல், ஹொறண மற்றும் மாகந்துர ஆராய்ச்சி நிலையங்களில் அதிக விளைச்சளைத் தரக்கூடிய வாழைப்பழம் மற்றும் அன்னாசி நாற்றுக்களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சியினை மேம்படுத்தல், தேசிய நோய்க்காப்பு நிலையத்தில் பரிசோதனை வசதியினை தரமுயர்த்தல், உரமானிய நிகழ்ச்சித்திட்டம், அபிவிருத்தி உதவு தொகைகள், 2017 கருத்திட்டம் தொடர்பான நிலுவைப் பொறுப்புக்களைத் தீர்த்தல், ஜெய்க்காவினால் வழங்கப்பட்ட யுயுசுனுமு மற்றும் மறுதரப்பு நிதியினால் வழங்கப்பட்ட மானியத்திற்கான கணக்கு, மூலதனச் சொத்துக்கள் மேம்பாடு மற்றும் கொள்வனவு, வாகன பராமரிப்பு, முழீஜயு நிலையத்திற்கான வாகன இறக்குமதி வரிகளைச் செலுத்துதல் மற்றும் ஏனைய நிருவாகச் செலவுகள். | 24,978,449,000 | 5,784,823,640 |
| **281** | கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 2017 தொடர்பான நிலுவைப் பொறுப்புக்களைத் தீர்த்தல் | - | 612,793,701 |
| **285** | கமத்தொழில் திணைக்களம் | 2017 தொடர்பான கருத்திட்டங்களின் பொறுப்பு நிலுவைகளை தீர்த்தல், அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ செலவினங்கள் இலங்கையில் பழங்கள் பெறுமதி சேர்ப்பு மற்றும் மேலதிக நேர | 45,887,000 | 199,396,837 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் விடுமுறை கால கொடுப்பனவுகளுக்கான செலவினம் | | |
| **119** | மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு | உலக ஆபத்து தணிப்பு முன்னெடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மானியத்தினை பயன்படுத்தல், 2017 இன் நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல், தூயசக்தி மற்றும் வலையமைப்பு வினைத்திறன் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் செலவினங்கள், நிலையான உயிர்வாயு சக்தி உற்பத்தி மற்றும் நவீன உயிரியல் சக்தி தொழில்நுட்பத்தினை ஊக்குவித்தல் கருத்திட்டத்திற்கான செலவினம மற்றும் நிருவாகச் செலவுகள். | 9,800,000 | 280,538,000 |
| **120** | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு | சிறுவர் குற்றவாளிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை எடுத்துச் செல்வதற்கான வாகனங்கள் கொள்வனவு, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக அரசாங்க அலுவலகங்களில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை தாபித்தல், கற்பிணித் தாய்மார்களுக்கான போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம், முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவு, நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கமைவாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான லமா திரிய கொடுப்பனவுகள், ஐ.நா.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், யுனிசெவ் இனால் வழங்கப்பட்ட நிதி மானியத்திற்கான கணக்கீடு, அவசர நிவாரண பொதிக்கான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல், மற்றும் வெளிநாட்டுப் பிரயாணச் செலவினம் | 5,818,080,000 | 103,763,453 |
| **217** | நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் | வெளிநாட்டுப் பிரயாணச் செலவினங்கள் | 750,000 | - |
| **121** | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்த பொறுப்புக் கருத்திட்டத்தின் செலவினங்கள், அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிலுவையான பணிகளை நிறைவு செய்தல், 1,000 சேவா பியச கட்டிடங்களின் நிர்மாண நிலுவையினை தீர்த்தல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களுடன் தொடர்பான கையிலுள்ள நிலுவைகளை தீர்த்தல் | - | 1,131,473,000 |
| **254** | பதிவாளர் நாயகம் திணைக்களம் | 2017 ஆம் வருடத்துடன் தொடர்புடைய மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான நிலுவைகளை செலுத்துதல் | 36,000,000 | 21,270,000 |
| **256** | மாவட்டச் செயலகம் - கம்பஹா | 2017 மே மாதத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களுடன் தொடர்பான நட்ட ஈட்டுக்கான செலவினம் | - | 10,840,000 |
| **257** | மாவட்டச் செயலகம் - களுத்துறை | 2017 மே மாத அனர்த்தத்தின் போது புனரமைப்புப் பணிகள் தொடர்பான கையிருப்பு நிலுவைகளை தீர்த்தல் மற்றும் நட்டஈட்டுக் கொடுப்பனவு | - | 1,234,627,000 |
| **261** | மாவட்டச் செயலகம்- காலி | 2017 மே மாத அனர்த்தத்தின் போது புனரமைப்புப் பணிகள் தொடர்பான கையிருப்பு நிலுவைகளை தீர்த்தல் மற்றும் நட்டஈட்டுக் கொடுப்பனவு | - | 717,760,000 |
| **262** | மாவட்டச் செயலகம் - மாத்தறை | நில்வளா நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் நிலுவைக் கொடுப்பனவுகளை தீர்த்தல், 2017 மே மாத அனர்த்தத்தின் போது புனரமைப்புப் பணிகள் தொடர்பான செலவினங்களை செலுத்துதல் மற்றும் நட்டஈட்டுக் கொடுப்பனவு | - | 2,038,768,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| **263** | மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை | 2017 மே மாத அனர்த்தத்தின் போது புனரமைப்புப் பணிகள் தொடர்பான கையிருப்பு நிலுவைகளை தீர்த்தல் மற்றும் நட்டஈட்டுக் கொடுப்பனவு | - | 208,810,000 |
| **271** | மாவட்டச் செயலகம் - திருகோணமலை | பாதுகாப்பு சேவைகளுக்கான ஏற்பாடு | 7,150,000 | - |
| **272** | மாவட்டச் செயலகம்- குருநாகல் | சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கான ஏற்பாடு | 26,800,000 | - |
| **278** | மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி | 2017 மே மாத அனர்த்தத்தின் போது புனரமைப்புப் பணிகள் தொடர்பான கையிருப்பு நிலுவைகளை தீர்த்தல் மற்றும் நட்டஈட்டுக் கொடுப்பனவு | - | 2,353,920,000 |
| **279** | மாவட்டச் செயலகம் - கேகாலை | 2017 மே மாத அனர்த்தத்தின் போது புனரமைப்புப் பணிகள் தொடர்பான கையிருப்பு நிலுவைகளை தீர்த்தல் மற்றும் நட்டஈட்டுக் கொடுப்பனவு | | 66,740,000 |
| **122** | காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு | ஐ.நா வாழ்விட கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட மானியத்தினை பயன்படுத்துவதற்கான நிர்வாகச் செலவுகள். | 3,200,000 | 11,700,000 |
| **286** | காணி ஆணையாளர் நாயகம் | அரச கரும மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான செலவு | 8,900,000 | |
| **287** | காணி உரித்து நிருணயத் திணைக்களம் | நிர்வாக செலவுகள் | 12,000,000 | |
| **327** | காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களம் | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புச் செலவினம் | - | 1,500,000 |
| **123** | வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக உரிமையாளர் மேற்கொள்ளும் வீடமைப்பு திட்டம் மற்றும் கிராமியத் துறையில் தற்பொழுதுள்ள வீடுகளின் மேம்பாடு மற்றும் காணி சுவீகரிப்புக்கான நட்டஈடு வழங்குதல் | 42,460,000 | 822,000,000 |
| **309** | கட்டிடங்கள் திணைக்களம் | நிர்வாக செலவுகள் | 26,600,000 | |
| **124** | சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமை அமைச்சு | குறைந்த வருமானமுடைய அங்கவீனமுற்றவர்களுக்கான ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான நிதி ஒத்துழைப்பு, சிறுநீரக நோயாளிகளுக்கான நிதி ஒத்துழைப்பு மற்றும் கண்டிய மரபுரிமைக்கான நியதிச்சட்ட சபை∴அதிகார சபையினை தாபிப்பதற்கான குழுவின் செலவினம் | 12,474,980,000 | 20,000,000 |
| **331** | திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் | சமுர்த்தி நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்ட செலவினம் | 39,600,000,000 | - |
| **126** | கல்வி அமைச்சு | பீசா நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகம் செய்தல், தேசிய கல்விக் கல்லூரிகளிலுள்ள மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு, கல்வி சீர்திருத்தங்கள்,‘‘சிமாட் வகுப்பறை’’ எண்ணக்கருவினை வலுப்படுத்தல், இலத்திரனியல் பாடப்புத்தகங்களை தயாரித்தல் மற்றும் டிஜிற்றல் மயப்படுத்தல், மகரகம கல்விக் கல்லூரியில் ஆங்கில மொழியில் ஆசிரியர் பயிற்சிக்கான விசேட நிலையமொன்றினைத் தாபித்தல், ஹாப்பிற்றிகம மற்றும் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிகளில் விசேட | 479,900,000 | 2,582,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேவையுடையோர் பயிற்சி வசதிகளை தரமுயர்த்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக களைஞர்களுக்கான விபத்து மற்றும் வைத்திய காப்புறுதித் திட்டம், புலமைப்பரிசில் (ஆண்டு 5 மற்றும் சுபஹக்க புலமைப்பரிசில் திட்டத்தினைச் செயற்படுத்தல் | | |
| **207** | தொல்பொருளியல் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக றிதிகல மற்றும் ரஜகளதென்ன தொல்பொருளியல் இடங்களை பாதுகாத்தல் மற்றும் பேணுதல் | - | 25,000,000 |
| **212** | பரீட்சைத் திணைக்களம் | அச்சு இயந்திரங்களை கொள்வனவு செய்தல் | - | 500,000,000 |
| **130** | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு | தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பினால் வழங்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவினை செயற்படுத்தல், 2017 இற்கான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுதாய அபிவிருத்தி அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 10,000,000 | 11,680,000 |
| **211** | அரசாங்க அச்சக திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள் | 122,000,000 | |
| **135** | பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு | உற்பத்தியினை அதிகரிப்பதற்கு தேயிலை சிறுபற்று நில செய்கையாளர்களுக்கான உதவியினை வலுப்படுத்தல், கலப்பின தெங்கு நாற்றுப் பொருட்களை வழங்குவதற்கு தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்திற்கான ஏற்பாடு, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக இறப்பர் துறைக்கான பெருந்திட்டம், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத்துறையின் சிறுபற்று நிலக்காரர்களுக்கான உர மானியம் நிகழ்ச்சித்திட்டம், தொழில் நியாயசபைகளினால் வழங்கப்பட்ட கட்டளைக்கமைவாக கொடுப்பனவுகள் | 117,930,000 | 338,452,000 |
| **293** | இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | சந்தா பண செலுத்துகைகள் | 2,000,000 | |
| **136** | விளையாட்டுத்துறை அமைச்சு | மனித செயலாற்றுகை ஆய்வு கூடத்திற்கான உபகரணம் வழங்கல் செயற்படுத்துகை, சுகந்ததாச உள்ளக விளையாட்டரங்கினை நவீனமயப்படுத்தல், சுகந்ததாச வெளியரங்கினை தரமுயர்த்தல், அரச தனியார் பங்களிப்பு மூலம் முகாமை செய்தல், ஊக்க மருந்து பாவனைக்கெதிரான தேசிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் போதைப்பொருள் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி ஆய்வு கூடத்தினை தாபித்தல், நாடு முழுவதிலும் 100 கிராமிய மைதானங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் சமுதாய விளையாட்டு எண்ணக்கருவினை அறிமுகம் செய்தல் மற்றும் வசதியளித்தல், தியகமவில் விளையாட்டுப் பாடசாலை மற்றும் அக்கடமி ஒன்றினை தாபித்தல், 2020 இல் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான விளையாட்டுக் கட்டிட தொகுதிகளை தயார்படுத்தல். | - | 2,383,000,000 |
| **219** | விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | விளையாட்டு வீரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பங்குபற்றுவதற்கு வசதியளித்தல், மாகாண மற்றும் மாவட்ட மட்ட விளையாட்டரங்குகளை | 50,000,000 | 405,700,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தரமுயர்த்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக மாத்தளை ஹொக்கி மைதானத்தினை புனரமைத்தல் மற்றும் விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட செலவினங்களை தீர்த்தல். | | |
| **140** | மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு | வாகனங்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | - | 4,706,000 |
| **145** | சிறைச்சாலை மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு | முன்னைய படை வீரர்கள் மற்றும் யுத்தத்தினால் விதவையானவர்களுக்கான சம்பள உதவு தொகையினை வழங்குதல், அவர்களது ஆற்றல்களை விருத்தி செய்தல், தொல்பொருளியல் பெறுமானமுடைய புராண ரஜமஹா விகாரை புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல், அங்கவீனமுற்ற பெண்களின் தேவையினை நிறைவேற்றுவதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம், கடன் சுமைக்குட்பட்ட மக்களுக்கான ஒத்துழைப்பு, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக தெரிவு செய்யப்பட்ட சிறிய கைத்தொழில்களுக்கான ஒத்துழைப்பு, வாகனங்களுக்கான வாடகை, மீள்குடியேற்ற செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கான கருத்திட்டம் தொடர்பான செலவினங்களை ஈடுசெய்தல், போதைவஸ்த்துக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்களை தாபித்தல் மற்றும் ஆனை அபிவிருத்தி சபையின் ஊழியர்களிற்கான ஈ எப் பீ கொடுப்பனவு மற்றும் நிலக் கண்ணி வெடி அகற்றல் செயற்பாடுகளும் | 304,965,000 | 3,182,600,000 |
| **204** | இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை மற்றும் நூலக செலவினம் மற்றும் தெஹமி திரிய (தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு) | 41,500,000 | - |
| **232** | சிறைச்சாலைகள் திணைக்களம் | எரிபொருள், சீருடை மற்றும் உணவு செலவுகள் | 126,480,000 | |
| **148** | பிராந்திய அபிவிருத்தி அமைச்சு | நிதி கற்கைகளுக்கான பயிற்சி நிலைய வசதிகளை மேம்படுத்தல் செலவு | | 17,480,000 |
| **280** | கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் | வெளிநாட்டு பிரயாண செலவினங்கள் | 1,000,000 | - |
| **149** | கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு | புலமைச் சொத்து அலுவலகத்தினை புதுப்பித்தல், றோபோ நிலையத்தினை வலுப்படுத்தல் மற்றும் பொதுக் கண்டுபிடிப்புக்கான வாய்ப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி பொலித்தீன் உற்பத்தியாளர்களினால் உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களுக்கான முதலீட்டுச் செலவில் 50 சதவீதத்தினை வழங்குதல், அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கான வசதிகளை தரமுயர்தல், சிங்கள மற்றும் முஸ்லிம் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றல், மன்னார் நகர மற்றும் சிலாபத்துறை நகர அபிவிருத்தி புனரமைப்புப் | 254,167,360 | 3,233,010,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிகளினை துரிதப்படுத்தல், உள்நாட்டு ரின் மீன் உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கான கருத்திட்டத்தினை செயற்படுத்தல், ஆள்சார் வேதனாதிகள், கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தல் கருத்திட்டம், லங்கா சதொச சில்லறை வலையமைப்பினை விரிவாக்குதல், தேவையான உட்கட்டமைப்பு மற்றும் தொழில் முயற்சி பயிற்சியினை வழங்குதல், கைத்தொழில் பேட்டைகளை தரமுயர்த்தல், பாரிய காட்சியறையினை தாபித்தல், ரோபோ உபகரணங்களுக்கான நிலையத்தினை தாபித்தல், வர்த்தக ஊக்குவிப்பு செயற்றிட்டங்கள், சிறிய ஆடைத்தொழிற்சாலைகள் மூலம் பெண்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்திற்கான ஏற்பாடு, ஆணையிரவு உப்பளத்தினை மேம்படுத்தல், கைத்தறிக் கைத்தொழிலினை உட்கட்டமைப்பு மற்றும் தொழில்முயற்சி பயிற்சிகளை வழங்குதல், லக் சதொச மற்றும் ஒசுசல அங்கீகாரம் பெற்ற விற்பனை நிலையங்களை விரிவாக்குதல் | | |
| **295** | வர்த்தக திணைக்களம் | பங்களிப்பு மற்றும் சந்தா கட்டணம், அபிவிருத்தி உதவி நடவடிக்கைகள் என்பவற்றுக்கான செலவினம் | 9,800,000 | 2,000,000 |
| **297** | கம்பனி பதிவாளர் திணைக்கள் | நிர்வாக செலவுகள் | 4,500,000 | |
| **299** | இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் | நிர்வாக செலவுகள் | 1,500,000 | |
| **300** | உணவு ஆணையாளர் திணைக்களம் | தற்பொழுதுள்ள அரசி களஞ்சியசாலைகளை புதுப்பித்தல் மற்றும் வினைத்திறன் அபிவிருத்தி செலவினம் | - | 30,200,000 |
| **150** | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | பொலிப்றோ லங்கா தனியார் கம்பனியின் செலவினம் | 1,830,000 | 17,400,000 |
| **151** | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கல் அபிவிருத்தி அமைச்சு | மீன்பிடித் துறைமுகங்கள், நங்கூறத் தளங்கள், கடலடித்தளங்கள் அபிவிருத்தி மற்றும் தரமுயர்த்தல், மட்டக்களப்பு மாவட்டத்தில் நீரியல்வள கைத்தொழில் பேட்டையினை தாபித்தல், 10 களப்புகளை சுத்திகரித்தல், கந்தர மீன் பிடி துறைமுக அபிவிருத்தி மற்றும் வெள்ளமங்கர மீன்பிடி துறைமுகமொன்றினை அபிவிருத்தி செய்தல், பால்மீன் குஞ்சு பொறிக்கும் இடம் மற்றும் சமுத்திர அலங்கார மீன் குஞ்சு பொறிக்கும் இடத்தினை உருவாக்குதல், நீரியல் ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனத்தில் பரிசோதனை வசதிகளை தரமுயர்த்தல், மயிலிட்டி துறைமுகத்தினை மீன்பிடி துறைமுகமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் குளிர் அறைகள், களஞ்சிய வசதிகளை தாபித்தல், புதிய கடற்றொழில் மற்றும் நீரியல்வளக் கொள்கையொன்றினை உருவாக்குதல், தேசிய நீரியல்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தில் பரிசோதனை வசதிகளை தரமுயர்த்தல், மானிய விலையில் மீன் வழங்குவதற்கான சலுகை விலை, 2017 ஆம் வருடம் தொடர்பான "வெவக் | 348,830,000 | 1,739,451,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சஹித்த கமக் நிகழ்ச்சித்திட்டம்'' ஒருங்கிணைந்த உள்நாட்டு மீன்பிடி கிராமங்களை தாபிப்பதற்கான நிலுவை கொடுப்பனவுகளை தீர்த்தல், மில்கோ (தனியார்) கம்பனிக்கான சலுகை விலை மற்றும் புதிய கடற்றொழில் மற்றும் நீரியல் வள கொள்கையினை உருவாக்குதல் மற்றும் நிர்வாக செலவுகள் | | |
| **290** | கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களம் | 55 அடிக்கு அதிக நீளமுடைய பல்நாள் படகுக்கொள்வனவு, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக பன்னாள் படகுகளின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும் செலவினத்தில் 50 சதவீதம்,''கடற்றொழில் கூட்டு முகாமைத்துவ திட்டம்'' கட்டம் 11 கருத்திட்டத்தினைச் செயற்படுத்தல் இலங்கை வங்கியினூடாக செயற்படுத்தப்படும் ''திரவரதிவிய'' கடன்களுக்கான வட்டி மானியம் வழங்கல் | 62,500,000 | 420,090,925 |
| **154** | கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு | மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான செலவினம், நெற் கொள்வனவு, 2017 ஆம் வருடத்துடன் தொடர்பான கருத்திட்டங்களின் நிலுவைப் பொறுப்புக்களை தீர்த்தல், மற்றும் படல்கமையில் பாற்பொருள் பதனிடல் பொறித்தொகுதியினை தாபித்தல் | 500,000,000 | 120,000,000 |
| **155** | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | திண்மக்கழிவு விடயங்களில் உள்;ராட்சி மன்றங்களுக்கான ஒத்துழைப்பு, கிராமிய பாதை வலையமைப்பினை மேம்படுத்தல், இலத்திரனியல் உள்ளூராட்சிமன்ற பிரயோக முறைமையினை அறிமுகப்படுத்தல், யாத்திரிகர் ஓய்விடங்களை தாபித்தல், வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களை வலுப்படுத்தல் மற்றும் ''அம்மாச்சி'' எண்ணக்கருவினை செயற்படுத்தல், கொழும்பு மாநகர சபைக்கு கொடுப்பனவு ஒப்பந்த நிலுவையினை செலுத்துதல், 100 உள்ளூராட்சி மன்றங்களில் முன்னரங்கு அலுவலக முறைமையினை செயற்படுத்துவதற்கான கொடுப்பனவு நிலுவையினை தீர்த்தல், மாகாண சபைகளுக்கான பங்களிப்பு, மீரிகமயில் ''செற்செவன அரசாங்க முதியோர் இல்லத்தினை புதுப்பித்தல் கிழக்கு மாகாணத்தில் வடிகாலமைப்பு முறைமையினை மேம்படுத்தல்,வடக்கு மற்றும் கிழக்கு உள்ளூராட்சி சேவைகளின் மேம்பாட்டு கருத்திட்ட மீதியினை மீளளிப்புச் செய்தல், புதிதாக நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சின் செலவினம் மற்றும் சங்கிரிலா கலப்பு அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான ஒப்பந்தக் கொடுப்பனவுகளின் நிலுவை மற்றும் ''சிலேவ் ஐலண்ட்'' கலப்பு அபிவிருத்தி கருத்திட்ட கொடுப்பனவுகள் | 41,842,000 | 2,841,953,000 |
| **312** | மேல் மாகாண சபை | பாடசாலைக் கல்வியினை அறிவு மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு மற்றும் சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகளை அதிகரித்தல் | 701,170,000 | 21,000,000 |
| **313** | மத்திய மாகாண | பாடசாலைக் கல்வியினை அறிவு | 426,000,000 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சபை | மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு | | 23,000,000 |
| **314** | தென் மாகாண சபை | பாடசாலைக் கல்வியினை அறிவு மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பும், மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவும் | 849,000,000 | 23,000,000 |
| **315** | வடமாகாண சபை | வடக்குப் பாதை இணைப்பு கருத்திட்டத்திற்கான ஏற்பாடு, யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு கருத்திட்ட கடன் காலப்பகுதியினை நீடிப்பதன் மூலம் நிதியினைப் பயன்படுத்தல், பாடசாலைக் கல்வியினை அறிவு மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு, அசையா சொத்துக்களின் முத்திரை தீர்வையினை மீளளிப்புச் செய்தல் மற்றும் கணக்கீடு செய்யப்படாத செலவினங்களை கணக்கீடு செய்தல், வடக்குப் பாதை இணைப்பு கருத்திட்டத்தின் நீதிமன்ற கொடுப்பனவினைத் தீர்த்தல், மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவுகள் | 284,000,000 | 908,010,000 |
| **316** | வடமேல் மாகாண சபை | பாடசாலைக் கல்வியினை அறிவு மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு, மற்றும் 2017 ஆம் வருடம் தொடர்பான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல் மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவுகள் | 372,000,000 | 222,000,000 |
| **317** | வடமத்திய மாகாண சபை | பாடசாலைக் கல்வியினை அறிவு மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு, மற்றும் 2017 ஆம் வருடம் தொடர்பான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல், வடக்கு பாதை இணைப்பு கருத்திட்டத்திற்கான கொடுப்பனவையும், சுகாதார சேவை பணிப்பாளர்களினதும் கொடுப்பனவும், மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவும் | 581,010,000 | 55,190,000 |
| **318** | ஊவா மாகாண சபை | பாடசாலைக் கல்வியினை அறிவு மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு, மற்றும் 2017 ஆம் வருடம் தொடர்பான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல் மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவு | 357,000,000 | 324,000,000 |
| **319** | சப்பிரகமுவ மாகாண சபை | பாடசாலைக் கல்வியினை அறிவு மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு, மற்றும் 2017 ஆம் வருடம் தொடர்பான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல், மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவு | 350,000,000 | 322,000,000 |
| **321** | கிழக்கு மாகாண சபை | பாடசாலைக் கல்வியினை அறிவு மையத்தின் அடித்தளமாக மாற்றுவதற்கான ஏற்பாடு, மற்றும் 2017 ஆம் வருடம் தொடர்பான நிலுவைக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல், மருத்துவ அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவு | 431,000,000 | 222,000,000 |
| **157** | தேசிய கலந்துரையாடல் அமைச்சு | அரச கரும மொழிக்கொள்கை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை செயற்படுத்தல், மொழி வினைத்திறன் மற்றும் மொழிபெயர்ப்புகளினை மேம்படுத்தல், தொழிற்பாட்டு குத்தகை முறைமையின்கீழ் கொள்வனவு | 46,117,000 | 250,310,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்ட வாகனத்திற்கான குத்தகை வாடகை மற்றும் வாகனம் கொள்வனவு மற்றும் நிர்வாக செலவுகள் | | |
| 158 | பொது தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் கொடுப்பனவு, இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் நிலுவைப் பொறுப்புக்கள் மற்றும் நிர்வாக செலவுகள் | 11,750,000 | 625,520,000 |
| 159 | சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக 6 கோட்டைகளின் அபிவிருத்தியினை செயற்படுத்தல், புகையிரத நிலையங்களை தரமுயர்த்துவதுடன் புவிச்சரிதவியற் மையங்களாக பிரகடனப்படுத்தல் மற்றும் சுற்றுலா நட்பு முச்சக்கர வண்டி (ருக் ருக்) நிகழ்ச்சித்திட்டம் | - | 375,000,000 |
| 203 | கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் | தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல், தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான தெஹமி திரிய மற்றும் நூல் நிலைய கொடுப்பனவுகள், தொல்பொருளியல் பெறுமானமுடைய வணக்கத் தளங்களை புதுப்பித்தல், கிறிஸ்தவ தேவாலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் | 111,900,000 | 24,850,000 |
| 160 | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | கைத்தொழில் கழிவு மேம்பாடு மற்றும் நீர் முகாமை கருத்திட்ட செலவினம், தரம் குன்றிய விவசாய நிலங்களின் புனரமைப்பு, காடழிப்பினால் ஏற்படும் மாசடைதலினை குறைப்பதற்கான நுட்பமுறை, பிரதான நீரோட்ட உயிரியல் பல்வகைத் தன்மை, விவசாய உயிரியல் பல்வகைத் தன்மை, பாதுகாப்பு முறைமை, நீர்வளங்கள் அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவினம், மொறகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க கருத்திட்டம், சுகாதார மற்றும் சுற்றாடல் கொள்கைகளுக்கான வளியின் தர மதிப்பீட்டு கருத்திட்டம். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | 45,000,000 | 901,784,000 |
| 283 | வனவளத் திணைக்களம் | கைத்தொழில் பெருந்தோட்டத்தினை தாபித்தல் மற்றும் முகாமைக்கான செலவினம் | - | 75,000,000 |
| 291 | கரையோர பாதுகாப்பு திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக ஒருங்கிணைந்த கரையோர வலைய முகாமைத்துவ செயன்முறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் கடற்கரை சுத்திகரிப்பு கருத்திட்டம். புதிதாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட இயந்திரிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பள கொடுப்பனவுகள் | 1,150,000 | 425,000,000 |
| 161 | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | | | |
| 284 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைவாக அருகிவரும் உயிரினங்கள் பாதுகாப்பு திட்டத்தினை செயற்படுத்தல் மற்றும் கூடார சவாரிக்கு ஒத்துழைக்கும் வகையில் மாதுரு ஓயா | - | 95,000,000 |

